83

காவேரி

விரோதி - புரட்டாசி SEPTEM - 1949.

4/ அணா

சிறந்த சலவை...
இந்த
OK
ஓ. கே சலவை சோப்பை
கொண்டு தான்!
தயாரிப்பவர்கள்: ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) லிமிடெட், சென்னை.

பல முக்ய நகரங்களில்
செப்டம்பர்
16உ முதல்
வெளியாகிறது
சியாமளாவின்
இன்பவல்லி
(ராஜகுமாரி - மந்திரிகுமாரன் காதல் சித்திரம்)
செவிக்கினிய கானம் · தெவிட்டாத ஹாஸ்யம் ... கண்ணைக்
கவரும் காட்சிகள் நிறைந்த உல்லாச சித்திரம்.........
நடிகர்கள்: மஹாலிங்கம் · சரோஜா · சரஸ்வதி ..
மேனகா · கிருஷ்ணன் · மதுரம் ...
சாமிநாதன் · சஹாதேவன் மற்றும் பலர்
சங்கீதம்: G. ராமநாதன் · பாட்டு: P.R. ராஜகோபால அய்யர்
ஸ்டுடியோ: ரத்னா, சேலம்
ஒளிப்பதிவு: வஸந்தராவ் ஜக்தப் · ஒலிப்பதிவு: R.G. பிள்ளை
பின்னணி சங்கீதம்:
P.A. பெரியநாயகி · P. லீலா · T.V. ரத்தினம்
ஸூபர் ரிலீஸ்
டைரக்ஷன்: நொடானி
ஸூபர் பிக்சர்ஸ் சர்க்யூட். மதராஸ் 7.



எமது முதல்தரமான
சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான்களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் படுகின்றன !

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண்டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும் !

கே. சுவாமிநாதன் & கம்பெனி,

24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.

பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.

No. 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.

தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

98043

தேவையற்ற ரோமத்தை விலக்குங்கள் !

கடந்த 50 ஆண்டுகளாக உலகப் பிரசித்திபெற்ற

பாத்ஷாஹி

வாசனைப் பவுடர்—ஸோப்—லோஷன்

நேர்த்தியான சரும சுகத்திற்கு இணையற்றது.

தென்னிந்தியாவிற்கு ஏஜண்டுகள் தேவை.

எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

ரிஜிஸ்டர்டு நெ. 529

உற்பத்தியாளர்கள் :

C. C. மஹாஜன் அண் கோ., பம்பாய்-2.

க்ளாக்ஸோ

நேர்த்தியான குழந்தை உணவு

சீரான பற்கள் ...
ஆரோக்யமான உறுப்புகள் ...
தடையற்ற வளர்ச்சி ...

தாய்மைக்கு உத்தரவாதமுள்ள, பத்திரமான இயற்கைப் பாலாகிய க்ளாக்ஸோ ஆகாரத்தை உண்டு அவன் ஆரோக்யமாக வளர்ந்து வருகிறான். —

"உணவு உட்கொள்ளத் தொடங்கும்பொழுது"

நாளடைவில் குழந்தை திட பதார்த்தங்களை உண்ண விழைகிறான். அப்பொழுது 3-தானியங்கள் சேர்த்துத் தயாரிக்கப்பட்டிருக்கும் பேரெக்ஸ் கொடுங்கள். அதுவே சிறந்த உணவாகும். கெட்டி உணவு கொடுக்க ஆரம்பிக்கும்போது, சிறிது சிறிதாகக் கொடுக்கவேண்டும். இளஞ்சூடான பாலில் சர்க்கரை கலந்து சில ஸ்பூன்கள் பேரெக்ஸ் சேர்த்துக் கொடுங்கள்-அடுப்பிலேற்றி சுடவைக்கவேண்டுவதில்லை.

பேரெக்ஸ் — குழந்தைகளுக்குகந்த முதல் கெட்டி உணவு.

இந்தியாவில் கூட்டாளிகள் :-

ஹெச். ஜே. பாஸ்டர் அண் கோ லிமிடெட்,

பம்பாய் — கல்கத்தா — சென்னை.

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்.

(இந்தியாவில் ஸ்தாபிதம்: 1933)

தலைமை ஆபீஸ்: **மதுரை**

★

சிறந்த சேவைசெய்து வருகிறது.

நெருப்பு, கப்பல், மோட்டார், விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்.

மொத்த ஆஸ்திகள் ரூ. 70,00,000

★

கிளைகள் : { பம்பாய், அகமதாபாத்,
கல்கத்தா, நாகபுரி.

★

பிரதம ஏஜண்டுகள் :

ஏ & எப். ஹார்வி லிமிடெட்,

மதுரை Etc.

உங்கள்

அச்சு வேலைகள்

புத்தகப் பதிப்புகள்

கலர் படங்கள்

லேபிள்கள்

முதலியன

நேர்த்தியான முறையில்

தயாரிக்க

காவேரி கலர் பிரஸ்

கும்பகோணம்

OFFICE OF THE ... MADRAS ... OCT 1949

மாதவிடாய் :

சகோதரிகளே ! எமது "சும்பகி—ரேசனி" என்ற மருந்தை உபயோகித்தால், மாத வெளியீட்டை ஒழுங்குபடுத்துவதுடன் எவ்வளவு நாட்பட்ட தொந்தரவாக இருப்பினும் நிவர்த்திசெய்யும். தீங்கற்றது. 100 க்கு 100 பலன் நிச்சயம்.
விலை ரூ. 5/- தபாற்செலவு ரூ. 0-14-0

கர்ப்பத்தடை :

"நம்பதி—சகா" நீங்கள் விரும்புகிறபடி கர்ப்பத்தடைக்கு உதவுகிறது. தீமை கிடையாது. 30 வருடங்களாக எல்லோராலும் உபயோகிக்கப்படுகிறது. பலர் நன்மை அடைந்திருக்கின்றனர்.

பூரண கர்ப்பத் தடைக்கு :: ரூ. 4-4-0
6 மாத காலத் தடைக்கு :: ரூ. 2-0-0
(தபாற் செலவு ரூ. 0-14-0)

வீரியம், யௌவனம் :

உடல், மனம் இரண்டிற்கும் "மதன விலாஸ் ரஸாயனம்" சிறந்த டானிக். மயக்கம், சோர்வு, நரம்புத் தளர்ச்சி, மறதி, அஜீரணம் முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து. சோர்வடைந்த மாணவர்கள், மூளை வேலையில் ஈடுபடும் கவிஞர்கள், மணவாழ்க்கை தொடங்கிய காதலர்கள் இவர்களுக்கு இந்த டானிக் ஓர் வரப் பிரஸாதம்.
விலை ரூ. 2—8—0

விரைவாதம் :

குடல் இறக்கம், யானைக்கால், கீல் வாதம், வீக்கம் வலியுடன் கூடியதாயினும், எத்தனை நாட்பட்டதாயினும் ஒரு வாரத்தில் நிச்சயம் குணமளிக்கும் எமது ஆயுர்வேத முறைப்படி தயார் செய்த "ஸம்ஸந்தி". ஓர் முறை உபயோகித்துப் பாருங்கள் !

விலை ரூ. 4-8-0 தபாற்செலவு ரூ. 0-14-0

KAVIRAJ M. KAVYATIRTHA (C. M.)
70, Cornwallis Street, CALCUTTA - 6.

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ், தலைமை ஆபீஸ்: மைலாப்பூர், மதராஸ்.

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்,
பெரியதெரு, கும்பகோணம்.

●

LIVER CURE Branch Office,
Parekh Mansion, Sandhurst Road (West),
BOMBAY 4.

ரூ. 300 இனாம்

இந்த மகாகாளி இயந்திரத் தகட்டை நீங்கள் முழு மனதுடன் உங்கள் கைவசம் வைத்திருந்தால், நீங்கள் நினைத்தவை கைகூடும். உங்கள் விரோதிகள் எவ்விதமான நிலைமையிலிருந்தாலும் உங்களுக்குப் பணிவார்கள். நீங்கள் எதைக் குறித்துத் தேடுகிறீர்களோ, அது உங்களைத் தேடி வரும். இந்தத் தகட்டைக் கைவசம் வைத்துக்கொண்டு தியானம்பண்ணும்போது, இந்த மகாகாளிதோன்றி நீங்கள் விரும்புவதை அடையும்படி செய்வாள். ஒரு யந்திரத் தகடு விலை ரூ. 1—4—0. ஒரே தடவையில் 3 ஆர்டர் செய்தால் ரூ. 3—2—0. உடனே பலன் தெரியக்கூடிய யந்திரத் தகடு ஒன்று ரூ. 3—14—0. தபாற் செலவு தனி. சக்தி இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 300 இனாம்.

THE BENGAL MESMERISM HOUSE (C. V. K.)
HOSHIARPUR.

தி யுனைடெட்
கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

கல்கத்தா

அதிகாரம் பெற்ற மூலதனம்	....	ரூ. 8,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	....	ரூ. 4,00,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	....	ரூ. 2,00,00,000
ரிஸர்வ் நிதி	....	ரூ. 45,00,000

●

டைரக்டர்கள்

G. D. பிர்லா—சேர்மன்

ஈஸ்வரி ப்ரஸாத் கோயென்கா
(வைஸ்-சேர்மன்)

ரமண்லால் ஜி. ஸரையா
(வைஸ்-சேர்மன்)

ஆநந்த சரண் லா
பைஜ்நாத் ஜலான்
கோவிந்த்லால் பங்கூர்
மதன்மோகன் R. ரூயியா
மஹாதேவ் L. தஹானுகார்

மோஹன்லால் L. ஷா
மோதிலால் தபூரியா
நவீன் சந்த்ர மபட்லால்
P. D. ஹிமத்சிங்கா
R. L. நோபனி

ஜெனரல் மானேஜர்

B. T. தாகூர்

●

இந்தியாவிலும் பர்மாவிலும் உள்ள முக்கிய நகரங்களில் 70 பிராஞ்சுகளுக்கு மேலும், உலகெங்கும் சேவை செய்யத் திறமை மிக்க ஏஜன்ஸி வசதிகளும் உள்ளன.

டிரேட் மார்க்கை
கவனியுங்கள்!



ஒவ்வொரு
வீட்டிலும்
உட்வார்ட்ஸ்
க்ரைப் வாட்டர்
இருக்கவேண்டும்

WOODWARD'S
GRIPE WATER

keeps baby well

1-WW112-111   W. WOODWARD LTD. LONDON ENGLAND

Agent:—T. T. KRISHNAMACHARI & Co.
12A. Lingha Chetty Street, — G. T. MADRAS.

மாதவிடாய்

நின்றிருந்தாலும் அல்லது வேறு எவ்வித மோசமான நிலையிலிருந்தாலும் 'ரிதுபர்த்தினி' (கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட்) தீமையற்றது. ஒரே நாளில் விடாயாவது நிச்சயம். விலை ரூ. 5-0-0. பார்வதி கர்ப்பத் தடைக்கு அபாயமில்லாத சிறந்த மருந்து. தற்காலிக கர்ப்பத்தடைக்கு ரூ. 3-0-0. நிலையான கர்ப்பத்தடைக்கு ரூ. 4-8-0.

(தபால் செலவு ரூ. 0-14-0)

விரைவாதம்

விரைவாதம், குடல்வாயு, பைலேரியா முதலியவற்றிற்கு, பி.எச். தைலம் உபயோகிப்பதால் பூர்ண குணம் கிடைக்கிறது. இவ்வியாதிகளுக்கு உடனடியான குணம் அளிக்கக் கூடிய ஒரே மருந்து. விலை ரூ. 3-0-0. உட்கொள்ளும் மருந்து ரூ. 2-0-0. (தபால் செலவு ரூ. 0-14-0)

வீரியம்

தங்கம், வெள்ளி, கஸ்தூரி, பவழம் முதலியவற்றால் தயார் செய்த விகரின் உபயோகிப்பதால் இழந்த வீரியத்தைத் திரும்பப் பெறலாம். வீரிய மிழந்து, ஞாபக சக்தியின்றி, மனச் சோர்வுள்ள வாலிபர்களுக்குப் புத்துயிரளிக்கிறது. நரம்புகளைப் பலப்படுத்தி, புதிய ரத்தத்தை அபிவிருத்தி செய்கிறது. வேண்டிய அளவு வாழ்விற்குச் சுகமளிக்கிறது. சாதாரணம் விலை ரூ. 3-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

கூஞ்சா தைலம்

வழுக்கை, மயிர் கொட்டுதல், போன்ற வியாதிகளை நிவர்த்திப்பதுடன் மயக்கத்தையும் போக்குகிறது. தலை மயிர் சம்பந்தமான எவ்வித நோயையும் கண்டிக்கவல்ல சிறந்த கேசவிருத்தி டானிக்.

ஒரு பாட்டில் ரூ. 2-0-0

தபாற் செலவு ரூ. 0-14-0 வேறு.

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

KAVIRAJ R. N. CHAKRAVARTHI

Ayurvedha Sasthri (K. M.)

24, Debendra Ghose Road, Bhowanipore
CALCUTTA, 25

Stockists:

Messrs. APPAH & CO., 286, Netaji Subhas Chandra Bose Road Madras.

பொருளடக்கம்

விரோதி மலர் 9 — புரட்டாசி இதழ் 2

பாஷைப் பிரச்னை 3

புத்தக விமர்சனம் 5

கதம்பம் 6

பாரதியாரும் பிள்ளையாரும் 8
வி. ஜி. ஸ்ரீனிவாஸன்

தேய்ந்த நிலவினிலே 11
கலைப்பித்தன்

பிரிட்டிஷ் பெண்கள் 15
லீலாகோபாலன்

நவராத்திரி அலங்காரம் 20
நா. கி. நாகராஜன்

வெளியூர்க் கடிதம் 24
சாரி

புதிர் 31
எம். பி. எஸ். பாரதி

லக்ஷியக் கனவு (தொடர் கதை) 41
கே. சுந்தரம்மாள்

கண்ணுடி 54
கே. வி. சௌந்தரராஜன்

நான் கண்ட பொருட்காட்சிகள் 57
சோம. லெ. இலக்குமணன்

பட்டண் பெருமை (தொடர் கதை) 63
கே. எம். முன்ஷி

அஞ்ஞானம் விட்டது 78
விஜயஸ்ரீ

கர்நாடக ஸங்கீதம்—தற்கால நிலையும் வருங்கால நிலையும் 85
கலாதாஸன்

அன்றும் இன்றும் 91
வேங்கடலக்ஷ்மி

குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

குழந்தைகள் குஷியாக
சவாரி செய்ய
இதோ எத்தனை சிறந்த
பெராம்புலேட்டர்கள்,
ட்ரைசிகில்கள்!



விபரங்களுக்கு :-

ராயல் ஸைக்கிள் & மோட்டார் கம்பெனி

13/14, பிராட்வே :: சென்னை 1

தி பயனீர் சைக்கிள் ஹவுஸ்

மேலக்கோபுர வீதி :: மதுரை

காவேரி

விரோதி மலர் 9	"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார்	புரட்டாசி இதழ் 2

பாஷைப் பிரச்னை

இந்தியாவில் பிரதானமாகப் பேசப்பட்டுவரும் பாஷைகள் பதின்மூன்று என்று வகுத்து, அவைகளில் தேவநாகரி எழுத்தில் எழுதப்படும் ஹிந்தி பாஷையை இந்திய யூனியனின் அரசாங்க பாஷையாக அமைக்க ஒத்துக்கொள்ளப் பட்டுவிட்டது.

தற்காலிகமாக, வருகிற பதினைந்து வருஷங்களுக்கு ஆங்கிலத்தில்தான் மத்திய யூனியன் அரசாங்க நடவடிக்கைகள் நடைபெறும். இதற்குள் ஹிந்தியைப் பண்படுத்தி அரசாங்க பாஷையாக்கக் கவர்மெண்டார் உதவுவார்கள். சிற்சில துறைகளில் அதைப் புகுத்தவும் சிபார்சு செய்வார்கள்.

மாகாணங்களிலும் (இனி இவைகள் ஸ்டேட்டுகள் என அழைக்கப்படும்) சுதேச சமஸ்தானங்களிலும் ஆங்காங்கே பேச்சில் இருந்துவரும் பாஷையை அங்கு வசிக்கும் பெருவாரியான மக்களும் அப்பிரதேச சட்ட சபையினரும் தங்கள் ஸ்டேட்டின் ராஜாங்க பாஷையாக ஆக்கிக்கொள்ள விரும்பினால் யூனியன் தலைவர் இம்மாறுதலுக்குப் பெருவாரியான மக்களின் ஆதரவு உள்ளதென்று கருதினால் இதற்கு அங்கீகாரம் அளிப்பார். முக்கிய பாஷைகள் எனக் கணக்கிடப்பட்டுள்ள பாஷைகளாவன: (1) அஸ்ஸாமீஸ் (2) வங்காளம் (3) கன்னடம் (4) குஜராத்தி (5) ஹிந்தி (6) காஷ்மீரி (7) மலையாளம் (8) மராத்தி (9) ஒரியா (10) பஞ்சாபி (11) தமிழ் (12) தெலுங்கு (13) உருது.

ஸுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட், இங்குள்ள நடவடிக்கைகள், பார்லிமெண்டில் பிரேரேபிக்கப்படும் மசோதாக்கள், திருத்தங்கள், மாகாண சட்ட சபைகளில் கொண்டுவரப்படும் சட்டங்கள், யூனியன் தலைவர், கவர்னர்கள், மன்னர் இவர்களால் பிறப்பிக்கப்படும் அவசரச் சட்டங்கள், மற்றும் ஏனைய சட்ட திட்டங்கள் எல்லாம் ஆங்கிலத்தில்தான் இருக்கவேண்டும். காலக்கிரமத்தில் இவற்றை மாற்றிக்கொள்ள மத்திய யூனியன் பார்லிமெண்டுக்கு அதிகாரம் உண்டு.

இவைதாம் மத்திய சட்டசபையில் இன்று விவாதிக்கப்படும் பாஷா பிரச்சனையின் முக்கிய ஷரத்துக்கள்.

இதனால் ஏற்படக்கூடிய மாறுதல்கள் என்ன என்று சற்று ஆராய்வோம். பன்னிரண்டு பாஷைகள் கூடிய சீக்கிரத்தில் மாகாணங்களில் அரசாங்க பாஷையாக அமைந்துவிடும். காங்கிரஸ் காரியக் கமிட்டியின் சிபார்சுப்படி கல்வித் துறையிலும் தாய் மொழியிலேயே உயர்தரக்கல்வி முதற்கொண்டு கற்பிக்க ஏற்பாடு ஆய்விடும்.

இதிலிருந்து ஒரு பிரச்னை எழுகிறது. சென்னை மாகாணத்தில் நான்கு பாஷைகள் பேசும் மக்கள் இருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு ஒரே பாஷை என விதிக்கப்பட்டால் எப்படி மற்றப் பாஷையினர் இதை ஏற்றுக்கொள்வார்கள்? ஒரே பாஷை பேசப்படும் மாகாணங்களில் அப் பாஷை அரசாங்க பாஷையாகச் சீக்கிரத்தில் அமுலுக்கு வந்துவிடும். பல பாஷைகள் பேசப்பட்டு வரும் மாகாணங்களில் இச் சீர்திருத்தம் எளிதில் அமலுக்கு வராது. இதன் கார

ணமாகவே பாஷாவாரி மாகாணப் பிரிவினைத் திட்டம் சீக்கிரத்தில் அமலுக்குக் கொண்டுவர வேண்டிவரும்.

எப்படி நீதி ஸ்தலங்களில் ஒரே பாஷை இருக்கவேண்டும் என்று தற்காலிகமாக விதித்திருக்கிறார்களோ அதேபோல் எல்லா அரசாங்களிலும் ஒரே பாஷை இருத்தல் அவசியம் என்று நமக்குத் தோன்றுகிறது. கல்வி கற்பதிலும் சில்லறை விவகாரங்களை நடத்துவதிலும் ஆங்காங்கேயுள்ள தாய்மொழியைக் கையாள்வது மிக்க நன்மை பயக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஒரே யூனியனின் கீழ் உள்ள அரசாங்கங்கள் ஒரே மொழியில் நடத்தப்படுமேயானால் அரசாங்கம் பலப்படவும் ஐக்கிய மனோபாவம் உறுதி பெறவும் ஏதுவாகும். மத்திய கவர்மெண்டார் ஓர் விஞ்ஞான ஆராய்ச்சிக் கல்லூரியைத் தெலுங்கு ஜில்லாக்களில் அமைக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அங்கே எந்தப் பாஷையில் கல்வி பயிலவேண்டும்? தெலுங்கிலா, ஹிந்தியிலா அல்லது ஆங்கிலத்திலா? ஆரம்பம் முதல் உயர்தரக் கல்லூரிப் படிப்பு முடியும்வரை தாய் மொழியிலேயே சகல படிப்பையும் கற்ற ஒரு தமிழன் இக் கல்லூரியில் சேரவிரும்பினால் அவனுக்கு எத்தகைய வசதி இருக்கும் என்று சற்று நிதானித்துப் பார்க்கவேண்டும். எல்லா நூல்களையும் ஒரே பாஷையில் பதினைந்து ஆண்டுகள் கற்ற ஒரு மாணவன் ஹிந்தி மொழியையும் சாதாரணமாகக் கற்றிருக்கலாம். ஆனால் அவனுடைய விஞ்ஞானப் படிப்பு முழுமையும் தமிழில் கற்ற பிறகு ஆராய்ச்சி செய்ய முற்படும்பொழுது ஒவ்வொரு பொருளின் பெயரையும் விஞ்ஞான ஆசிரியரின் சொற்பொழிவுகளையும் ஹிந்தியில் கிரகிக்க வேண்டுமென்றால் எவ்வளவு அவன் படிப்பு பாதிக்கப்படும், இதனால் தாமதப்படும் என்பதை ஊகித்தறிய வேண்டுகிறோம். மத இன வெறிகளை அகற்றப் பாடுபட்டுவரும் நாம் மற்றொரு வகையில் பாஷை வெறியைப் பெருக்கிக் கொண்டே போகிறோம். இந்திய மக்கள் அனைவரும் ஒன்று என்ற மனப்பான்மையை வளர்க்க வேண்டிய நாம், பாஷையின் பெயரால் பல ஜாதியினரைச் சிருஷ்டி செய்கிறோம். முன்பே தமிழன், தெலுங்கன், வங்காளி என்றெல்லாம் இல்லையா என்று கேட்கலாம். ஆம், உள. ஆனால் அவர்களுக்கென்று மாகாணங்களைப்பிரித்து அவர்கள் கல்வி கற்பதும் விவகாரங்களை நடத்துவதும் தனித்தனி பாஷைகளில் என்று வைத்துவிட்டால் ஐக்கிய மனப்பான்மை எங்கிருந்து வளரும் என்பது விளங்கவில்லை.

உயர்தரக் கல்வியும், அரசாங்கபாஷையும் ஒரே பாஷையில் தான் இந்தியாவெங்கும் இருக்கவேண்டும் என்ற நியதி வேண்டும். மத்திய அரசாங்கத்திற்கு ஒரு பாஷை, மாகாண அரசாங்கத்துக்கு ஒரு பாஷை என்பதாக அமைத்தால் முன்னேற்றம் தடைப்படும். இன்று செய்யப்படும் தீர்மானத்தினால் நாட்டில் பன்னிரண்டு பிரிவுகள் பாஷையை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்த, தெரிந்தோ தெரியாமலோ, அடிகோலுவதாக எண்ணுகிறோம்.

தாய்ப்பாஷையை வளர்க்க அதை அரசாங்க பாஷையாக ஆக்கினால் தான் வளருமா? வெள்ளையர் காலம் மறைந்த பின்னும் மாகாண அரசாங்கங்கள் அதை வளர்க்க வேறு வகையில்லையா? பழைய காலத்தில் சமஸ்கிருதம் வளரவில்லையா? எந்தப் பிரதேசத்திற்கு அது பாஷையாக இருந்தது? இந்திய ராணுவத்திற்கு எந்தப் பாஷை அவசியம்? தந்தி தபால் இலாகாவிற்கு எந்தப் பாஷை?

இவற்றையெல்லாம் சற்று ஆராய்ந்து அவசரப்படாமல் ஓர் முடிவுக்கு வந்தால் நலமாயிருக்கும். தற்காலிகமாக மொழிப் பிரச்னையை ஒத்திவைப்பது நலம். பதினைந்து வருடத்திற்குப் பின்னும் நாம் இதே நிலையில்தான் இருப்போம். மாகாணங்களில் தாய்ப்பாஷைகள் இராஜாங்க பாஷையாக ஏற்பட்டபின், ஹிந்தி ஓங்குவது எங்ஙனம்?

புத்தக விமர்சனம்

கஞ்சியிலும் இன்பம் கி.வா. ஜகந்நாதன் (அமுத நிலையம் லிமிடெட், 91 மௌண்ட் ரோடு தேனும்பேட்டை. சென்னை. விலை ரூ. 1-8-0) 'நாடோடி இலக்கியம்' எழுதிய ஸ்ரீ ஜகந்நாதன் அவர்கள் அவ்வப்போது பத்திரிகைகளில் எழுதி வெளியிட்ட நாடோடிப் பாடல்களில் சிலவற்றைப் புத்தக ரூபமாக இப்பொழுது வெளியிட்டிருக்கிறார். பல பாடல்களில் பொருள் சிறப்போ பண்பு விளக்கமோ காணப்பட வில்லையாயினும் ஆசிரியர் பாடல்களை அமைக்கும் திறமை பாராட்டப் படவேண்டியதே.

The Principal Saranathan Memorial Volume

பிரின்ஸிபால் ஸாரநாதன் நினைவு மலர்

திருச்சிராப்பள்ளி நாஷனல் காலேஜாரால் பிரசுரிக்கப்பட்டது. விலை ரூ. 10/-

உடல் பொருள் ஆவியை ஒருவர் கல்விக்காக அர்ப்பணம் செய்துள்ளார் என்றால் அவர் ஸாரநாதன்தான். பிரம்மசாரியாகவே வாழ்க்கையை நடத்திவிட்டுச் சென்ற அவருக்கு நாஷனல் காலேஜ்தான் வாரிசும் சந்தானமும். வாழ்க்கையே கலை என்ற கொள்கையைக் கடைப்பிடித்து நடத்திக் காட்டிய இப் பெருந்தகைக்கு ஞாபகச் சின்னமாக இப் புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. ஆதி முதல் ஸாரநாதன் அவ்வப்போது ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதிய கவிகள், விமர்சனங்கள், கல்வி இலக்கிய விளக்கங்கள், ரஸமான சொற் சிற்பங்கள், சுய சரிதை இவைகள் 525 பக்கங்களில் இங்கே வெளியிடப்பட்டிருக்கின்றன. அவரது வாழ்க்கை வரலாறும் அவருடன் நெருங்கிப் பழகியவர்களுடைய நினைவுரைகளும் முன்னுரையாக முதல் 50 பக்கங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 7 போட்டோ படங்களும் இருக்கின்றன. புஸ்தகத்தைப் படிப்பவர்களுக்கு ஆசிரியர் ஸாரநாதனது. நுண்ணறிவு. ஆராய்ச்சிப் புலமை, தேசபக்தி, தமிழ்த் தொண்டு, கற்பனைத் திறன், நடுநோக்கு முதலியவைகள் நன்கு விளங்குகின்றன. 62 ஆம் பக்கத்தில் நாலு வரிகள், ஸாரநாதன் தம் ஞாபகச் சின்னமாக 14-4-1919லேயே எழுதிக்கொண்டவை காணப்படுகின்றன. அமர வாழ்வை விழைபவர், புகழையும் புறக்கணித்துவிட்டு, சாவின் தன்மையைச் சோதிக்கத் துடிப்பது போன்ற ஒரு சித்திரம் நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்தப்படுகிறது. புராதன இந்தியாவிலிருந்து தப்பி வந்த வீரன் என்று தோன்றுகிறது. 'காவேரியில்' அவ்வப்போது பிரசுரமான 'ஓரிளைஞனுக்குக் கடிதம்' என்ற தலைப்பின் கீழ் இவர் எழுதியுள்ளபடி பழைய மத சாத்திரங்களைக் கற்பதுடன் நவீனக் கல்வியின் சிகரங்களில் ஏறவும் இளைஞர்களை எப்பொழுதும் தூண்டிக்கொண்டிருந்த நமது ஆசிரியருக்கு இப்புத்தகம் தக்க நினைவு மலராக அமைந்திருக்கிறது.

பியூரிடி பார்லி எட்டு மடங்கு அதிக வேலை புரியும்

பியூரிடி பார்லியில், அரிசிபார்லியின் நற்குணம் பூராவும் சத்து மிகுந்த வகையில் அடங்கியுள்ளது. ஒரு ஸ்பூன் பியூரிடி பார்லி, எட்டு ஸ்பூன் அரிசி பார்லிக்கு சமமானது. தவிர அது எப்பொழுது வாங்கினாலும் புத்தம் புதிய நிலையில் இருக்கும். ஏனெனில் அது சுகாதார முறைப்படி ஸீலிடப்பட்ட டின்களில் கிடைக்கின்றது. இருபதே நிமிஷங்களில் ருசிமிகுந்த கஞ்சி தயாரிக்கலாம். சீக்கிரமாக பார்லி வாட்டர் தயாரிப்பதற்கு, இரண்டு டீஸ்பூன் மட்டத்திற்கு பியூரிடி பார்லியை சிறிது ஜலத்துடன் மாவாக கரைத்து, இரு டம்ளர் ஜலத்துடன் ஐந்து நிமிஷம் கொதிக்கவைக்க வேண்டியதுதான். ருசிக்கு ஏற்றபடி உப்பு, சர்க்கரை அல்லது எலுமிச்சை ரஸம், சேர்த்துக்கொள்ளலாம்.

பியூரிடி பார்லி

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், தபால் பெட்டி 664, கல்கத்தா.

கதம்பம்

சாஸ்திரியாரின் எச்சரிக்கை

"இன்னும் சில வருஷங்களில் பிரிட்டனிலும், இதர இடங்களிலும் அறிவாளிகளின் எண்ணிக்கை குறைந்து விடும். அறிவாளிகளுக்குக் குழந்தைகள் உண்டாவது அரிதாகி விட்டது. முட்டாள்கள் நிறையப் பெற்றுத் தள்ளுகின்றனர். அடுத்த தலை முறையில் மக்களில் பெரும்பாலோர் மந்திகளாகவே இருப்பார்கள். அறிவாளிகள் பிரஜோற்பத்தியில் அதிக கவனம் செலுத்த வேண்டும், மேல்படிப்புப் படிக்கும் திறமைசாலிகள் சற்றே தாமதமாகவே விவாகம்செய்து கொள்ளுகிறார்கள். ஆகவே அவர்களது குடும்பம் வளருவது தடைப்படுகிறது. குழந்தைகளைக் குறைத்துக்கொள்ளவும் முயற்சிக்கின்றனர். மந்த புத்தியுள்ளவர்கள் சற்றும் யோசியாமல் பெற்றெடுப்பது முறையல்ல" இப்படியாக எடின்பர்க் சர்வகலாசாலைப் பேராசிரியரும் மனோதத்துவ நிபுணருமான ஸர்.கோட்ரி தாம்ஸன் என்பவர் ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் திருவாய் மலர்ந்துள்ளார்.

நிபுணரின் வாதத்தைச்சிலர் ஆட்சேபிக்கக் கூடும். தகப்பன் புத்திசாலியாகவும் பிள்ளை சர்வ முட்டாளாகவும் இருப்பதைச் சுட்டிக் காட்ட முடியும். முட்டாள்களான பெற்றோருக்கு அறிவுள்ளகுழந்தைகள் பிறப்பதையும் காணலாம். ஆனால் "வித்தைக் கொள்ளும் மரம்" என்பதுபோல் நிபுணரின் தத்துவத்திலும் உண்மை உள்ளது. அறிவாளிகள் குறைந்து வருகிறார்கள் என்பதை ஆட்சேபிக்க முடியாது.

மாணவர்களுக்குச் சோதனை

"மாணவர்கள் எந்த விஷயங்களில் அதிக நாட்டங்கொள்ளுகிறார்கள், எந்த வேலைக்கு லாயக்கான மனப்பண்புகள் அவர்களிடம் காணப்படுகின்றன, அவர்களது இயற்கைத் திறமை யாது? இவைகளைப் புரிந்துகொள்ள ஆசிரியர்கள் பரீட்சை செய்ய வேண்டும்; தற்போதிய பரீட்சை முறை சரியானதல்ல" இவ்வாறாகச் சென்னைசர்க்கார் 1947ஆம் வருஷத்தில் நியமித்த ஒரு கமிட்டி இப்பொழுது தன் அறிக்கையில் கூறுகின்றது.

இப்பொழுது நடைபெற்றுவரும் பரீட்சைகள் அர்த்தமற்றவை, அவசியமில்லாதவை என்பதை மாணவர் கூட்டத்தார் வெகுவாக ஆதரிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவர்களது மனப்பண்பை எவ்வாறு அறிவது? அவர்களது இயற்கைத் திறமையை எவ்வாறு கண்டு கொள்வது? அறிக்கையில் கூறப்படவில்லை. சோதனைகளை நடத்த ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட வேண்டும் என்று மட்டும் அறிக்கை கூறுகிறது. நாம் சில யோசனைகளைக் கூறுவோம்.

பள்ளிகளில் 'காப்பியடிக்கும்' மாணவர்கள் நிச்சயம் குமாஸ்தா வேலைக்கு லாயக்கு என்று தீர்மானித்து விடலாம். ஆசிரியருக்கு அடங்கி ஒடுங்கி, சொன்னதைச்செய்யும் பிள்ளைகள் 'மிலிடேரி'க்கு லாயக்கு என்றுசொல்லிவிடலாம். தனக்கும் தெரியாமல், சொன்னதையும் கேளாமல் பிடிவாதம் பிடிக்கும் பிள்ளைகளை வருங்காலத்தில் மாகாண மந்திரிகளாக ஆகக்கூடியவர்கள் என்று தீர்மானித்து விடலாம். சுத்தமாகச் சலவை செய்த ஆடைகளை அணிந்து மற்றவர்களது உடைகளைப்பற்றிப் பரிகாசம் செய்யும் மாணவர்களைச் சலவை ஆபீஸருக்குத் தகுதியானவர்கள் எனத் தீர்மானித்து விடலாம்.

மாணவர்களின் திறமையைக்கண்டறியும் வகையை ஆராய மற்றொரு கமிட்டியின் சிபார்சுகளை எதிர்பார்ப்போம்!

லிங்கப் பிரதிஷ்டை

பெரிய மனிதர்களைக் கொண்டு கலியாணம், கருமாதி நடத்தி வைக்கச் செய்வது இப்பொழுது தென்னாட்டில் ஒரு சிலரால் 'பாஷனாக' கருதப் பட்டுள்ளது. சமீபத்தில் சிலர் கவர்னர் ஜெனரல் திரு ராஜகோபாலாச்சாரியார் அவர்களைக் கொண்டு கோவில் கும்பாபிஷேகம்கூடச் செய்து தமாஷ் செய்தனர்.

தென்னாடு எதிலும் முந்திக் கொண்டு விடுவதைக் கண்டு பொறாமை கொண்ட வடநாட்டார்கள் சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். குயுக்தியான, விநோதமான யோசனை தோன்றி விட்டது. பிரசித்தி பெற்ற, சரித்திரப் புகழ்வாய்ந்த சோமநாதர் ஆலயத்தில் ஒரு லிங்கத்தை, உதவி பிரதம மந்திரி படேல் அவர்களைக் கொண்டு பிரதிஷ்டை செய்ய ஏற்பாடு நடக்கிறதாம்.

தலைவர்கள், அதிகாரிகள், பெரிய மனிதர்கள் முதலியவர்கள் இனி இன்னவின்ன விஷயங்களில் பங்கெடுத்துக் கொள்ளலாம், கூடாது என்று அரசியல் சட்டத்தில் விதிகள் ஏற்படுத்துவது அவசியம் என்று கருது

கிறார் பொதுஜனம். அப்படி யெல்லாம் வரை வகுத்து விட்டால் அனாவசியமான, சம்பந்தமில்லாத விஷயங்களில் அவர்கள் வீணாகத் தலையிட்டு நகைப்புக்கும் ஏளனத்துக்கும் ஆளாகாமலிருக்க இடமுண்டு!

நல்ல யோசனை!

எதற்கெல்லாம் இனி வரி விதிக்கலாம் என்று உண்ணாமல் உறங்காமல் எண்ணி எண்ணி, விசாரம் பிடித்து ஏங்கி நிற்கும் பிரபல நோயாளியாகிய நமது நிதி மந்திரி கோபால் ரெட்டி அவர்களுக்கு ஒரு பிரபல டாக்டர் சிகிச்சை செய்ய முன் வந்துள்ளார். அவர்தான் டாக்டர் ஸி. ஆர். ரெட்டிகாரு.

டாக்டர் அவர்களின் யோசனை என்ன தெரியுமா? ஒவ்வொரு அரசியல் பிரசங்கத்துக்கும் ரூ. 5 வரி விதிப்பது!

டாக்டரின் புது வரி யோசனையை நாம் வரவேற்கிறோம். மந்திரிகளில் பலர் மௌன விரதம் அனுஷ்டிப்பார்கள் என்பதற்காக அல்ல! அர்த்தமற்ற, அபத்த, வறண்ட பிரசங்கங்கள் குறைவு படும். வேலை வெட்டியில்லாதவர்கள் மேடை மீது ஏறத் தயங்குவார்கள். மக்களுக்கு அடிக்கடி தலைவலி ஏற்படுவது குறைவு படலாம்! மனவாடுவின் யோசனையை ஏற்க நிதி மந்திரி அவர்களுக்குத் தூதுகோஷ்டி அனுப்பச் செய்யலாம்!

அவர்களைப் பார்!

"ஜப்பானியர்களைப் பாருங்கள்!" என்று பிரதம மந்திரி நேரு அவர்கள் உபதேசிக்கின்றார். ஏன்? நான்கு வருஷங்களுக்கு முன் அணுகுண்டு வீச்சினால் அடியோடு அழிக்கப்பட்ட ஹிரோஷிமா நகரம், அடையாளமே தெரியாமல் உருக்குலைந்த அந்த நகரம், இன்று புத்துயிர் பெற்று, அழிக்கப் பட்ட சின்னங்கள் அறவே அகற்றப்பட்டு உன்னத நகரமாக ஆகி விட்டதாம். நகரைப்புனர் நிர்மாணம் செய்ய ஒவ்வொரு ஜப்பானியரும் அரும் பாடு பட்டனராம்.

ஆனால் இங்கே? நூறு வருஷத்துக்கு முன் ஒரு நகரம் எவ்வாறு இருந்ததோ அதே நிலைமையில் எவ்வித முன்னேற்றமு மின்றி, பழைய சாக்கடைகள், அதே குறுகிய தெருக்கள், சந்து பொந்துகள், மேடு பள்ளங்கள், குழிகள் மலிந்து கிடக்கும் வீதிகள், ஏன் பழைய குட்டிச் சுவர்கூட அப்படியே காட்சியளிக்கின்றன.

பழைய காலத்துச் சின்னங்களாக அவைகளைக் காப்பாற்றுவதில் கருத்துக் கொண்டுள்ள நகர சபைகள், ஜில்லா போர்டுகள், பொது மக்கள் இவர்களைப் பாராட்டாமலிருக்க முடியுமா?

பித்தர்களின் கூத்து

அரசியல் நிர்ணய சபையில் நடக்கும் கூத்தைப் பார்த்தால் சென்னைச் சட்ட சபையில் மௌனிகளாக விளங்கும் காங்கிரஸ் அங்கத்தினர்களைக் கோவிலில் வைத்துக் கும்பிடலாமெனத் தோன்றுகிறது. எண்களைப் பற்றிய அர்த்த மற்ற விவாதம். இப்பொழுது உலகமெங்கும் வழங்கும் எண்களின் அடையாளங்களாகிய 1, 2, 3 கூடாதாம். எண்கள் தேவநாகரி லிபியில் தான் இருக்க வேண்டுமாம், எழுதப் பட வேண்டுமாம். காரணம்? 1, 2, 3 அராபிய எழுத்துக்களாம், தேசிய எழுத்துக்கள் அல்லவாம்.

சட்ட சபையோடு சண்டை நிற்கவில்லை. காசியில் 1, 2, 3 என்று எண்களை இலக்கத்தில் எழுதும் வியாபாரிகளுக்குச் சமூக பகிஷ்காரம். எப்படிக் கூத்து?

ஆராய்ச்சியாளர்களும் சும்மா இல்லை. எண்களை 1, 2, 3 என்று இலக்கத்தில் எழுதுவது ஆதி முதற் கொண்டே ஹிந்துக்களுடைய பண்பு; அராபியர்கள் அதைக் கைக் கொண்டு மேல் நாடுகளிலும் அப்பழக்கத்தைப் புகுத்தினார்கள்; ஸ்பெயினிலுள்ள மூரிஷ் சர்வகலாசாலைகள் அதைப் பின்பற்றி, பிறகு உலகமெங்கும் அப்பழக்கம் வியாபித்தது; லாப்ளேஸ் (Laplace) என்ற பிரசித்தி பெற்ற தத்துவ சாஸ்திரி கூறுவது போல், "உலகத்திற்குச் சுலபமாக எழுத இலக்கத்தை உதவி செய்த இந்தியாவின் கலா சேவை மகத்தானது, பொன் எழுத்துக்களால் பொறிக்கப் பட வேண்டியது; அராபிய எண்கள் என்று சிலர் தவறாகக் கருதுகிறார்கள்; அராபிய புத்தகங்களிலேயே இந்த எண்களை இந்திய எண்கள் என்று வியக்தமாகச் சொல்லப்பட்டுள்ளது"—என்று ஆதாரம் கூறுகிறார்கள்.

உலகமெங்கும் வழங்கும் எண் எழுதும் பாஷையைப்பற்றி அறிவாளிகள் சண்டையிட்டு மண்டையை உடைத்துக்கொள்வது இந்தியாவின் தேசிய கௌரவத்துக்கே ஹானி விளைப்பதாகும். உணவில் தேசியம், உடையில் தேசியம் என்பதற்காவது சிறிது அர்த்தமுண்டு. பாஷையில் தேசியத்தையும் சற்றே ஒப்புக்கொள்ளலாம். எண்களில் தேசியம் வேண்டாம், அவசியமில்லை என்பது நிதானித்தால் விளங்கும். அரசியல் நிர்ணயசபையைக் கேலிக் கூத்து நடக்கும் சபையாகவிளங்கச் செய்வது மதியீனம்.

பாரதியாரும் — பிள்ளையாரும்

வி. ஜி. ஸ்ரீனிவாஸன்

கவிச் சக்கரவர்த்தி சுப்ரமண்ய பாரதியார் பிள்ளையாரைப் பற்றிப் பாடியிருக்கிறார். ஒன்றையொன்று தொடர்ந்து வரும் அழகான நான்கு வகைப் பாக்களை யாத்து, கவிமாலை யொன்று புனைந்தார். 'விநாயகர் நான்மணி மாலை' யென, என்றுமே வாடாது இன்புற இலங்கி, இலக்கிய மணம் வீசும் தண்டமிழ் மாலையொன்றைத் தென் தமிழ்ப் புதுவைத் திருநகரில் கோவில் கொண்டுள்ள மணக்குளத்துப் பிள்ளையாருக்குச் சூட்டியுள்ளார். சில சிறப்புகள் காண்போம்:

''நீயே சரணம், நினது அருளே சரணம் சரணம்'' என வணங்கியதோடு, ''செய்யும் தொழில் உன் தொழிலே காண்; சீர்பெற்றிட நீ அருள்வாயே'' என மனப்பூர்வ மானதொரு வேண்டுகோள் விடுக்கின்றார்.

இந்த மணக்குள விநாயகரை மனத்திடைப் பதித்தால் ''குணமதில் பலவாம்! கூறக் கேளீர்!''

''உள்செவி திறக்கும்; அகக்கண் ஒளி தரும்;
அக்கினி தோன்றும்; ஆண்மை வலியுறும்;
திக்கெலாம் வென்று ஜயக்கொடி நாட்டலாம்;
கட்செவி தன்னைக் கையில் எடுக்கலாம்;
விடத்தையும் நோவையும் வெம்பகை அதனையும்
துச்சமென் றெண்ணித் துயரிலா திங்கு
நிச்சலும் வாழ்ந்து நிலைபெற் றோங்கலாம்;
அச்சம் தீரும்; அமுதம் விளையும்;
வித்தை வளரும்; வேள்வி ஓங்கும்;
அமரத் தன்மையும் எய்தவும்,
இங்குநாம் பெறலாம்! இஃதுணர் வீரே!''

ஓம் என்னும் ஒலியில் ஒளியாய்த் திகழ்கின்ற வாரண முகத்தான் பொன்னடியைப் போற்றிப் பரவினால் என்னென்ன கை கூடும் தெரியுமா? அகச் செவி திறந்து கொடுக்கும்; 'அந்தர் நாதம்' எனப்படுகின்ற உள் ஒலி தெளிவாகக் கேட்கும். மனக் கண் மலர்ச்சியுறும். காணாத காட்சியெலாம் கண்டு களிக்கலாம். சென்ற சென்ற இடங்களிலெல்லாம் வெற்றிக்கொடியை நாட்டலாம். நச்சுப்பல் காட்டி அச்சுறுத்துகின்ற கொடும் கருநாகப் பாம்பினைக் கையிலெடுத்துக் கயிறென மதித்து விளையாடலாம். நஞ்சு, நோய், பகைமை ஆகிய எதையுமே துச்சமென நினைத்து நடக்கலாம். வீர வேதாந்தம் கிடைத்து ஆத்ம தீரராய் விளங்கலாம். கரு நரகத்தாழ்த்தும் கவலைகள் நீங்கும். அச்சம் தீரும். வாழ்விலே புத்தமுதச் சுவை காணும். எங்கும் எப்போதும் இன்ப மயமாகும். ஆன்ம வித்தை சேரும்; பிரம்ம வித்தை கூடும். அதிகம் வளர்ப்பானேன்? விளக்கமே தேவையில்லையே! சுருங்கச் சொன்னால் இம் மண் வாழ்வே மங்கலம் நிரம்பிய விண் வாழ்வாகப் பரிணமித்துவிடும்.

விநாயக வணக்கத்தின் அருமை பெருமைகளை நன்குணர்த்திய நம் பாரதியார் ''பல ச்ருதி'' சொல்வது போலச் சில தன்மைகளையும் விளக்கி மொழிந்திருக்கின்றனர். 'இருளிடர் அச்சம் தீரும்; இகபர சுகங்கள் ஓங்கும்!' என்னவெனக் காண்போம்.

''நிழலினும் வெயிலினும் நேர்ந்தநற் றுணையாய்,
தழலினும் புனலினும் அபாயம் தவிர்த்து
மண்ணிலும் காற்றிலும் வானிலும் எனக்குப்
பகைமை ஒன்றின்றிப் பயந்தவிர்த் தாள்வான்''

ஆதலால்,

''ஓமெனும் நிலையில் ஒளியாய்த் திகழ்வான்
முக்தி நிலைக்கு மூலவித் தானவன்!
ஏழையர்க் கெல்லாம் இரங்கும் பிள்ளை!
'வெள்ளாடை தரித்த விட்டுணு' என்று
செப்பிய மந்திர தேவனை
முப்பொழு தேத்திப் பணிவது முறையே!''

எனப் பணித்துப் பணிகின்றார் பாரதியார்.

'விநாயகர் என்று குறிக்கப் பட்டு, ஓர் கட்டுப்பாடுற்ற உருவத்தினுள் ஒடுங்கிய தனிப்பட்டு அமர்ந்த ஒரு தமிழ் நாட்டுப் பிள்ளையாரைக் குறித்துப் பாரதியார் பாடி விட்டதாக நினைத்து விட வேண்டாம். மணக்குள விநாயகர் என்ற அருகிநிற்கும் ஒரு பொருளைக் கணித்து, அவரைப் பணிவது என்ற ஒரு காரணத்தையும் கொண்டு, எங்கும் பரந்த ஏக வஸ்து வான பெரும் பரம் பொருளைத் தான் கவி போற்றுகிறார். சர்வான்மக் காதலும், சர்வ சமய சமரஸ மனப்பான்மையும் கொண்ட பாரதியார் குறுகிய நோக்கம் கொண்டவராக ஒருகாலும் இருக்க முடியாது. எள்ளுக்குள் எண்ணெய் போல், பாலில் படுநெய் போல், விறகில் தீயைப் போல் எதிலும் மறைந்து உறைகின்ற, ஆனால் எதிலும் கட்டுப் படாது நின்ற ஒரு பரமாத்மாவையே தான் வணங்குகின்றார் பாரதி தமது "விநாயகர் நான்மணி மாலை" தனிலே!

"சொல்லுக்கு அரியனாய், சூழ்ச்சிக்கு அரியனாய்ப்
பல்லுரு வாகிப் படர்ந்தவான் பொருளை,
உள்ளுயி ராகி உலகம் காக்கும்
சக்தியே தானும் தனிசுடர்ப் பொருளை"

மனத்தில் நினைந்து பாடுகின்றார் கவி!

அவ்வொரு தனிப் பரம் பொருள் எவ்வாறுள்ளது?

"விநாயக தேவனாய், வேலுடைக் குமரனாய்,
நாரா யணனாய், நதிச்சடை முடியனாய்,
பிறநாட் டிருப்போர் பெயர்பல கூறி
'அல்லா' 'எஹோவா' எனத்தொழு தன்புறும்
தேவருந் தானாய்: திருமகள் பாரதி
உமையெனும் தேவியர் உகந்தவான் பொருளாய்
உலகெலாம் காக்கும் ஒருவன்."

இது மட்டுமா? 'இறைவி இறைவன், இரண்டும் ஒன்றாகித் தாயாய்த் தந்தையாய், சக்தியும் சிவனுமாய் உள்ளொளியாகி உலகெலாம் திகழும் பரம்பொருள்! தன்னையே அமர்ந்திருக்கக் காண்கிறார் கவி புதுவை நகரத்து மணக்குளத்துப் பிள்ளையாரின் திரு உருவிலே, திரு நாமத்திலே!

"ஆதி மூலமே! அனைத்தையும் காக்கும்
தேவ தேவா, சிவனே! கண்ணா!
வேலா, சாத்தா, விநாயகா, மாடா,
இருளா, சூரியா, இந்துவே, சக்தியே!
வாணீ, காளீ, மாமக ளேயோ!
ஆணாய்ப் பெண்ணாய், அலியாய் உள்ளது
யாதுமாய் விளங்கும் இயற்கைத் தெய்வமே!
வேதச் சுடரே! மெய்யாம் கடவுளே!
வேண்டா தனைத்தையும் நீக்கி
வேண்டிய தனைத்தையும் அருள்வதுன்
(கடனே!"

என்பது எம்மதத்திற்கும் சம்மதமான கடவுள் வணக்கப் பாடலாக அமைகின்றதல்லவா, "விநாயகர் நான்மணி மாலை" யில் இருந்த போதிலும்!

திருமால், செவ்வேள், சிவப் புத்தேள்; வீரன், இருளன், காட்டேறி; வெறியன், முண்டி, சாமுண்டி; அலைமகள், கலைமகள், மலைமகள்—எல்லாம் சொல்மனம் கடந்த உருவருவற்ற ஒரு பொருளின் பல்வேறு நாமரூப பேதங்களே!

பயனுண்டு பக்தியினாலே என்ற தெளிவான முடிவிற்கு வந்தவர் பாரதியார். இறைவனைப் பணிந்தால் சித்தம் தெளியும். செய்கை அனைத்திலும் செம்மை பிறந்திடும். வித்தைகள் சேரும். மனத்திடை தத்துவ முண்டாகும். நெஞ்சில் சஞ்சலம் நீங்கி உறுதி விளங்கிடும். நற் பார்வைகள் தோன்றும். வீரியம் ஓங்கிடும். கல்வி வளரும். சொல்லுவதெல்லாம் மறைச் சொல்லினைப் போலப் பயனுள தாகும்!

மகா விஷ்ணுவோ, சிவபெருமானோ, சுப்ரமண்யரோ, ஐயப்பனோ, மீனாக்ஷியோ, லக்ஷ்மியோ—எதுவோ பரம்பொருளென மதித்துப் பக்தி செய்து கொண்டிருந்தால் நல்ல பலன் கிடைக்கும் என்பதுவே தமது சிறு நூலின் மூலம் பாரதியார் வற்புறுத்துவது.

"விநாயகர் நான்மணி மாலை" என்பது பக்தி பூர்வமான பாடல், பிள்ளையாருக்குச் சாற்றப்பட்ட மாலை என எண்ணி அதை அலட்சியம்செய்து படித்துப்பாராமல் இருந்து விடவேண்டாம். ஒருமுறை படித்துப் பார்த்தாலே போதுமானது. பாரதியாரின் மாண்பும், பரந்த நோக்கமும், சீரிய சிந்தையும் தெளிவாகத் தெரியும். அவரது கடமை, தொழில், நோக்கம் முதலிய யாவை என்பதும் புரியும் ஒருமுறை படித்துப்பாருங்கள், போதும்.

PRIDE OF PERFORMANCE...



உழைப்பின் மாண்பு...

ஜெட் விமானம் தயார் செய்ய, பல வருட ஆராய்ச்சியும் பொறுமையான சோதனைகளும் செய்ய வேண்டியிருந்தது. இன்று அவ் விமானத்தை ஆக்கியவர்களும் அதை ஓட்டுகிறவரும் அதன் உழைப்பைக் கண்டு பெருமைப் படுகிறார்கள். அவ்வாறே, நமது, தினசரி வாழ்க்கையிலுங்கூட சில சாதாரணப் பொருளகளின் உழைப்பின் சக்தியைக் கண்டு உவகையடைகிறோம். உதாரணமாக, எங்கள் வாட்சுத் தயாரிப்பில் நாம் பெருமைப் படுகிறோம். தேர்ந்தெடுத்த கருவிகளைக்கொண்டு உயர்ந்த வேலைப்பாடுடன் கூடியதும். மிகவும் உயர்ரகமான வகையில் ஒவ்வொரு வாட்சும் செய்யப்படுகிறது. உறுதியானதும் நெடுநாள் உழைக்கும் திறனுங் கூடிய இந்தியாவிற்கென்று உரித்தான வாட்ச் வகைகளை கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாகச் செய்து வருவதன் பயனாக **வெஸ்ட் எண்ட் வாட்ச் கம்பெனியார்** தேசியப் புகழைச் சம்பாதித்திருக்கிறார்கள்.

ஸப்ளைகள் தருவிப்பதில் சிரமம் இருந்தாலும், முடிந்த வரையில் தேவைகளை நிறைவேற்ற முயன்று வருகிறோம்.

பீஜௌ - ஆல் ஸ்போர்ட்ஸ்

வெஸ்ட் எண்ட் பேடெண்ட் எவர்ப்ரைட் ஸ்டீல் ரூ. 195/-

வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ.

பம்பாய் ::: கல்கத்தா

WEST END WATCH CO.

BOMBAY CALCUTTA

தேய்ந்த நிலவினிலே..!

கலைப்பித்தன்

கோடை வெம்மையைத் தணித்துக் கொள்ள நானும் என் தந்தையும் குற்ருலம் சென்ரும். தாயைப் பிள்ளைப் பிராயத்திலே இழந்த நான் தந்தையிட மிருந்தே தாயன்பைப் பெற்று வந்தேன். இதைச் சொல்லக் காரணமென்ன வெனில் அவர் மிக நல்ல குணமுள்ளவர். தோற்றத் திலும், நடை முறை பாவனைகளிலும் பெரு மிதமே மிகுதியாக இருந்தது. ஒரு நாள் பின்னிரவு. தூக்கம் வர வில்லை. கண்ணை மூடினுலோ ஏதோ பயங்கரக் கனவு கண் முன்னே தோன்றிக் கலக்கியது. பலகணி வழியே பார்த்தேன். பின்நிலா தன் குறை ஒளியைப் பரப்பி இருந்த போதிலும் இயற்கை வெகு மனேரம்யமாகவே இருந் தது. எதிரே வானளாவி நின்ற மலைத் தொடர் என் மனத்தில் ஒரு புதிய தைரியத் தின் அடிச் சுவட்டைப் பதிய வைத்தது.

புறப்பட்டேன் தலையில் முக்காடிட்டு. பெண்மை முக்காட்டிற்குள் மறைந்து விட்ட தாக என் கன்னி மனம் நினைத்தது. வாசல் தோட்டத்தில் நடந்து கொண்டே இருந் தேன், கொள்கையற்ற தன்மையில். எங் கோ தொலைவில் அழுகுரல் கேட்டது. ஆனல் அதில் கனிவில்லை. வறண்ட நிலையில் புரண்டு வந்த சோகக் குரல் என் இதயத்தைத் தன் பாலிழுத்தது. நெருங்கத் துணி வில்லை. ஆனல் பிறர் ரகசியத்தை அறிந்து கொள்ள ஆவல் ஏற்படும் போது பயம் பறந்து விடுகிறது. அருகில் சென் றேன். நடுத்தர வயதுள்ள பெண் ஒருத்தி குன்றின் மேல் தலையை ஊன்றித் தேய்ந்த மதியை ஒய்ந்த உள்ளத்தில் ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இளமையின் இன்பப் பொலிவு இன்னும் மறையவில்லை. ஆயினும் சோகத்தின் எல் லைகண்ட துக்க ரேகைகள் ஒன்றிரண்டு அவ ளின் பிறை நெற்றியில் படிந்திருந்தது ஏதோ ஒரு மாதிரியான அசூயையின் சாய லைத் தோற்றுவித்தது. என்னைக் கண்டதும் முதலில் சிறிது திடுக்கிட்டாள். அவள் பின் னல் தைரியத்தின் சிகரம் போன்று குன்றின் மேல் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு என் னைக் கூர்ந்து நோக்கினுள். அப் பார்வையின் ஒளியின் முன் எதிர்த்துப் பார்க்க என் கண் கள் கூசின. குனிந்து கொண்டேன் நான்.

"நீயார் அம்மா?" என்ருள் நிதானத்துடன். "ஆனந்தி" என்றேன். "இரவில் எங்கே புறப் பட்டாய்? காதலனைக் காணவா?" இக் கேள்வியை அவள் கேட்டதும் என் உள்ளம் அச்சுற்றது.

"காதலனைக் காணத்தான் புறப்பட்டுவர வேண்டுமா? இயற்கைக் காட்சியைக் கண்டு களிக்க வரக்கூடாதா?" என்றேன்.

"காதல் என்ருல் உனக்கு என்னவென்று தெரியுமா? அது ஒரு பெரிய பேய். பெண் ஆணை விரும்புகிருள். ஆண் பெண்ணை நாடு கிருன். அதுவரை காதல் இறப்பதில்லை. ஆனல் ஒன்றிலிருந்து ஒன்று மாறுபட்ட சுபா வத்தில் பிரிந்ததோ அங்கே தோன்றுவது சூன்யப் பிரதேசம் தான்"

"காதலுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை யே!" என்றேன்.

"அடீ! அறியாப் பெண்ணே, மூற்றுந் துறந்த முனிவர்களுக்கும் மோகம் விடுவ தில்லையடீ! ஆனல் அவனுக்கு, அந்தப் பேய்க்கு என்மேல் வெறுப்புத் தோன்றிய தற்குக் காரணம் என் விதியா அல்லது அள வற்ற அழகா?" என்ருள் எங்கோ பார்த் துக்கொண்டு.

"எனக்குப் புரியவில்லையே!" என்றேன்.

"புரிந்து என்ன செய்யப் போகிருய்?"

"பிறரின் அனுபவத்தைக் கேட்பதனல் ஓரளவு உண்மையை அறிந்து, கெட்டதிலிரு ந்து விலகலாம் அல்லவா?" என்றேன் பெரிய அறிவாளிபோல.

"ஆகட்டும் சொல்லுகிறேன். என் கதை யைக் கேட்டு இந்தக் குற்ருல மலை உருகா மலிருக்க வேண்டுமே!" என்று சொல்லிச் சிரித்தாள். ஆனல் அதில் ஜீவனில்லை.

"பெண்ணே, கதையைத் தொடங்குமுன் ஒரு எச்சரிக்கை. கதையின் முடிவு வேறு விதமாக யாரும் கற்பனை செய்யக்கூட அஞ் சும் விதத்தில் இருக்கும். அதற்காக நீ என்னை இதயமற்றவள் என்று எண்ணி விட மாட்டாயே! பருவ கால உணர்ச்சிகளெல் லாம் உருக்குலைந்து உள்ளத்தின் உவகை

நீரெல்லாம் வற்றி வறண்டபின் வைராக்யம் தீராப் பழியாக மாறி விடுவது இயல்புதானே'' என்றாள்.

இதற்குப் பதில் சொல்ல எனக்குப் போதிய அறிவு இல்லை. பதில் சொல்ல ஆவல் தான். ஆனால் ஏதாவது உளறிவிட்டால் கதை சொல்லுபவருக்கு விறுவிறுப்பு மாறிவிடுமென்றெண்ணிச் சும்மா இருந்தேன்.

அவள் சொன்னாள்:

“எங்கள் குடும்பம் மதுரையிலே பெயர் பெற்ற சாஸ்திரிகள் வம்சம். பணத்திற்கோ பண்பிற்கோ பிற்போக்கானதல்ல. நான் ஒருத்திதான் தந்தைக்குப் **பின்** வாரிசு. கேட்கவா வேண்டும், வளர்ப்பின் வளத்தை. பிடிவாத குணம் பிறப்புரிமையாகிவிட்டது. காலப் போக்கிலே பருவம் என்னைப் பற்றியது. பின்பனிக் காலத்தில் இலையற்றிருந்த மரங்களெல்லாம் வஸந்த



காலத்தில் துளிர் விட்டுத் தள தள வென்று பார்வைக்கு ரம்யமாகத் தெரிந்தன. பறவைகளும், வண்டுகளும் பாடி மகிழத் தக்க தருணம் கிடைத்தது. எங்கும் இன்பம் தங்கி நின்றது. என்னுள்ளத்திலும் அப்படித்தான். அப்பொழுது தான் காதல் அரும்பியது. அதைத் தீஞ்சுவைத் தண்ணீர் விட்டா வளர்த்தேன்? இல்லை, இல்லை. கசிந்த கண்

ணீரால் அல்லவா காப்பாற்றினேன்—இந்த இடத்தில் கதை நின்றது. கதறல் பின் தொடர்ந்தது. என் கற்பனைப் பறவை தன் சிறகை இழந்தது போல் தோன்றியது. நீண்ட பெருமூச்சு விட்டேன் நான். வேறு எங்ஙனம் நான் அவள் சோகத்தை மாற்ற இயலும். சிறிது நேரம் சென்றது. கதறல் நின்றது. கதை தொடர்ந்தது.

"அவன் எங்கள் வீட்டில் கார் ஓட்டி. கண்ணுக்கினியவன் கருத்திற்குகந்தவன். பிஸ்மார்க்கின் விஞ்ஞான ரீதிப்படி இரத்தமும் இரும்பும் ஆகர்ஷண சக்தியால் ஒன்றாக இணையும்போது பெண் ஆணைக் காதலிப்பதில் மிகை ஒன்றுமில்லையே! இக்காதல் சமூக சட்ட திட்டங்களுக்கு அப்பாற்பட்டதே! இதைச் சமூகத்தின் பல பிரிவுகளிலிருந்தும் கண்டிருந்தேனே தவிர, கருத்தில் கொள்ளவில்லை.

''திலீப்'' அதுதான் அவன் பெயர். கார் ஓட்டும்போது நான் சாதாரணப் பெண்ணாக இருக்கமாட்டேன். மன்மதனைக் கண்ட ரதிதான். திலீப்பிற்கும் எனக்கும் நடுவே மதச் சுவரும் அந்தஸ்து அகழியும் தடுத்துநின்ற போதிலும் அறிவின் ஆக்கம் அவன் பக்கமே கண்ணோட்டத்தைச் செலுத்திக் கொண்டிருந்தது. ஒரு நாள் தோட்டத்தில் புஷ்பங்களைக் கொய்துகொண்டிருந்தேன். அங்கே நின்றுகொண்டிருந்தான் திலீப். அவன் என்னைத் தொடச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ள எண்ணினேன். ஏதோ கடித்து விட்டதாக அலறிக் கீழேவிழுந்தேன். தொட்டானா அப்பாவி? உடனே உள்ளே ஓடி, தந்தையைக் கூட்டி வந்தான். மருந்துகள் பல உள்ளே ஏறின. ஆனால் மனமயக்கம் மாறவில்லை. இதனால் அவனிடம் உள்ள காதல் எனக்குக் குறையவில்லை. எங்ஙனம் அவனை அணையலாமென்பதிலே என் நாட்டம் சென்றது. என் அறிவு அதிலே புகுந்தது. கதிரவனின் பொன்னடிகளுக்கு அர்ப்பணமாக வேண்டிய மலரை ஒரு மனிதனுடைய, உணர்ச்சியற்ற சிலையினுடைய, தன்மையற்ற தடியனுடைய நுகர்ச்சிக்கு இரையாக்க எண்ணினேன்.

திலீப் சில நாட்கள் வரவில்லை. அவனைக் காணா விழி வீணாய்ச் சுற்றியது. இரவின் இருட்டோடு இருட்டாக நடந்து சென்றேன். காற்றோடு காற்றாகக் கலந்து சென்றேன். காதலனைக் காண! ஒரு ஓட்டைக் குடிசையில் கிழிந்த பாயில் படுத்துக் கலயத்தி லுள்ள கஞ்சியைப் பருகிக் கொண்டிருந்தான். இதைக் கண்ட என் உள்ளம் உணர்விழந்தது.

உள்ளே சென்றேன். அவன் கையை எடுத்து என் கண்களிலே ஒற்றினேன்.

''வெடுக்'' கென்று பிடுங்கிக் கொண்டான். அம்மட்டோ?

''இவ்விடத்திலிருந்து உடனே போய் விடு'' என்று உரக்கக் கூவினான். என் அணிகளைக் கழற்றி ''எடுத்துக் கொள்'' என்றேன். தூரத் தூக்கி எறிந்தான் அவன். ''ஏன்

கோபம்?" என்றேன் நான் மிகவும் சாந்தமாக. "காமப் பேயே போய் விடு" என்று உறுமினான். என் நெஞ்சம் படபடத்தது. யாருக்காகப் பெண்மையைப் புறக்கணித்து, அச்சத்தை அகற்றி, நாணத்தை ஓட்டி ஓடி வந்தேனோ அவனே என்னை இழித்துரைக்கக் கேட்ட என் காதுகள் செவிடாயின. உள்ளம் ஊனமாகியது. விக்கி விக்கி அழுதேன். (இந்த இடத்தில் அவள் குரல் தழுதழுத்தது)

"இன்னுமா, இங்கு நிற்கிறாய்? சரி; நீ இங்கேயே இரு; நான் போகிறேன். காமக் கடலைக் கடந்து கற்புக் கடலை நாடிச் செல்கிறேன்" இதைச் சொல்லி முடித்ததும் வெளியே கிளம்பினான். நானும் பின் தொடர்ந்தேன், ஒளியை நாடும் விட்டிலைப் போல! ஒளி இன்பம் பயக்கக் கூடியதா என்பதை அறியாமல் தானே எண்ணற்ற விட்டில்கள் உயிர் இழக்கின்றன! திடீரென்று வைகையை நோக்கிப் பாய்ந்தான். மரத்தில் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்தான். படகு மிதந்தது. அதில் திலீப் திரும்பிப் பயணமாகப் புறப்பட்டு விட்டான். தூரத்து மின்னலில் அவன் படகில் படுத்துச் செல்வது தெரிந்தது. அது, அவனை மட்டும் கொண்டு செல்ல வில்லை, என் கருத்தையும் அழித்துச் சென்று விட்டது. திரும்பினேன். திசை தெரிய வில்லை. ஊரெல்லாம், நாடெல்லாம், காடெல்லாம் சுற்றினேன், ஒரு நாள் அவனைக் காணலாமென்ற சபலத்தில்! என் இளமை கடந்தது—பருவ உணர்ச்சி மறைந்தது. ஆயினும் அவனைக் காணும் எண்ணம் மாத்திரம் மாற வில்லை. லட்சியப் பாதையைக் காணச் செல்லும் பிரம்மசாரியைப் போல என் வழி நெடுகியதாக இருந்தது. இன்று குறுகி விட்டது. தீராப் பழியைத் தீர்த்துக் கொண்டேன் இன்று! இதன் காரணம் திலீப் வடக்கத்திப் பிராமணத்தியை மணந்து கொண்டு ஒரு மகளையும் பெற்று விட்டான் என்ற செய்தி தான்.

இதைக்கேட்டதும் வஞ்சம் நெஞ்சைஅடைத்தது. வஞ்சம் தீர்ந்த பின் எஞ்சி நிற்பது இணையிலா அமைதி என்று கூறிக் கொண்டே கத்தியை உருவினாள். அதில் இரத்தம் தோய்ந்திருந்தது. பயத்துடன் "திலீப்பைக் கொன்று விட்டாயா?" என்றேன்.

"ஆம், காதலுக்கு இழுக்குத் தேடிய கயவனைக் குத்திக் கொன்றுவிட்டேன். காமக் கடலைக் கடக்கச் சென்றவன் லட்சியப்படி நடந்திருப்பானேயாகில் என்றும் அவனைத் தேடுவதிலே என் வாழ்நாளை இன்பமாகக் கழித்திருப்பேன். ஆனால் அவன் என்னைப் புறக்கணித்து தன் லட்சியத்தையும் கைவிட்டு மற்றொரு பெண்ணை மணந்து எனக்கே, என் பெண்மைக்கே சவக்குழி தோண்டியதினால் இன்றிரவு திலீப் இறுதி கண்டான். இதில் இரக்கப்படவேண்டிய விஷயம் ஒன்றுமில்லையே! பெண்ணே, கதையை முடித்து விட்டேன். நான் இனி இந்த உலகில் நடமாடப்போவதில்லை. போகு முன் ஒரு சூத்திரத்தைச் சொல்லி விடுகிறேன். அதை நீ பெண்ணுலகில் பரப்பிவிடு" என்றாள்.

"எதை?" என்றேன்.

"எந்த ஆணும் பெண்ணைத் தஞ்சமடைய வேண்டுமே தவிர எந்தப் பெண்ணும் முதலில் ஆணைத் தஞ்சமடைவது பெண்மைக்குத் தகுதியல்ல. பெண், ஆணை வளைய வந்து இன்பம் பெற நினைப்பது தாபம் தீரும் வரை தான் நிலைத்திருக்கும். எந்நாளும் இன்பம் நிலைத்திருக்க வேண்டுமானால் பெண் பொறுமையைக் கடைப்பிடிப்பது மிக மிக அவசியம். இவ்விதையைப்பெண்மையிலே ஊன்று. எங்கும் படரட்டும்" என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள்—நடந்தாள் பனிவரையில். அவளுருவம் மறைந்தது. தேய்ந்த நிலவினிலே அவளையே பார்த்துக்கொண்டிருந்தநான் பனிவரையில் படிந்திருந்த கால்களை மெதுவாக எடுத்துக்கொண்டு அமைதியற்ற சிந்தனையுடன் வீட்டை நோக்கி நடந்தேன். கங்குல் கலைந்தது. மூங்கில் இலைமேலே தூங்கிய பனிநீரெல்லாம் கதிரவனைக் கண்டு வெட்கி மறைந்தது. தந்தையின் அரவம் வீட்டில் தென்படவில்லை. இன்னும் விழிக்க வில்லையாக்கும் என்றெண்ணி அறையில் நுழைந்தேன். நான் கண்ட கோரக்காட்சி என் தந்தைதான் திலீப் என்பதை உணர வைத்தது கதை வினையாக முடிந்தது.

பிரிட்டிஷ் பெண்கள்

லீலா கோபாலன்

தாய் நாட்டை விட்டு ஆறுயிரம் மைல்களுக்கு அப்பால் வந்து பிற நாட்டு மக்களுடன் பழகிக்கூட நம் இந்தியப் பெண்களுக்கு முதன்மை ஸ்தானம் கொடுத்து அவர்கள் இங்கே வாழ்க்கை நடத்துவதுபற்றிப் போன மாதம் உங்களுக்குச் சொன்னேன். இப்பொழுது இங்குள்ள பிரிட்டிஷ் பெண்களைப் பற்றி உங்களுக்கும் தெரிந்துகொள்ளவேண்டுமென்று ஆவல் இருக்குமென்பதால் கொஞ்சம் விபரமாக எழுதுகிறேன்.

இங்குள்ள சாதாரண குடும்ப இங்கிலிஷ் பெண்கள் இந்தியா முதலிய பிற நாடுகளுக்கு வந்து வசிக்கும்போது நாம் அவர்களைப் பெரிய துரைசானி என்றெல்லாம் எண்ணிக்கொண்டு அவர்களுடன் பழகுவதே பெரும் பாக்கியம் என்றெல்லாம் எண்ணுவதுண்டு. பல ஆயிரக் கணக்கான இந் நாட்டுப் பெண்களுடன் பழகுகையில், அவர்களும் நம்மைப் போல்தான் படித்து, மணம் முடித்துக் கொண்டு குடும்ப வாழ்க்கை நடத்தி,

கணவனுடன் சுக துக்கங்களைச் சரிபங்காக அனுபவிக்கிறார்கள் என்று நாம் சுலபமாக அறியலாம். முதலில் குழந்தைப் பருவம் முதல் பெண்களின் வாழ்க்கையைக் கிரமமாகச் சொல்லி வருகிறேன்.

நம் ஊரில் அநேகம் பேர் யாராவது ஒருவருக்குப் பெண் அடுத்தடுத்து இரண்டு மூன்று பிறந்துவிட்டால் "பெண்ணா" என்று அலுத்துக் கொள்வார்கள். சில பாட்டிகள் "போயும் வந்தும் பெண் ஜன்மம்தானா எடுக்க வேண்டும்" என்று அழுத்திச் சொல்வதுண்டு. இந்த நவநாகரிகம் முற்றிக் கிடக்கும் நாளில் பெண்ணுக்கும் படித்து உத்யோகம் பார்க்கவும், தன் இஷ்டப்படி பிடித்த ஆண் மகனைக் கல்யாணம் செய்து கொள்ளவும், பின் பிடிக்கா விட்டால் கோர்ட்டில் வழக்காடி விவாக ரத்துச் செய்யவும் எல்லாவற்றிற்குமேல் சொத்திலே பங்கு கேட்கவும் வருவதற்குச் சகல உரிமைகளும் கொடுக்கப்பட்டிருப்பதை மேற் சொன்ன பாட்டிகள் ஆமோதிக்க முன் வருவதே கிடையாது. இங்கு ஆண் பெண் என்கிற பேதம் கிடையாது. பிறக்கும் எந்தக் குழந்தைக்கும் தாய் தகப்பனின் அன்பும் செல்வமும் உண்டு. பெண் என்றால் ஒரு அலக்ஷிய பாவமும் ஆண் என்றால் ஒரு தனி மரியாதையும் இங்கே கிடையாது. இரு பாலாருக்கும் உத்யோகம், சம்பள விகிதம், வருமான வரி ஆகிய அனைத்திலும் சம உரிமை தான். இதைப் பற்றி எழுதுகையில் சமீபத்தில் இங்கு முதல் முதலாகப் பெண்கள் போராடிச் சிறிய கிராமங்களைத் தங்கள் தலைமையின் கீழே கொண்டு வந்ததுபற்றி என்னால் குறிப்பிடாமல் இருக்க முடிய வில்லை.

குழந்தைப் பருவம் கடந்து கன்னிப் பருவம்வரை தாய்மார்கள் தங்கள் பெண்களை நல்ல கவனத்துடன் தான் வளர்ப்பார்கள். நம் பெண்கள் எவ்வாறு தங்கள் பெண் குழந்தைகளைக் கணவன் கையில் ஒப்புவிக்கும்வரை கண்டித்து வளர்ப்பார்களோ அவ்வாறே தான் இங்கும் நடக்கிறது. இந்த நாட்டுப் பெண்களுடன் சகஜமாகப் பழகாதவர்களாய், சில மட்ட ரகமான கதைகளையும் படங்களையும் பார்த்துவிட்டு நம் நாட்டில் அநேகர் பல வித கீழ்த்தரமான எண்ணங்களைக் கொண்டு இருக்கிறார்கள். "இங்கிலிஷ்காரி என்றால் எவ்வளவு தடவை வேண்டு மென்றாலும் மணம் முடிக்கலாம், யாருடன் வேண்டுமானாலும் போகலாம்" என்றெல்லாம் பலவித அபிப்பிராயங்கள் நம்மவர்களிடம் நிலவுவது எனக்குத் தெரியும். ஆனால் இங்கும் நல்ல குடும்பங்களில் அசம்பாவிதம் ஒன்றும் நடக்காமல் பெண்களை மணமுடித்து வைப்பதை நாங்கள் எவ்வளவோ காண்கிறோம். ஒரே கணவனுடன் இல் வாழ்க்கை நடத்தும் மாதுக்கு இங்கு எவ்வளவு கௌரவம் கொடுக்கப் படுகிறது தெரியுமா?

சுமார் 18 வயது வரும் வரை இப் பெண்கள் உதட்டுச் சாயம் நகச்சாயம் முதலியவைகள் உபயோகிக்க அனுமதிக்கப்படுவதில்லை. பிற ஆண்களுடன் சகஜமாகப் பேசி வந்தால்கூட அவர்களும் வெளியில் செல்லவும் சாப்பாடு, நடனம் முதலியவைகளுக்குச் செல்லவும் தாய் தந்தையராவது தகுந்த பாதுகாப்பாளராவது அனுமதி கொடுத்து, அந்த ஆண் மகனும் சரியென்று தோன்றினால் தான் தாராளமாகச் செய்யலாம். இங்கே பெண்கள் மணமுடிக்கும் உரிய வயது 21-தான். அதற்குள் மணம் செய்து கொள்ள இஷ்டப் பட்டால் தாய் தந்தையர் அனுமதி கொடுத்துக் கோர்ட்டில் பதிந்துதான் செய்ய முடியும். 21 வயதுக்குப் பின் மணமகனைப் பெண்ணுக்குப் பிடித்து, தாய் தந்தையர்க்குப் பிடித்தமில்லாவிட்டால், அவளுக்கு அவள் இஷ்டப்படி செய்ய முடியும். ஆனால் அதனால் வரும் சுகதுக்கங்களையும் லாப நஷ்டங்களையும் எந்த இக்கட்டிலும் அவளேதான் எதிர்த்து நிற்கவேண்டும்.

சாதாரணமாக மணமுடிக்கும் முன் கணவனாக வரித்த ஆண்மகனுடன் குறைந்தது ஒரு வருஷ காலமாவது பழகி அவன் பழக்க வழக்கங்களையும் குற்றங் குறைகளையும் கண்டு சம்மதித்துத்தான் பிறகு ரிஜிஸ்டர் செய்து கொள்வார்கள். ரிஜிஸ்டர் செய்து கொள்ளுமுன் அவர்கள் கல்யாணம் செய்து கொள்ளக்கூடும் என்பதற்கு "எங்கேஜிடு" என்று சொல்வது வழக்கம். தாய் தந்தையர் பார்த்து நிச்சயம் செய்து அனுமதிக்காத மணங்கள் இங்கும் வெகு குறைவு தான். தங்கள் குடும்பத்திற்குச் சரியான அந்தஸ்து உள்ள பிள்ளைகளைப் பார்த்துத்

தான் தாய் தந்தையரும் பழகுவதற்கு அனுமதிப்பர். ஆனால் கல்யாணம் என்று ரிஜிஸ்டர் செய்யுமுன் கடைசி வினாடி வரை மணமகனைப் பிடிக்காவிட்டால் ரத்துச் செய்ய உரிமை உண்டு. கல்யாணம் செய்து முடித்த பின்பும் சந்தோஷ வாழ்க்கை நடத்த முடியாவிட்டால் தக்க ருஜுக்களுடன் விவாக ரத்து அனுமதிக்கப்படுகிறது. ஆனால் சாக்ஷிகள் ஏதும் சரியாக இல்லை என்றால் அனுமதி கிடைக்காது.

இங்கிலாந்தில் பொதுவாகவே வாழ்க்கைச் செலவு எல்லா இடங்களையும் விட அதிகம் என்று தெரிந்த விஷயம் தான். இங்கு ஆண் பெண் இருபாலாருக்கும் சம்பள விகிதம் அதிகமில்லை. ஆகையால் சாதாரணமாகக் குடும்ப வாழ்க்கையைச் சந்தோஷமாக நடத்த ஆண் பெண் இருபாலாரும் உத்யோகம் செய்வதுதான் அதிகம் வழக்கத்தில் இருக்கிறது. ஆண் மக்களைப்போலவே காலையில் உண்டு உடுத்தி, ஆபீஸ் செல்லும் பெண்கள் தொகை மிக அதிகம். சாயங்காலம் வீட்டுக்குத் திரும்பி, களைப்புடன் இருந்தால் கூட, பிறகு தம் வீட்டு வேலைகளைக் கவனித்து இராச்சாப்பாட்டையும் தயாரிப்பார்கள். ஆனால் கணவனும் தன் பூர்ண ஒத்துழைப்பைக் கொடுத்து வீட்டு வேலைகளையும் சந்தோஷத்துடன் செய்ய முன் வருவான். நான் இவர்களைப்பற்றிக் குறிப்பிடுகையில் நம் ஆண் மக்களும் உங்களுக்கு உதவி புரிவார்களா என்று நீங்கள் கேட்கத் தயாராகலாம். நான் முன்பே கூறியபடி இங்கு நம் பெண்கள் வேலைக்குப் போகாவிடில்கூட அதிகம் வேலை உண்டு. மேலும் நம் புருஷர்களை உதவிக்குக் கூப்பிட்டால் அவர்கள் செய்து பழக்கம் இல்லாததால் முன்வரவேமாட்டார்கள். அப்படி யாரும் செய்யவேண்டுமென்று வற்புறுத்தினால்கூட, "இந்திய ஆண் மக்களுக்கு வீட்டு வேலை செய்யத் தெரியாது, பெண்களுக்குத்தான் வழக்கம்" என்று பெருமையோடு இந்தியன் என்று மார் தட்டுவார்கள். அதுவும் ஒருவிதம் வாஸ்தவம்தானே, சகஜமாக அவர்களே வேலை செய்ய ஆரம்பித்தால் நாம் அவர்களை அடுக்களைக்கு வராமல் தடுத்து, "பாவம்! நாம்தான் பெண் ஜன்

சபையில் பாஞ்சாலியை வஸ்திராபஹரணம் செய்து அவமானிக்கிறார்கள் கௌரவமற்ற கவுரவர்கள். கண்ணன் கவலையுடன் மானசம்ரக்ஷணம் செய்கிறான், ஆயினும் அரைகுறைதான். மார்பை மறைத்து மானம் காத்தது பாஞ்சாலியின் இருண்டு அடர்ந்து, படர்ந்த நீண்ட தலை மயிர்தான். என்னே கூந்தலின் மகிமை!

அத்தகைய கூந்தல் வளர்ச்சிக்கு ரூபா டானிக் ஹேர் ஆயிலையே உபயோகியுங்கள்.

ரூபா டானிக் ஹேர் ஆயில் பலவிதமான பச்சிலை மூலிகைகளினாலும் புஷ்பங்களினாலும் பண்டைக்கால ஆயுர்வேத சாஸ்திரிய முறைப்படி கூந்தல் வளர்ச்சிக்கென்றே தயாரிக்கப்பட்டது. கலப்படமற்றது.

இதுவும் பிரபல (EYETEX) ஐடெக்ஸ் கண்மை, (BINDHI) பிந்தி குங்கும் சாந்து முதலியவற்றினால் பிரக்யாதிபெற்ற அரவிந்த் லாபரடரீஸாரால் தயாரிக்கப்பட்டது.

எல்லா ஊர்களிலும் எல்லா
ஷாப்புகளிலும் கிடைக்கும்

ROOPA Tonic HAIR OIL

விநியோகிப்பவர்கள் :

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

திருவல்லிக்கேணி - மதராஸ்

மம் வேலை செய்கிறோம். அவர்களுக்கு என்ன" என்று நாமும் கொஞ்சம் பெருமைப் படுத்துவோம்.

இந் நாட்டுப் பெண்கள் நாகரிகமாக உடுத்தி, சாயங்கால வேளைகளில் உல்லாசமாக விருந்துகளுக்கோ நடனங்களுக்கோ செல்வதைத் தவிர, குடும்பம் நடத்துவதில் ஆவல் உள்ளவர்கள் அல்ல என்று நம்மவர்களிடம் ஓர் ஆழ்ந்த எண்ணம் உண்டு. ஆனால் இங்குள்ளவர்களில் பெரும்பாலோர் குடும்பம் நடத்துவதிலும் வீட்டை அழகுறச் செய்து குழந்தைகளை வளர்ப்பதிலும் ஆவல் அதிகம் காட்டுவதுதான் அதிகமாகக் காணப்படுகிறது. சமீபத்தில் குடும்பப் பெண்களுக்கென்று ஒரு போட்டி நடத்தப்பட்டது. அதில் எந்த ஒரு பெண் மிகவும் சிக்கனமாகவும் போதிய சௌகரியத்துடனும் செலவு செய்து வாரத்திற்கு 2 அல்லது 3 பவுன்கள் மீதியும் வைப்பதில் கெட்டிக்காரியோ, அவளுக்கு உரிய பரிசு கொடுக்கப் பட்டது. இந்தப் போட்டியில் ஆயிரக் கணக்கான பெண்கள் கலந்து கொண்டார்களாம். பரிசளிப்பவர் முடிவுக்கு வருவதற்கு மிகவும் சிரமப்பட்டுப் போனாராம். ஏனென்றால் ஒவ்வொரு பெண்ணும் மற்றவர்களை விடக் கெட்டிக்காரத்தனமாக வாழ்க்கை நடத்துகிறார்கள். இதெல்லாம் உங்களுக்குக் கேட்கப் புதுமையாக இருக்கிறதா, அல்லது நம் நாட்டிலும் போட்டி வைத்தால் கலந்து கொள்ளலாமா என்று யோசிக்கிறீர்களா?

"கூட்டம் கூடி வாசலில் வம்பு பேச மாட்டார், தூங்கிச் சோம்பலாகி வீண் பொழுது போக்கமாட்டார்" என்று பாரதியார் நம் இந்தியப் பெண்களைப் பற்றி எழுதி இருக்கிறார். ஆனால் நம் பெண்களில் அநேகர் இவ்விதமாக இல்லாவிட்டாலும், இந்த நாட்டுப் பெண்மணிகள் ஒவ்வொருவருக்கும் இது பொருந்தும். நான் இந்நாட்டுக்கு வந்த புதிதில் தெருவில் கனவேகமாக நடந்து செல்லும் பல பெண்களையும் பார்த்துவிட்டு, "இவர்களுக்கு என்ன அவசர ஜோலி இருக்கும். ஏதோ என்ஜின் மாதிரி கடைக்குச் செல்வதும், கணக்காக ஒருவித வம்புமின்றி, தம் வழியே டக், டக் என்று நடக்கிறார்களே" என்று ஆச்சரியப்படுவேன். எனக்கும் குடும்ப மேற்பட்டு நானும் பலவித அலுவல்களை மணிக்கணக்காகச் செய்ய வேண்டி இருக்கும் போது தான் நாமும் ஒவ்வொரு வேலையையும் மணிக் கணக்கில் அளந்து சற்றுக்கூட உட்காராமல் பார்க்கவேண்டும் என்று தெரிந்துகொண்டேன்.

இங்குள்ள பெண் மணிகள் எல்லா விஷயங்களிலும் மிகவும் கவனமாகத் தான் இருப்பார்கள். அவர்கள் வேலைகளை ஒவ்வொரு நாள் ஒவ்வொன்றாகப் பிரித்துச் செய்யும்படி ஒழுங்கு செய்து கொள்வார்கள். ஒரு நாள் வீடு சுத்தம் செய்யவும், ஒரு நாள் துணிகள் துவைக்கவும், ஒரு நாள் இஸ்திரி செய்யவும், ஒரு நாள் கடைக்குச் செல்லவும் ஒரு நாள் விளையாட்டாகப் பொழுது போக்கவும் ஏற்பாடு செய்வார்கள். சனி ஞாயிறு தினங்களில் இது கோடைக் காலமாக இருப்பதால் தங்கள் குடும்பத்திற்கு வேண்டிய சாப்பாடு முதலியவைகளைத் தயாரித்துக்கொண்டு அருகில் உள்ள தமாஷான இடங்களுக்கு செல்ல ஏற்பாடுசெய்வார்கள். வெள்ளிக்கிழமை அன்று சாயங்காலம் தெருவைப்பார்த்தால் எண்ணற்ற மக்கள் மோட்டார்களிலோ, பஸ் ரயில்களிலோ அல்லது சைகில்களிலோ கிளம்பி விடுவார்கள். சில திடமுள்ளவர்கள் நடையில்கூடப் பிரயாணத்திற்குக்கிளம்புவார்கள். வாழ்க்கை முழுவதும் சம்பாதித்து, கஞ்சத்தனமாக வாழ்ந்து, பணம் சேர்ப்பது மட்டும் குறியில்லாமல் செலவு செய்து, சந்தோஷமாக வாழ்வதற்குத் தான் என்று இவர்களைக் கண்டு தெரிந்து கொள்ளலாம். வேலை எவ்வளவு இருந்தாலும் ஓய்வு எடுத்துக்கொள்வது முக்யம் என்ற முடிவு கட்டி ஓய்வு மத்தியில் வேலையைப்பற்றி எண்ணாமல் சந்தோஷமாக இருக்கவும் வேண்டும் என்று நினைப்பார்கள்.

சமையல், சங்கீதம், தையல், சித்திரம், தோட்ட வேலை இவைகளில் எல்லாம் இவர்களுக்கு ஆர்வம் அதிகம். அவரவர் தங்கள் சக்திக்குத் தகுந்தவாறு தம் பொழுதை மிகவும் உபயோகமாகக் கழிப்பதில் மிகவும் கவனம் செலுத்துவார்கள். காலை 6 மணிக்கு எழுந்தால் ஒவ்வொரு மணி நேரமும் சரியான வழி

யில் கழிகிறதா என்று கவனித்து, சற்று நேரம்கூட ஒழிவில்லாமல் இயந்திரம் போல் உழைக்கும் இப் பெண்மணிகளைக் கண்டால் நம் நாட்டு மூட நம்பிக்கை கொண்ட, படித்தும் மமதை உள்ள, ஆயிரக்கணக்கான நவநாகரிக நாரீமணிகள் "எங்களுக்கு படிப்பில் பொழுதைக் கழித்து வழக்கமாதலால் வீட்டு வேலை செய்யத் தெரியாது" என்று பெருமையுடன் சொல்லவே மாட்டார்கள்.

கீழ்நாட்டுப் பெண்களை எவ்வளவு மரியாதை கொடுத்து இப் பெண்கள் நடத்துகிறார்கள் என்று முன்பே நான் கூறி இருந்தேன் அல்லவா? இந்திய நாகரிகத்திற்கும் வர வர இந்நாட்டிலும் சரி, இதரமேல் நாடுகளிலும் சரி, எவ்வளவு மதிப்பு உண்டாகி இருக்கிறது என்பதற்குஅறிகுறி இப்பொழுது சில மிகவும் நாகரிமான உடை நிபுணர்கள் மேல் நாட்டு அணிகளில் புடவை போன்ற மோஸ்தர்கள் தயாரித்து இருப்பதுதான். ஆனால் மேல் நாட்டு உடைகளுக்கு ஏற்ப, முன்புறம் புடவை கொசுவம் போன்ற மடிப்புகள் தோன்ற உடையாகத் தைக்கப்பட்டிருக்கின்றன. உடையின் மேல் பாகம் ரவிக்கை போன்று தயாரித்து, கைப்புறங்களில் சோழிமாதிரியில் கையினால் பூச்சித்திர வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதில் தனியாகவோ ஆடையுடன் சேர்ந்தோ இடது அல்லது வலது தோள் மேல் மேலாக்குத் தினுசில் துணி தொங்கும்படி அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வித உடை, மேல் நாட்டுப் பாவாடைகள் போல் குட்டையாக இல்லாமல் பாதம் வரை தொங்குவதால் பார்வைக்குப் புடவை அணிந்திருப்பதைப் போலவே தோன்றுகிறது. மேபேர் என்ற பெரிய சீமாட்டிகளின் சிங்கார நிலையங்களில் இப்புது மோஸ்தர் உடை வெகு பரபரப்பை உண்டுபண்ணி இருக்கிறது என்றும், ஒவ்வொரு உடைக்கும் 60 பவுன் அல்லது 70 பவுன் செலவிட்டு வாங்குகிறார்கள் என்றும் தெரிகிறது.

இந்தியர்களின் காய்கறிச் சாப்பாட்டில்கூட இந்நாட்டு மக்களுக்குப் பிரியம் அதிகம். சமீபத்தில் ஒரு ஆங்கிலமாது காய்கறி வகை சமைக்கவும் சாம்பார் செய்யக் கற்றுக் கொடுக்கும்படியும் கேட்க ஆரம்பித்தாள். "உங்களுக்கு நிஜமாகவே எங்கள் சாப்பாட்டில் விருப்பமா" என்று கேட்டதற்கு, "தேங்காயைப் பூமாதிரி துருவிப் போட்டு, காய்கறியுடன் உங்கள் தாய்நாட்டில் எங்களுக்குக் கொடுத்தது எங்களுக்கும் இங்கிலாந்தில் தேங்காய் மட்டும் கிடைக்கவில்லையே என்று மிகவும் வருத்தமாக இருக்கிறது" என்று கூறினார். இந்தியச் சரக்குகள் விற்கும் கடைகளில் இந்தியப் பெண்கள் மட்டுமல்லாமல் பெரும்பாலான ஆங்கில மாதர்கள்கூடப் புளி, பருப்பு வகைகள் சாம்பார் கறிப் பொடி இவைகள் வாங்குவதற்கு வந்து கூட்டம் கூடிவிடுவார்கள்.

பலவிதமான மக்களுடன் பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருப்பதாலும் அவர்களைப் பற்றி அறிய மிகவும் வசதியாக இருப்பதாலும் மிகவும் சந்தோஷம் தான். ஏழை பணக்காரர் என்கிற வித்யாசமில்லை. (நம் நாட்டில் இருந்து சமீபத்தில் இங்கு வந்த ஒரு நண்பர் தற்போது மனிதரின் அந்தஸ்து அவரவர் வைத்துக்கொண்டிருக்கிற கார் என்ன மாடல் என்று பார்த்து மதிப்பிடப்படுகிறது என்று கூறினர். சின்னகார் வைத்து இருப்பவருக்குக்கொஞ்சம் கௌரவமும் பெரியகார் வைத்திருந்தால் நல்ல மரியாதையும் கொடுக்கப்படுமாம். கார் இல்லாதவர் கதி என்ன என்று தெரியவில்லை. இது நிஜமோ என்னவோ கடவுளுக்குத்தான் தெரியும்) இங்கு ஜாதிமத பேதம் கிடையாது. எந்நாட்டு மக்களும் சகோதரர்தான். வீட்டு வேலை செய்தால் கௌரவம் குறைந்து போகாது. மோட்டார் வாகனம் ஏறினாலும் ஏறலாம், ஆகாயத்தில் பிரயாணம் செய்யலாம். ஆபீஸில் பேனா பிடித்தோ டைப் அடித்தோ வேலை பார்க்கலாம். ஆண்களுக்குச் சரி சமானமாகப் போட்டிகளிலும் விளையாட்டுகளிலும் கலந்து கொள்ளலாம். ஆனால் வீட்டுக்கு வந்தால் வீட்டை ஒழுங்காக வைக்கவும் சமையல் முதலிய செய்து குடும்ப நிர்வாகம் தெரியாமலும் இருக்கக் கூடாது. இந்தப் பழக்கம் நம்மவர்களுக்கு வந்தால் எவ்வளவு சாந்தி ஏற்படும். மேல்நாட்டு நாகரிகத்தில் பித்துக்கொண்டவர் அவர்கள் குணாதிசயங்களையும் பழக்க வழக்கங்களையும் மேற்கொண்டால் எவ்வளவு நன்மை ஏற்படும்.

நவராத்திரி வந்துவிட்டது. பெட்டிக்குள் கிடந்து புழுவரித்துப் போகும் பட்டுப் புடவைகளுக்கும், நகைகளுக்கும் ஒரு பத்து நாளாவது விமோசனம்கிட்டும். பராசக்தியின் பண்டிகை பெண்டிர்க்கு அழகுப் போட்டி விழாவாகவும் விளங்குகிறது. "யாரே அழகுக்கு அழகு செய்வார்?" என்று கூறுவதுண்டு. ஆனால் எப்படிப்பட்ட அழகியும் தன்னைச் செயற்கை முறையில் அழகு செய்து கொள்ளவே விரும்புகிறாள். மாதரை அழகு செய்யும் பணியில் ரசாயனம் பெரிதும் பயன்படுகிறது. ஆகையால் உலகம் பொலிவுற விளங்க ரசாயன அறிஞரும் ஒரு காரணமாவர்.

பல்வகைச் செயற்கைப் பொருள்களின் உதவியால் தம்மை அலங்கரித்துக்கொள்வது தற்காலப் பெண்கள் செய்யும் குற்றமாகச் சொல்லப்படுகிறது. ஆனால் பெண்ணினம் பழங்காலத்திலிருந்தே இவ்வாறு செய்து வந்துள்ளது என்பதை நாம் அறிய வேண்டும். சுமார் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன் எகிப்தில் வாழ்ந்த பெண்கள் பலவகையான வாசனைப் பொருள்களைப் பயன்படுத்தினர் என்பதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. எகிப்திய பிரமிட்டுகளில் துதாங்கமன் (Tutankhamen) என்னும் மன்னனது கல்லறையைத் திறந்தபோது 3500 ஆண்டுகளுக்குமுன் பல கலங்களில் வைக்கப்பட்ட வாசனைப் பொருள்கள் மனதை மயக்கும் நறுமணங்கொண்டு விளங்கினவாம். அதற்குப் பின் அரேபியாவும், நம்நாட்டையொத்த கீழ்நாடுகளும் வாசனைத் திரவியங்களுக்குப் பேர்போன இடங்களாய் விளங்கின.

தமிழ்நாட்டு மங்கையரும் பழைய காலத்தில் அலங்காரப் பொருள்களைப் பயன்படுத்தினர் என்பது பல தமிழ் நூல்களிலிருந்து தெளிவாகிறது. கை விரல்களை மருதாணியால் அழகு படுத்தும் வழக்கமும் கண்ணுக்கு மை தீட்டும் வழக்கமும் இன்றும் இருந்து வருகின்றன. பழந் தமிழ் மங்கை செம்பஞ்சுக் குழம்பைக் கைகால்களிற் பூசித் தன்னை அழகு படுத்திக் கொண்டாள். ஆகையால் மேனாட்டாரிடமிருந்து நம் நாட்டு மாதர் செயற்கையால் அழகு செய்துகொள்ளும் வழக்கத்தைக் கற்கவில்லை.

தற்காலத்தில் அலங்காரப் பொருள்களிலெல்லாம் மிக அதிகமாக வழங்குவது முகப் பவுடர் (Face Powder) தான். தம் சகோதரிகளிடமிருந்து தற்கால இளைஞரும் இவ்வழக்கத்தைக் கற்றுவிட்டனர். பகல் வேஷம் போட்டதுபோல் ஒரேயடியாய் முகத்தில் பவுடரைப் பூசிக்கொண்டு செல்லுதல் அலங்காரமாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் தேவையான அளவு மட்டும் இதைப் பயன்படுத்துவதால் முகத்திலுள்ள குழிகள், சுருக்கங்கள், வடுக்கள் முதலியன மறைந்து, தோற்றமும் ஓரளவு அழகு பெறுகிறது. டால்கம் பவுடர் (Talcum Powder) வகைகள் வெப்ப நாடுகளில் உடலில் வெளியாகும் வேர்வையை உட்கொண்டு தோலுக்கு இதமளித்து அசுத்தங்களைப் போக்கவும் உதவுகின்றன. தற்காலப் பவுடர்களில் தோலுக்குத் தீங்கு விளைக்கும் பொருளெதுவும் இல்லை. ஆஸ்மோ கயோலின் (Osmo Kaolin) நாக ஆக்ஸைட் (Zinc Oxide) மாவு, மக்னீஷிய ஸ்டியரேட்டு (Magnesium Sterate) முதலிய பொருள்கள் மிக நன்றாக அரைக்கப்பட்டு இதில் சேர்க்கப்படுகின்றன. பவுடரிலுள்ள 'டால்க்' என்னும் கனியத்தூள் தோலுக்கு வழவழப்பையும், மென்மையையும் தருகிறது. இவற்றுடன் வாசனைப் பொருளொன்றும் சேர்க்கப் பட்டுப் பவுடர் நறுமணமுள்ளதாகச் செய்யப் படுகிறது. இப் பொருள் இலேசான மணங் கொண்டு நெடு நேரம் நீடித்திருப்பதாக இருக்க வேண்டும். இத்தகைய பொருள்களிற் பல ரசாயன ஆய்வுகளத்திற் தோன்றி அணி செய்யும் தொழிலில் வழங்குகின்றன.

பவுடருக்கு அடுத்தாற் போல் அதிகமாக வழங்கும் அலங்காரப் பொருள் கிரீம் (cream) எனப்படும் பசை. இது தோலில்

வெடிப்புகள் ஏற்படாது பாதுகாத்துச் சருமத்தை மென்மையாக்கி அழகைத் தருகிறது. முகத்தில் பூசப்படும் பவுடர் நிலைத்து நிற்குமாறு அதை ஏற்கவும் இது பயனாகிறது. இதிற் பல வகையுண்டு. இவற்றுள் முதல் வகை குளிர்விக்கும் பசை (Cold-Cream) எனப்படும். இதில் ஏதோவொரு கொழுப்பு வகை அதிகமாக இருக்கும். இது குளிர்ச்சியைத் தர இதிலுள்ள நீர் சிறிது சிறிதாக ஆவியாவதே காரணம். இப் பசையைச் செய்யப் பாதாமி எண்ணெய், வெண் மெழுகு, வெண்காரம் (Borax), தண்ணீர் இவற்றைக் கொண்டது. இவற்றைக் கலந்து 85° சூட்டில் இளக்கினால் இவை சீரான திரவமாகும். இந் நிலையில் அதை விடாது கலக்கி, அது பாகுபோன்ற பொருளாகுமாறு செய்ய வேண்டும். இப்போது அதனுடன் வாசனைப் பொருளையும் சேர்க்கலாம். இதைத் தவிர மறையும் பசை (Vanishing-Cream) என்னும் ஒரு பொருளும் தற்காலத்தில் வழங்குகிறது. இது தோலில் தேய்க்கப் பட்டால் வெளியே தெரியாமல் மறைகிறது. இதில் தனிக் கொழுப்பு இல்லை. குழம்பாக்கப்பட்ட ஸ்டியரிக் அமிலமும் (Stearic Acid), இவ்வமிலத்தாற் செய்யப்பட்ட சவர்க்காரமும் இதிற் கலந்துள்ளன. இதனுடன் சேர்க்கப்படும் வாசனைப் பொருள்கள் நீண்ட ஆராய்ச்சிக்குப் பின்னரே தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இவ்விரு பசைகளைத் தவிர வேறு வகைகளும் வழங்குகின்றன. முகத்திலுள்ள கறைகள், வடுக்கள், பருக்கள் முதலியவற்றைப் போக்கும்திறமையுள்ளதாகக் கூறப்படும் பசைகளில் படிக்காரம், நவச்சார உப்பு, கொயினா, கிளிஸரின் முதலிய பொருள்களைக் கொண்டவை. தோலைச் சுத்தமாக்கிக் காற்று சூரிய வெப்பம் இவற்றால் பாதிக்கப்படாது பாதுகாப்பதே இவற்றின் முக்கிய வேலையாகும். இவை திரவ வடிவில் கழுவும் நீர்களாகவும் (Lotions) வழங்குகின்றன.

தலைக்கு எண்ணெய் தடவும் வழக்கம் நம் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உள்ளது. இது குளிர்ச்சியைத் தந்து, மயிரைப் படிவித்து மயிர்க்கால்களைத் தூண்டி மயிர் வளரவும் ஓரளவு உதவுகிறது. தற்காலத் தைலங்களில் தாவர அல்லது உலோக எண்ணெயும், சிறிதளவு சாராயமும், புளி உப்புகளும் (Acetic salts), கிளிஸரினும் இவற்றில் உள்ளன. இவற்றைப் பசைகளாகவும் செய்யலாம். தலைப் பசைகளில் சிறிதளவு மெழுகும் உள்ளது. தேவையற்ற மயிரைப் போக்கும் பசைகளும் மேனாடுகளில் அதிகமாக வழங்குகின்றன. இவற்றில் உலோகச் சல்பைடு ஒன்றோ, தாலியம் என்னும் உலோகத்தின் உப்பு ஒன்றோ இருக்கும். ஆனால் இவற்றில் பெரும்பான்மையானவை மென்மையான தோலை நாளடைவில் பாதிக்கலாம்.

பல பொருள்களாலான ஸ்நானப் பொடிகளை நமது மாதர் எப்போதும் வழங்கி வந்துள்ளனர். தலையைத் தூய்மையாக்கித் துர்நாற்றத்தைப் போக்கத் தற்காலத்தில் 'ஷாம்பூ' (shampoo) என்னும் பொருள் வழங்குகிறது. இது திரவமாகவோ தூளாகவோ இருக்கலாம். இவற்றில் வெண்காரம் முதலிய ரசாயனப் பொருள்களும் தாவர வாசனைப் பொருள்களும், சவர்க்காரமாக்கப்பட்ட எண்ணெய்களும், நீரும் உள்ளன. ஆனால் இவை நம் நாட்டில் வழங்கும் சீயக்காய்த்தூள் முதலியவற்றைவிட எவ்வகையிலும் உயர்ந்தவையல்ல என்றே கூறவேண்டும்.

கண்ணுக்கும் புருவத்திற்கும் மை இட்டும் வழக்கம் நம் நாட்டிற்குப் புதிதல்ல. தாவர எண்ணெய் விளக்கின் மசியோடு, வேறு தாவரப் பொருள்களைச் சுட்டுச் சேர்த்து மையைத் தயாரிக்கின்றனர். இது கண்ணுக்கு அழகைத் தருவதோடு குளிர்ச்சியையும் தந்து அதைப் பாதுகாக்கிறது. தற்காலத்தில் ரசாயன அறிஞரது உதவியால் மயிரைக் கருமையாக்கும் பல செயற்கைப் பொருள்கள் வழக்கத்திற்கு வந்துள்ளன. இவற்றில் உடலுக்குத் தீமை விளைக்காத சாயங்களும், கிளிஸரினும், சாராயமும் பயனாகின்றன. ஆனால் இவற்றால் சிலருக்கு விபரீத விளைவுகள் நேரலாம் என்பதை மறுக்க முடியாது. ஆகையால் செயற்கையில் வண்டினையொத்த குழலைப் பெறும் முயற்சி இக்காலத்திலும் நிலையான வெற்றி தராது என்றே கூறலாம்.

முன்னர் மருதாணியால் அழகு பெற்ற மாதரது விரல்களுக்கு ரசாயன அறிஞர் இக்காலத்தில் வேறு வழிகளில் அழகு தருகிறார். இப்போது பல நிறமான நகப் பாலிஷ்கள் (Polishes) வழங்குகின்றன. இவற்றில் குழம்பாக்கிய தேன் மெழுகு, உலோக எண்ணெய், வெண்காரம் முதலிய பொருள்களும், ஏதோவொரு வர்ணப் பொருளும் இருக்கும். இது நகத்தில் பூசப்பட்டதும் விரைவில் உலர இத்துடன் சிறிது சாராயமும் சேர்க்கப்படும். நகப் பாலிஷில் இன்னொருவகையில் செலுலாயிடில் உள்ள செலுலோஸ் அஸிடேட்டு (Cellulose acetate) என்னும் பொருள் பயன்படுகிறது. இது நகத்தின்மேல் பூசப்பட்டு உலர்ந்ததும் பளபளப்பும் அழகிய நிறமும் கொண்ட தகடாகப்படிகிறது. இதனால் இதை நீக்குவதும் எளிது. ஆகையால் அன்றாடம் இதை

மாற்றி ஆடைக்குத் தகுந்த நிறத்தில் நகத்தின் சாயத்தை அமைத்துக்கொள்ள இப்பொருள்கள் உதவுகின்றன.

அக்காலத்தில் தினைப்புனத்தில் "பல்லினைக் காட்டி வெண் முத்தைப் பழி"த்திட்டாள் சிறுவள்ளி. அவள் வெண்மையான பற்களைக் கொண்டிருக்க என்ன செய்தாளோ அறியோம். ஆனால் தற்காலப் பற்பொடிகளும் பற்பசைகளும் பற்களை வெண்மையாக்குவதோடு அவற்றிற்குத் தீங்கு விளைவிக்கும் பொருள்களை நீக்கி, அவற்றைப் பாதுகாத்து, வாய் துர்நாற்றங்கொள்ளாமற் செய்து, உதவிபுரிவதென்னவோ உண்மை. சீமைச் சுண்ணாம்பு (Chalk) மக்னீஷியம் கார்பனேட்டு, சவர்க்காரம், கிளிஸரின் முதலிய பொருள்கள் இதில் உள்ளன. இவை பற்களது அசுத்தங்களை நீக்கித் தூய்மையாக்க உதவுகின்றன. வாயிலுள்ள கிருமிகளைக் கொன்று அதைச் சுத்தப்படுத்த யூகலிப்டஸ் எண்ணெய், தைமால் (Thymol), கார்பாலிக் அமிலம் முதலிய நச்சுநீக்கிகள் இவற்றில் சேர்க்கப்படுகின்றன.

தற்கால அலங்காரப் பொருள்கள் அனைத்திலும் ரசாயன நூலின் கைத்திறனைக் காண்கிறோம். இவற்றைக் குறைகூறுவோர் இக்காலத்திலும் உளர். இவை நாளடைவில் தோலிலுள்ள நுண்ணிய தொளைகளைப் பெரிதாக்கித் தோலில் மடிப்பு விளைவிக்கும் என்கின்றனர். ஆனால் மிக நுண்ணிய தூள்களால் ஆன பவுடர்களும், பசைகளும் இத்தொளைகளைப் பாதிக்க வழியில்லை. எப்பொருளையும் அளவுக்கு மீறிப் பயன்படுத்துவதால் தீங்கு நேரலாம் என்னும் விதிக்கு அலங்காரப் பொருள்களும் விலக்கல்ல. அலங்காரப் பொருள்களில் உடலுக்கும் தோலுக்கும் தீங்கு விளைவிக்கும் பொருள்கள் உள்ளன என்பதும் தற்போது தவறாகும். ஏனெனில் தற்காலத்தில் அதிகமாக வழங்கும் அலங்காரப் பொருள்களில் உள்ள ஒவ்வொரு பொருளும் பல சோதனைகளின் பின்னரே தேர்ந்தெடுக்கப்படுகிறது.

அலங்காரப் பொருள்களைப் பயன் படுத்துவது இயற்கைக்கு முரணாகும் என்போர் உண்டு. இவர்களுக்கு லிலியன் பாஸ்டர் என்னும் அமெரிக்க அறிஞர் கூறிய விடை கவனிக்கத்தக்கது. "ரோஜா மலரையொத்த அழகிய முகத்தோற்றத்தால் மயங்கி மணச் சிறைக்குள் அகப்பட்டுக்கொண்ட இளைஞர் பலருண்டு. இத்தோற்றம் இயற்கை விளைவாயினும் சரி, ஆய்வு களத்தின் வேலையாயினும் சரி, அவர்களுக்கு இது மகிழ்வு தரும் வரை இதற்காகக் கவலை கொள்வதில்லை." இந்த நவராத்திரியின் போதும் மணமாகாத பெண்களின் பெற்றோர் பலரது கவலை நீங்க ரசாயன நூல் உதவி செய்தால் அதுவே போதுமானது!

காவேரி சந்தா விகிதம்

	உள்நாடு			பர்மா, மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு		
	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
ஒரு வருஷம்	6	0	0	7	8	0
அரை வருஷம்	3	0	0	3	12	0
தனிப் பிரதி ஒன்றுக்கு	0	8	0	0	10	0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், "காவேரி,"
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

ஹமாம் உண்மையிலேயே

இந்திய மக்களின் மனதிற்கிசைந்த ஸோப்பே! ★



★ ஹமாம் வாங்குவோரின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்தே வருகிறதென்பதை அசல் விற்பனை புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்!

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்

வெளியூர்க் கடிதம் -3

சாரி

பிரியமுள்ள——க்கு,

சென்ற கடிதத்தை நீ இவ்வளவு ரசித்தாய் என்பதில் மிக்க சந்தோஷம். இந்த யாத்திரையில் நீயும் என் கூட வரவில்லையே என்கிற வருத்தமும் அவ்வப்போது மனதில் தோன்றத் தவறுவதில்லை. "கிட்டாதாயின் வெட்டென மற" என்பது இளமைப் பாடம். அதை நினைவில் கொண்டு, என் பேனாப் பாதையில் உன்னையும் இந்த யாத்திரையில் அழைத்துச் செல்ல நினைக்கிறேன். உனக்குச் சுவாரஸ்யம் குன்றினால் ஒரு வார்த்தை சொல்லு; உடனே நிறுத்திக் கொள்கிறேன். சரிதானே?

அஜ்மீர் என்கிற ஊர் அஜ்மீர்-மர்வாரா பிராந்தியத்தின் பிரதான பட்டணம். ராஜபுதானத்தின் மத்தியில் அமைந்திருந்த போதிலும், ஐக்கிய ராஜஸ்தானுடன் இன்னும் சேர்க்கப் படவில்லை. அரவல்லி மலைச் சாரலில் நாற்புறமும் மலை சூழ்ந்த நகரம். பிரும்மாண்டமான கோட்டைச் சுவரும் மதார்கேட் என்கிற வாயிலும் அக்பர் இந்தப் புராதன பட்டணத்தை நிர்மாணித்ததின் சின்னமாய் விளங்குகின்றன.

கோட்டை வாயிலைச் சுற்றியுள்ள சந்தடியும் அழுக்கும், நாற்றமும், அதற்கப்பாலுள்ள இருண்ட சந்து வழிகளும், அதில் தோன்றும் மனிதரும் ஒருவித அச்சத்தை விளைவிப்பதாய் இருக்கின்றன. பயங்கர வியாதிகள், ரகசியக் கொள்ளை, கொலைகள் எந்தவிதமான தீச்செயலுக்கும் அஞ்சாதவர் போன்ற முகச் சாயல் கொண்ட மனிதர்— இன்னும் எதெல்லாம் தான் இங்கு இல்லை?

அனாஸாகர், பாய் ஸாகர், (Fai Sagar)



என இரண்டு பெரிய ஏரிகள் மலைத்தொடர்க்கு நடுவில் அமைந்திருக்கின்றன. அனாஸாகரில் படித்துறையும் ஸ்நான கட்டமும், பளிங்குக் கைப்பிடிச் சுவரும், பாதுஷா ஷாஜஹான் கட்டுவித்தபடி இன்றும் தோன்றுகின்றன. ஏரியின் நாற்புறமும் உயர்ந்த மலைகள்.

எதிர் எதிரேயுள்ள இரண்டு மலைச் சரிவில் விசாலமான இரு பங்களாக்களைக் கட்டியிருக்கிறார்கள். ஒன்று அஜ்மீர், மர்வாரா கமிஷனர் குடியிருப்பது; மற்றொன்று இவ்வூரில் பெரிய தனவந்தர் ஒருவருடைய மாளிகை.

இவைகளின் மேல்தளத்தில் நின்று அனாசாகரின் குளிர்ச்சி தோய்ந்த காற்றை உட்கொள்வதும், எதிர்க் கரையில் பெருமையோடு வானத்தை அளாவும் மலைத்தொடரைக் காண்பதும் ஓர் நிரந்தர ஆனந்தத்தைப் பயக்கும் என்று நான் நினைத்தேன். ஆனால், ஏரி வற்றிய பொழுது செத்த

மீன்களின் வாடை காற்றில் மிதந்து வந்து மூக்கைப் பொசுக்குகிறதே; வெயிலில் மலை பழுத்துப் போய் உஷ்ணத்தைக் கக்குவது பொறுக்க முடியவில்லையே என்றெல்லாம் அதில் குடியுள்ள ஒருவர் மூக்கால் அழுதார்! அக்கரைக்கு இக்கரை பச்சை என்பது வாஸ்தவம்.

வீட்டை விட்டு ஒரு அடி எடுத்து வைத்தால், கண் முன்னால் தோன்றுவது மலைத் தொடர்; அடர்ந்த காட்டின் செழுமை. ஒரு வருஷத்தில் 25 இஞ்சு மழை பெய்ய வேண்டிய இடம்; இந்த வருஷம் இது வரை 12 இஞ்சு பெய்திருக்கிறது. மழைக்குப்பிற்பாடு, வறண்ட தரைமீதும், மலை மீதும் தோன்றிய பசுமை கண்ணைக்கூச வடித்தது. "ஏக் தம் ஹரா ஹோகயா."

இப்படி எண்ணி மனம் குளிர்ந்திருக்கையில் எங்கிருந்தோ ஒரு விஷ ஜ்வரம் தோன்றிப் பரவலாயிற்று. மலேரியா போல் 103, 104டிகிரி ஜ்வரமும்குளிரும் போதாதென்று, குடலைப் புரட்டும் ஒரு வாந்தியையும் கூடவே கொண்டுவந்து சேர்த்தது. இப்படி சக்கைப்போடு போட்டு ஜ்வரம், நீங்கிய பிற்பாடு பலவீனமாய் வாசல் தாழ்வாரத்தில் வந்து உட்கார்ந்தால் உலகமே பழுத்த மஞ்சள் நிறமாய்த் தோன்றிற்று. இதென்னடா இது "ஏக் தம் பீலா ஹோ கயா" என்று நினைந்தேன். பீலா ரங் நம் கண்ணில் தான் என்பது பிற்பாடு தெரிந்தது.

காமாலை போன்ற ஒரு வகை மலை ஜ்வரம் இது. இங்குள்ளவர் காலையில் ஒரு எலுமிச்சம் பழத்தைச் சுட்டு மிளகுப் பொடி சேர்த்து, ரசத்தைச் சப்பி உட்கொள்வது இந்த வியாதியைத் தடுக்கும் மருந்து என்கிறார்கள். நிரூபித்தும் காட்டினார்கள். நம் டாக்டர்கள் இதற்கு என்ன சொல்வார்களோ. நான் என்னவோ வாரம் ஒரு பல்லுடிரின் மாத்திரையைக் கர்ம சிரத்தையாய் உட்கொள்ளத் தவறவில்லை.

பெரிய ரயில்வே காலனியும், கார் கானாக்களும் இங்கே இருக்கின்றன. வெள்ளையரின் ஆட்சியில், தங்களுக்கென ஏற்படுத்திக் கொண்ட வசதியின் சின்னங்களை இங்கே நிரம்பக் காணலாம். தார் மெழுகிய சாலைகள், விஸ்தாரமான புல் தரைகள், தோட்டம் என பிரும்மாண்டமான கருங்கல் பங்களாக்களைக் கொண்ட காலனி ஊரைவிடப் பன் மடங்கு அழகுள்ளது. இப் பெரிய தோட்டங்களில் புல் அறுத்து எடுத்துக் கொள்வதற்காக, வருடத்திற்கு 100-300 ரூ. வரை குத்தகைப் பணமாய், பங்களாக்காரர் பெறுவது வழக்கமாம்! இப்பொழுது எல்லாம் மாறி வருகிறது. உணவு உற்பத்திப் பெருக்கத்தை ஒட்டி, தோட்டங்களை உழுது தானியம் விதைக்க ஏற்பாடு நடக்கின்றது.

ஒரு குடம் நிறைய இனிய நீரை நிரப்பி வைத்தால், அது தளும்பும் சமயம் உப்புத் தண்ணீரைச் சிந்துமா? சிந்தாது என்று நாம் சொல்வோம். இவ்வூர்க் குழாயில் மாறி மாறி இனிப்பான மீடா பாணியும், விஷம் போன்ற கரா பாணியும் வரும்போது எனக்கு வேடிக்கையாக இருந்தது.

அஜ்மீரில் திகம்பர ஜயினர் கோவில் ஒன்று உள்ளது. ஜைன மதம் இந்தியாவின் எல்லாப் பாகங்களிலும் பரவியிருந்ததற்கு அடையாளம் அதிகம் கிடையாது. மார்வார் பிரதேசத்தில் முக்யமாய் அஜ்மீரில் ஜைனர் அதிகம். கோவில் ஒரு தனி மண்டபத்தில், புத்தரைப் போன்ற மஹாவீரரின் விக்ரஹம் ஒன்று உள்ளது. மற்றப்படி அடுக்கடுக்காய் நாலைந்து மாடிகளும், ஒவ்வொன்றிலும் நாற்புறமும் கண்ணாடி அடைப்பைக் கொண்ட ஒரு பெரிய ஹாலும் இருக்



கின்றன. இந்த நான்கு கூடங்களிலும் நான் கண்ட காட்சி எனக்கு என்னவென்றே புரியவில்லை. எங்கே பார்த்தாலும் நிலைக் கண்ணாடிகள், சிறிய தங்க மண்டபங்கள், ரஸ குண்டுகள், பொம்மைகள், வர்ணச் சித்திரங்கள், யானைகள், குதிரைகள் என்றெல்லாம் கொலு மாதிரி வைத்திருந்தன. இதென்ன பொம்மை விளையாட்டு என்று நினைத்த நான் பிற்பாடு இவை, மஹாவீரரின் ஆத்ம நிர்வாணத்தின் பல்வேறு படிகளைக் குறிக்கும் காட்சிகள்; அதை இம்மாதிரி சித்திரித்திருக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டேன். பிரும்மாண்டமான ஒரு மேடை முழுவதும், இந்த ஆத்ம நிர்வாணச் சித்திரத்தை ரங்கோ

லியினால் கண்ணைப் பறிக்கும் அழகுடன் வரைந்திருந்த காட்சியை மறக்க முடியாது.

புஷ்கர் என்கிற புண்ணிய தீர்த்தம் அஜ்மீருக்கு 7 மைல் தூரத்தில் உள்ளது. நாக்பஹாட் என்கிற மலையைத் தாண்டி மோட்டார் பாதை செல்கிறது. பிரும்மாவிற்குக் கோயிலே கிடையாதென்றோ, இந்தியாவிலேயே ஒன்றோ இரண்டோ உள்



ளது என்றோ கூறுவதைக் கேட்டிருக்கிறேன். அவற்றில் ஒரு கோயில் இங்கே உள்ளதுஇதன் காரணமாய், பிரும்ம புஷ்கர் என்கிற ஸ்தலப் பெயர் ஏற்பட்டது. நான்முகன் யாகம் செய்ததின் காரணமாகச் சாவித்திரி தேவியின் கோயிலும் புஷ்கரில் ஏற்பட்டிருக்கிறது.

மேயோ காலேஜ் நம் சுதேச மன்னர்கள் படித்துப் பட்டம் பெற்ற கலாசாலை. இதன் வாயிலைக் கடந்து உள்ளே சென்று பார்க்கத் தவம் கிடந்த நாட்கள் போக, தற்



சமயம் காலேஜில், பணம் படைத்த எந்தப் பையனும் கல்வி அறிவைப் பெற முடியும். சென்ற பிப்ரவரி மாதத்தில் மாட்சிமை தங்கிய கவர்னர் ஜனரல் ராஜாஜி அவர்கள், கலாசாலையின் பட்டமளிப்பு விழாவிற்கு விஜயம் செய்த பொழுது தோன்றிய மாறுதல் இது. அவர் பேசுகையில், ''நம் தேசத்தில் சுதேச ராஜகுமாரருக்கென்று தனிப்பட்ட கலாசாலைகள் இனித் தேவையில்லை: அதனால் இதை அழித்துவிட வேண்டும் என்று சொல்வதோ அல்லது மற்றக்கல்லூரிகளின் நிலைமைக்குஇதையும் தாழ்த்த வேண்டுமென்று அபிப்ராயப்படுவதோ பிசகு. அதற்கு மாறாக, புதிய அனேகம் கல்லூரிகளை இந்த ரீதியில் நிர்மாணிக்கவும், ஏற்கனவே உள்ளவற்றின் நிலையை இதற்குச் சமமாய் உயர்த்தவும் நாம் முயலவேண்டும்'' எனப் பொருத்தமாய்ச் சொன்னார். மேயோ காலேஜின் உன்னத அழகை நேரில் தான் கண்டு மகிழ வேண்டும்.

அஜ்மீரில் கடைகள் அழகுள்ளவை. தற்சமயம் ஆயிரக் கணக்கில் சரணார்த்திகளின் சிறிய கடைகள் வரிசை வரிசையாய் மாலை நேரத்தில் தோன்றுகின்றன. அஜ்மீரில் ஒரு சௌகர்யம் உண்டு. வீட்டில் உட்கார்ந்தபடி, சகல சாமான்களும் வாங்கிக் கொள்ள இங்கே வசதி இருப்பதைக் கண்டேன். பெரிய கடைகளில் சைகிள் ஆட்களைவைத்து, கடைப் பெயர் கொண்ட பெரிய பெட்டிகளில் குண்டுசி முதல் நகை வரையில் அவ்வப்போது நம் தேவைக்குத் தகுந்த மாதிரி வீட்டில் கொணர்ந்து தருகிறார்கள். இவ் வியாபாரத் தந்திரத்தை இவர்கள் சிந்தி அகதிகளிடமிருந்து கற்றிருக்கிறார்கள்.

நம் ஊர்க்கடைக்காரர் சிலர், கடையைத் தேடிச் செல்லும் நம்மிடம் மரியாதையாய்ப் பேசி நமக்குத் தேவையான பொருளை எடுத்துத் தருவது கஷ்டமான காரியம்போல் நினைத்து, அலக்ஷியமாய் நடந்துகொள்வதைக் கவனித்திருக்கிறேன். இவர்கள் இந்த வியாபார முறைகளை முக்யமாய்க் கவனிக்க வேண்டும்.

நான் இங்கு வந்த சமயம் திருட்டுக்கள் அசாத்தியமாய் நடந்தன. பாகிஸ்தானில் இருந்து ஓடிவந்த சில அகதிகள், தங்கள் பெயரைப் பதிவுசெய்து கொள்ளாமல், களவாடிக் காலங்கழித்தார்கள் என்று இங்குள்ளவர் சொல்கிறார்கள். சிந்திக்காரர் சிலர் அதிருப்தி, கோபத்தோடு பேசியதை நான் கவனித்தேன். அகதிகட்கு அனுதாபம் காட்டவேண்டிய தத்துவமெல்லாம் உண்மைதான். ஆனால் அவர்கள் எதிர்பார்க்கும் காரியங்களோ மலை போன்றவை. சில்லறை

விஷயங்களுக்குப் பெரும் சண்டை கிளப்புகிறார்கள். கவர்ன்மெண்டைத் திட்டுகிறார்கள். ஆனால், பாவம், இவர்களில் பெரும்பான்மையோர் தங்களுக்கு நேர்ந்த கொடுமையைச் சமாளித்து நவ இந்தியாவில் புது வாழ்வு நடத்தத் தைரியமாய் முயலுவது போற்றத் தகுந்தது. வேறு ஒரு சந்தர்ப்பத்தில் இதைப்பற்றி உனக்குத் தனியாக எழுத வேண்டும். நானும் நீயும் இம்மாதிரி நிலையில் என்ன செய்வோம்?

(Anti-Corruption Drive) தவறு வழிகளில் பணம் சேர்க்கும் பழக்கத்தைச் சர்க்கார் இப்பொழுது கண்டிக்கிறது. இதைக் குறித்து, சில நண்பர்கள் ஒரு நாள் பேசிக்கொண்டு இருந்த பொழுது சில ரசமான கதைகள் வெளிவந்தன. ஒரு டாக்டர் தம்மிடம் வரும் ஏழைக் கூலி ஆட்களுக்கு வேலைக்குத் தகுதி என்கிற அனுமதிச் சீட்டுத் தருவதற்காகப் பணம் பறிப்பது வழக்கம். அவர் கையாண்ட முறையைக் கேளு. எவ்வளவு ரூபாய்கேட்க உத்தேசமோ அவ்வளவு முறை தம் தாடியை உருவிக்கொண்டு, முடிவில் பென்சிலால் மேசை மீது ஒரு தட்டுத்தட்டுவாராம். பணம் வாய்திறவாமல் மேசைமீது வைக்கப்படும்; அனுமதிச் சீட்டும் கைமாறும்! இந்த ஏற்பாடு கச்சிதமாயில்லை?

இன்னொருவர். இவரும் டாக்டர்—ஜெயிலில் வைத்தியராம். பரோல் கைதிகளில் 4, 5பேர் டாக்டர் பங்களாவில் வீட்டு வேலை செய்வது மாமூல். ஒருவன் தன் நன்னடக்கை மூலம் டாக்டரின் அன்பைக் கவர்ந்து, சிறைச்சாலையிலிருந்து வெளியில் வரும் சமயம் ஒரு தகுந்த வேலையைச் சம்பாதித்துக் கொண்டான். முதல் நாள் இரவு எல்லாருக்கும் வணங்கி விடை பெற்றுச் சென்றவன் பாதி இரவில் திரும்பி வந்து, டாக்டர் வீட்டில் கொள்ளையிட்டுச் சகல பொருளையும் எடுத்துச் சென்று விட்டான். இன்றளவிலும், அவனையோ, தகவலையோ காண முடியவில்லை. கைதிகளை அதிகார தோரணையில் வீட்டில் உபயோகித்துக் கொண்டதின் விளைவு என்றும், இதுவும் லஞ்சத்தில் சேர்ந்தது என்பதும் சிலரின் அபிப்ராயம். உலகம் பல விதம். கதைகளைக் கேட்ட எனக்குச் சிரிப்பு வந்தது.

அஜ்மீரில் ரக்ஷா பந்தன் என்கிற சிரவண மாத விழாக் கொண்டாடிய போது நான் இருந்தேன். பெண்கள் தன் உடன் பிறந்தவனை வீட்டிற்கு அழைத்து விருந்திட்டு, கையில் ராகி என்கிற மஞ்சள் சரடுகளைக் கட்டுவார்கள். இதன் மூலம் தன் ஆபத்துக் காலத்தில் அவன் உதவியைத் தேடிக் கொண்டதாகவும், அவனைக் கட்டுப் படுத்தும் பொருட்டு ராகியைப் பிணைப்பதாகவும் கதை. உடன் பிறந்தவர் இல்லாத பெண்களும் தங்களுக்கு இஷ்டமான ஆடவருக்கு ராகியைக் கட்டுகிறார்கள். அன்று முழுவதும் ஆட்டம், பாட்டு, விருந்து, புதிய உடுப்பு அணிதல் சினிமாச் செல்லுதல் இம்மாதிரி பொழுதைக் கழிக்கிறார்கள்.

சுதந்திர தினக் கொண்டாட்டத்தையும் இங்கு கண்டேன். ஐயே, இதை எப்படிக் கொண்டாட்டம் என்பது? காலையில் கடுகடுத்த முகத்துடன் வெவ்வேறு இடங்களில் கொடியேற்றி, கடனே என்று வணங்கி விட்டால் போதுமோ? மக்களின் உள்ளத்தில் களிப்பு இல்லையே? இந்த அபூர்வ தினத்தை அமைதியாய்க் கழியுங்கள் என்று ஏன் நம் அரசங்கத்தார் சொல்கிறார்கள்? பிற தேசங்கள் தங்கள் தேசிய நாட்களை எவ்விதம் கொண்டாடுகின்றன? நேற்று வரை எம்பயர் தினத்தை இந்தியாவில் கொண்டாடவில்லையோ? சென்ற வருஷம் வேண்டுமானால் இந்துஸ்தானம் தனது ராஷ்டிர பிதாவை இழந்து துக்கத்தில் துடித்தது. இவ் வருஷம்? பஞ்சம், உணவு இல்லாக் குறை இத்யாதி.

இல்லை. இல்லை. பணமும் உணவும் இல்லாமற் போனாலும் இந்தியாவிற்கு அரும்பாடுபட்டுக் கிடைத்த சுதந்திரத்தை, அந்த நாளில், களிப்போடு தீபாவலியைப் போல் கொண்டாட வேண்டும். மக்களின் உள்ளத்தில் இந்தத் தினத்தில் முக்யத்வம் நிலைத்திருக்கவேண்டுமானால் இதல்லவோ சிறந்த வழி? இவ்வாறு நிலைப்பது சரியோ? நீ என்ன சொல்கிறாய்?

ஐரோப்பியர் நம் நாட்டை விட்டுச் சென்று விட்டார்களே, அவர்களுடைய முதல்தரமான நாகரிகப் பழக்கங்கள் எங்கே மறைந்துவிடுமோ என்று நாம் பயப்பட வேண்டிய அவசியமேயில்லை. அஜ்மீர் உத்யோகஸ்தரிடையே இவைகள் எவ்வளவு தூரம் பதிந்திருக்கின்றன என்பதற்கு ஓர் இரண்டு உதாரணம் போதாது. நவ இந்தியாவின் போக்குக்குச் சற்றும் பொருந்தாத இந்த நாகரிகம் எனக்கு விரசமாய்ப் பட்டது. ஆனால் பத்தாம் பசலி ஆள் என்று சொல்லக் கூடிய என் அபிப்ராயம் இவ் விஷயங்களில் ஏற்கத் தகுதியற்றது; இதை நானே சொல்லிக் கொள்கிறேன். அந்தஸ்து வாரியாகப் போய்ப் பார்க்கும்-காலிங்-என்கிற பழக்கத்தை வெறுத்த ஒரு உத்யோகஸ்தர் ஓர் உபாயம் தேடினார். தாம் பார்க்க வேண்டியவரின் ஜாபிதாவை ஒரு சீட்டில் குறித்து, தயை செய்து உங்களை எல்லாம் நான்—கால் செய்ததாகப் பாவிக்கவும் என்று செய்தி

அனுப்பி வைத்தாராம். இவருடைய தைரியத்தை நான் மெச்சுகிறேன். "நிர்வாண தேசத்தில் துணி உடுத்தியவன் பைத்தியக்காரன்" அல்லவோ?

சம்பந்தமில்லாமல் எழுதுகிறேனே, மன்னிப்பாய். அஜ்மீரில் தற்சமயம் ஜூடிஷியல் கமிஷனர் யார் தெரியுமோ? காந்தி அடிகளின் கொலை வழக்குத் தீர்ப்பு அளித்த ஸ்ரீ ஆத்ம சரண் என்பவர். அவர் பங்களாவை இரவும் பகலும் துப்பாக்கி வீரர் காவல் காக்கின்றனர்.

சாரதா சட்டத்தை அமுலுக்குக் கொணர்ந்த ஸ்ரீ ஹரி பிலாஸ் சாரதா அவர்கள் அஜ்மீர்க்காரர் என்று தெரிந்து கொண்டேன். அஜ்மீரைப்பற்றி அவர் எழுதியுள்ள ஒரு ரசமான புத்தகத்தையும் சமீபத்தில் படித்தேன்.

நிற்க, ஜய்பூருக்கு நான் தமாஷாய் ஒரு நண்பர் கோஷ்டியுடன் போய் வந்தேன். இவ்வூரை The Pink City என்று சொல்லுவார்கள். மாலைப் பொழுதில் நீலவானும், பச்சை மலைகளும் இவ்வூர்ச் சிவப்புக் கற் கட்டிடங்களைக் தாமரைப்பூ வர்ணமாய்க் காட்டுவதே இப் பெயருக்கு முக்ய காரணம்.

மிர்சா இஸ்மேல் இங்கே சிலகாலம் இருந்ததின் பயனை, பூந்தோட்டங்கள், அழகிய கட்டிடங்கள், பாதைகள் இவற்றில் கண்ணுறலாம். உண்மையில் இம்மாதிரி மனிதரை நமது நவ இந்தியாவின் பிரதான சிற்பி- Government's chief Architect-யாக்கிக்கொண்டு, அவருடைய அழகு உணர்ச்சியைப் பூராவும் பயன் படுத்தி நம் நகரங்களையும், கிராமங்களையும் சிறப்பிக்க வேண்டும்.

ஜய்பூரில் ஹவாமகல் பார்த்தீர்களோ என்று என்னை யாவரும் கேட்டார்கள். ஐந்து அடுக்கு மாடிக் கட்டிடம்போல் முன்



சுவர் எழுப்பி அதைப் பூராவும் பலகணிகள் வைத்துத் துளைத்திருக்கிறார்கள். அட்டையில் கத்தரித்துத் துவாரம் போட்டிருப்பதுபோல் நமக்குத் தோன்றுகிறது; இதுவே ஹவா மகல்.

இங்குள்ள ஒரு மியூசியத்தில் வெகு புராதனமான விலையுயர்ந்த கம்பளங்களைப் பத்திரப் படுத்தியிருக்கிறார்கள். கம்பளங்கள்



ஒவ்வொன்றும் பிரும்மாண்டமானவை; கண்ணைப் பறிக்கும் அழகுள்ளவை; நுட்பமான நெசவு வேலைப்பாடு கொண்ட அருமையானவை.

இங்கே மற்றொரு விசேஷம். ஒரு எகிப்து தேச ராஜகுமாரியின் சடலத்தை, அவர்கள் முறைப்படி காப்பாற்றி வைத்திருக்கிறார்கள். எகிப்த் மம்மி ஒன்றை இங்கே முதல் தரம் கண்ணுற்ற பொழுது ஆயிரம் ஆயிரம் வருஷங்களுக்கு முன் வசித்த இந்த அழகியின் கதையை, எனக்கு யாரேனும் சொல்லமாட்டார்களா என்று தோன்றிற்று; அல்லது மம்மியே எழுந்து விக்ரமாதித்யன் பதுமைகள் சொன்னதுபோல் தன் கதையை எனக்குச் சொல்லமாட்டாளோ என்று நினைத்தேன். அவளுடைய உடல், நீளத்தில் ஐந்து அடிக்கும் குறைவாக இருந்தது. இந்த மியூசியத்தில் திருச்சியில் செய்த, பழையகாலத்து விபூதிப் பை ஒன்றை வைத்திருந்தார்கள்!

ஆம்பேர்—ஆம்பர் என்றெல்லாம் தப்பிதமாய் அழைக்கப்படும் ஆமேர் அரண்மனை ஜய்பூரில் மலைமீது கட்டப் பட்டுள்ளது; பதஹ்பூர் சிக்ரி போன்ற கோட்டைச் சுவரும் கட்டிட வேலைப்பாடுகளும் கொண்டது. இங்கே ஒரு துர்க்கை கோவில் இருக்கிறது. முற்காலத்தில் நரபலி இடுவார்களாம். இப்போதும் சாயுங்காலத்தில் ஓர் ஆட்டைத் துர்க்கைக்குப் பலி கொடுக்கிறார்கள். மாலை 6 மணிக்குப் பிறகு மலைமீது ஒருவரையும் அனுமதிப்பதில்லை. துர்க்கையின் கோவிலைப் பெரிய வெள்ளிக் கதவுகள் அலங்கரிக்கின்றன. அதில் துர்க்கையின் பல அம்சங்கள் விக்ரஹரூபமாய்ச் செதுக்கப் பட்டிருக்கின்றன.

இந்த ஆமேர் அரண்மனையில் இப்பொழுது யாரும் வசிப்பதில்லை. இவ்வளவு அழகான கட்டிடங்களையும் காட்சிகளையும் அனுபவிக்காமல் விலக்கிவிட்டு, நகரத்தின் மத்தியில் புதிய அரண்மனை கட்டியிருக்கிறார்கள். இந்த இடத்தைப் பற்றின ஒரு கதை சுவாரஸ்யமாக இருந்தது. அரச வம்சத்தில் புதிதாய் வாழ்க்கைப்பட இருக்கும் ஒவ்வொரு ராஜகுமாரியும், தன் விவாகத்தின் முந்திய நாள் பகலையும் இரவையும் தன்னந்தனியே, தாதிமார்கள் ஒருத்திகூடப் பக்கத்தில் இல்லாமல், மலைமேல் இவ்வரண்மனையில் கழிக்கவேண்டும் என்பது ஒரு

Sastry & Sastry
JEWELLERS
33, EAST MADA STREET,
MYLAPORE P.O., MADRAS - 4.

நிபந்தனையாம்; இன்றளவிலும் இந்த வழக்கம் கையாளப்படுவது எனக்கு ஆச்சரியத்தை விளைவித்தது.

அரண்மனையின் மேல் தளத்திற்குச் செல்லப் படிக்கட்டுகள் கிடையாது. விசித்ரமான, இருண்ட, மூன்று அடிப்பாதைகள் ஏழெட்டு முடக்குகளுடன் மேலே ஏறுகின்றது. சலவைக்கல்லின் குளிர்ச்சியும், இருட்டும் அச்சத்தை விளைவிக்கின்றன.

சுற்றுப்புறமுள்ள எல்லா மலைகள் மீதும் சிறிய கோட்டைகளும் அவைகளை அடையப் படிக்கட்டுகளும் உள்ளன. இம் மலைகளில் இப்போதுகூடத் துஷ்ட மிருகங்கள் சஞ்சரிக்கின்றன; இவைகள் ஆடு மாடு மனிதரைத் துன்புறுத்தாமல், ராஜா வேட்டையாடிக் காப்பாற்றுகிறார்.

ஜய்பூர் சுத்தமான, அருமையான, இனிய நகரம். ஐக்ய ராஜ ஸ்தானத்திற்குத் தலை நகராய் அமைவதற்கு எவ்விதத்திலும் தகுதியுள்ளது.

கடிதம் நீண்டுவிட்டது. அநேகமாய் அஜ்மீர் ஜய்பூரைப்பற்றி நான் கண்டு, கேட்ட விசேஷங்களை எழுதிவிட்டேன். ஹிந்தியை ராஷ்டிர பாஷையாக்கியிருப்பதை நினைத்து அன்றொரு நாள் நாலைந்து உத்யோகஸ்தர்கள், தேவநாகரி எழுத்தில் கை ஒப்பம் வைக்க எழுதி எழுதிப் பழக்கிக்கொண்டார்கள். ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவர்களுடைய எழுத்துக்கள் ஒன்றுபோல் மற்றொன்று இருந்ததாம்! அதிகம் தேவநாகரியில் எழுதிப் பழக்கமில்லாதவர், எவருடைய எழுத்தும் ஒன்றுபோல் இருக்கும் என்பது உண்மை. இது ஏதடா வம்பு; கள்ளக் கை ஒப்பம் வைக்கும் குற்றங்கள் அதிகரிக்க இடமிருக்கிறதே என்று அவர்கள் பேசிக்கொண்டார்கள். ஒரு உத்யோகஸ்தர் "இந்த வம்பில் நான் மாட்டிக்கொள்ளப் போவதில்லை. பேசாமல் வேலையை ராஜிநாமா செய்துவிட்டு ஊருக்குப்போய், காப்பி ஹோட்டல் வைத்துப் பிழைக்கிறேன்" என்று சொல்லி எங்களைச் சிரிக்கவைத்தார். நமது சர்க்கார் கருணையோடு, சர்வமும் ஹிந்தி மயமாக்குவதற்குப் பதினைந்து வருடங்கள் கொடுத்திருக்கிறார்களே, அதற்குள். நீ பயப்படாமல் ஹிந்தி எழுதப் பயிலலாம், என்று நாங்கள் அவரைச் சமாதானம் செய்தோம்.

இவ்வாறு நாட்கள் ஓடுகின்றன, ரயில் சக்கரம்போல் ஒன்றன்பின் ஒன்றாக.



ஆமேர் ஜய்பூர்—கோட்டையும், அரண்மனையும்.

புதிர்!

எம்.பி.எஸ்.பாரதி

மாசி மாதம். அதி காலை நேரம். நர்மதா நதியில் நீர் சல சல வென்று ஓடிக் கொண்டிருந்தது. புள்ளினங்கள் 'கிரீச் கிரீச்' சென்று சப்தம் செய்து கூடுகளை விட்டு வெளிக் கிளம்பிக் கொண்டிருந்தன. கரை யோரத்தே அந்தச் சிறிய புத்த விஹாரம். வாசலில் பிரும்மாண்டமானதோர் அரச வீருட்சம். விஹாரத்தின் நடுக் கூடத்தே புத்த பகவானின் அழகிய திரு உருவம் சிலா ரூபத்தில் அமைந்திருந்தது. அருகே இரண்டு பெரிய அகல் விளக்குகள் சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்தன. சிலையைச் சுற்றிப் பௌத்த பிக்ஷுக்கள் பலர் உட்கார்ந்து, மௌனமாகத் தியானம் செய்து கொண்டிருந்தனர். உள்ளே பூரண அமைதி நிலவியிருந்தது. அந்த அமைதி யாவர் உள்ளங்களிலும் ஏதோ ஓர் அற்புதமான மனச் சாந்தியை அளித்துக் கொண்டிருந்தது. அந்த மாசி மாதக் குளிரிலும் விஹாரத்தினுள் கத கதப்பாக இருந்தது. ஆம், அவ்வாறு கத கதப்பாக இருக்க வேண்டி 'கணப்பு' ஒன்றை மூட்டியிருந்தனர். அதிலிருந்து அகில் கட்டைகளின் மணம் 'கம்' மென்று அறை முழுதும் சூழ்ந்து கொண்டிருந்தது.

அச் சமயம் வாசல் கதவு 'கிர்' ரென்று திறக்கும் சப்தம் கேட்டது. எல்லோரும் ஒரு நிமிடம் திரும்பினர். சிப்பாய்கள் போல் தோற்றமளித்த இருவர் முன்னே வர, தேக முழுவதும் கறுப்பு அங்கியால் மூடப்பட்ட ஓர் உருவம் உள்ளே நுழைந்தது. குரு தேவர் உபகுப்தர் யாவரையும் கையமர்த்தி விட்டு எழுந்து வந்து, "வாருங்கள்!" என்று அன்பு கனிய வரவேற்றார்.

"அரசன் விமலாதித்தன் 'ஆக்ஞை' ஏதாகிலும் உளதோ""

"ஆம் குரு தேவா! இந்த அம்மணியை நாடு கடுத்தி விட்டு வரும்படி அரசர் உத்தரவு. உஜ்ஜயினியின் எல்லை கடந்தவுடன் தம்மை இந்த விஹாரம் வரையுமாவது கொண்டு விட்டுப் போகச் சொல்லிக் கெட்டுக் கொண்டனர். எங்களால் தட்ட முடியவில்லை" என்றான் வீரர்களில் ஒருவன்

உபகுப்தரின் ஆச்சரியம் எல்லை கடந்தது. "ஒரு பெண்ணை ஏன் நாடு கடத்த வேண்டும்? அவள் என்ன குற்றம் செய்தாள்?" என்று எண்ணிக் கொண்டே, "அம்மணி! பகவான் புத்தன் சன்னிதானத்தில் ஆண், பெண், நல்லவர்கள், தீயவர்கள் யாவரும் சமம். எனவே தங்கள் மேலங்கியை எடுத்து விடுகிறீர்களா?" என்றார் கனிவுடன்.

அடுத்த கணம் அங்கி அகற்றப் பட, கண்ணீரும் கம்பலையுமாகச் சுமார் இருபத்தைந்து வயது மதிக்கத் தக்க அழகே உருவான பெண் ஒருத்தி நின்றாள்?

உபகுப்தர் ஒரு நிமிடம் பின்னடைந்தார். "யார்?......உஜ்ஜயினி நகரத்தின் நாட்டிய ராணி மிருணுவா?......என்றால் நம்ப முடியவில்லையே? இவள் என்ன குற்றம் செய்தாள்?"

உபகுப்தரின் கேள்விக்குப் பதில் சொல்ல வீரர்கள் அங்கு இருந்தால்தானே? அவர்கள் எப்போதோ வெளியேறிவிட்டனர்.

"குருதேவா! என்னை மன்னித்து விடுங்கள். அந்தப் பாவிகள் சொல்வதை நம்பாதீர்கள்!......" என்று கதறிக்கொண்டே அந்தப் பெண்மணி மண்டியிட்டு உபகுப்தரின் பாதங்களைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் விட்டாள். பிக்ஷுக்கள் யாவரும் ஒன்றும் தோன்றாமல் பிரமித்து நின்றனர்.

குருதேவர் குனிந்து, அந்தப் பெண்மணியின் தலையை அன்புடன் வருடியவாறே, "எழுந்திரு குழந்தாய்! புத்தன் அருளால் உன் மனம் நிச்சயம் சாந்தியுறும். உன்னை நாடு கடத்தவேண்டி அரசன் முற்பட்டதேன்? இந்த இளம் வயதில் துறவு பூண நீ ஆசைகொள்வானேன்? உன் வரலாறு முழு

வதும் சொல்லு மிருணா? உன் மனம் ஆறுதல் பெறும்......" என்று பலவாறாக அவளைத் தேற்றினர்.

நன்றாக விடிந்துவிட்டது. விஹாரத்தின் முற்றத்திலடிக்கும் வெய்யிலினால் கூடம் முழுதும் இருள் அகன்று வெளிச்சம் பரவியது.

உபகுப்தர், விஹாரத்தின் வாசலில் இருந்த அரச விருட்சத்தின் அடியில், அந்த மேடை மீது அமர்ந்துகொண்டார். ஏனைய பிக்ஷுக்கள் அவருக்குப் பின்னால் ஆவலாகக் கதை கேட்க வந்து அமர்ந்துகொண்டனர். மிருணாளினியும் குருதேவரின் எதிரில் மண்டியிட்ட வண்ணம் உட்கார்ந்து கொண்டாள்.

"குரு தேவா! உலகத்தில் சத்தியத்திற்கும் உண்மைக்கும் எங்குமே இடம் கிடையாதா?" மிருணாவின் கேள்வியைக் கேட்ட உபகுப்தர் புன்முறுவல் பூத்தார்.

"ஏன் அவ்விதம் எண்ணுகிறாய் குழந்தாய்? அவைகளுக்கு அழிவில்லை. இது அநுபவத்தில்தான் உனக்குத் தெரியும்"

"நான் நம்பவில்லை குருதேவா! இதோ என் கதையே அதற்கு ஒரு சான்று!"

2

"இன்றைக்குப் பத்து வருடங்களுக்கு முன்னால் எனக்கு உலகமே தெரி

யாது. இன்றுமட்டுமென்ன? நன்ருகத் தெரிந்துகொள்ளவில்லைதான். அப்போது பதினன்கு வயதுச் சிறுமி நான். என் தாய் தாஸி குலத்தில் வந்தவள். அவளுக்கு நான் ஒரே பெண்ணுதலால் சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தாள் என்னை. உஜ்ஜயினி நகர ராஜவீதியின் கோடியில் உள்ள சிறிய, அழகான தொரு வீடுதான் எங்களுடையது. தற்போதுள்ள அரசன் விமலாதித்தனின் தந்தை விக்கிரமதேவரால் அந்த வீடு என் தாய்க்குக் கட்டிக் கொடுக்கப் பட்டதாம். அதெல்லாம் எனக்கு முன்னர் தெரியாது. நான் தெரிந்துகொண்டதெல்லாம் என் தாய், அந்த வீடு, எனக்குச் சிறுவயது முதலே அவள் கற்றுக் கொடுத்துவந்த அந்த அற்புதப் பரத நாட்டியக் கலை முதலிய சிலதாம். அந்தக் காலத்தில் தினம் என் வீட்டுக்கு வருவாரும் போவாரும் கணக்கில்லை. பிரபுக்களும் சீமான்களும் என் தாயாரின் புன்னகையொன்றிற்கு ஏங்கிக் கொண்டிருப்பார்கள். வீட்டுக்கு வரும்போதெல்லாம் எனக்கு விதம் விதமான விலையுயர்ந்த பரிசுகள் கிடைக்கும். ஒரே கோலாகலமாகத்தான் இருக்கும் வீடு. என் தாய்மட்டும் அடிக்கடி என்னிடம் சொல்லுவாள்; ''அடி அசட்டுப் பெண்ணே! இந்த அற்பப் பரிசுகள் எல்லாம் என்ன பெரிது? நீ மட்டும் சாமர்த்திய சாலியாக இருந்தால் பொன்னும் மணியுமாக லட்சம் லட்சமாக உன் காலடியில் வந்து கொட்டச் செய்யலாமே!'' என்று! அவற்றின் உட்பொருள் எனக்கு அப்போது விளங்கவேயில்லை.

அன்று ஒரு நாள். சாயந்திர நேரம். என் தாய் என்னைப் பலவிதமாக அலங்கரித்தாள். வீடு எங்கும் கோலமும், தோரணமுமாக மங்கள கரத்துடன் விளங்கியது. எனக்குக் காரணம் தெரியவில்லை. ''என்னம்மா இன்று விசேஷம்?'' என்று கேட்டேன்.

அவள் சிரித்தாள். ''நீ கற்ற பரதநாட்டியக் கலை உலகறிய இன்று அரங்கேறப் போகிறது, மிருணு? இன்றிரவு உமா மஹேசுவரன் கோவிலில் நடராஜர் சன்னிதியில், அரசர் விக்கிரம தேவர் முன்னிலையில் 'அரங்கேற்றம்' நடைபெறப் போகின்றது. நன்ருக ஆடி நல்ல பெயர் எடுத்தால் உனக்கும் நல்லது, எனக்கும் பெருமை! என்ன?'' என்று வாஞ்சையுடன் என் கன்னத்தில் செல்லமாகத் தட்டிஞள். என் உள்ளம் பூரிப்படைந்தது!

மன்னர் விக்கிரம தேவர் சிறந்த அறிவாளி என்று கேள்விப்பட்டிருந்தேன். அவர் சபை பண்டிதர்களும் வித்துவான்களும் கலாரஸிகர்களும் நிரம்பிய இடம். அவர்கள் யாவரும் 'என்' அரங்கேற்று விழாவுக்கு வருவார்கள் என்று கேள்வி பட்டது முதல் என் சந்தோஷம் பதின் மடங்கு அதிகரித்தது. கூடவே ஒரு பயமும் சேர்ந்து கொண்டது. நன்ருக ஆடி நல்ல பெயர் எடுக்காவிட்டால் பெருத்த அவமானமல்லவா? ஆனல் என் நம்பிக்கை மட்டும் தளர்ந்து விடவில்லை. 'விர்'ரென்று ஓடிப் போய்ப் பெரிய நிலைக்கண்ணுடியின் முன் நின்று கொண்டேன்.

''ஆ! இவ்வளவு அழகியா நான்? அன்று வரை என் அழகைப் பற்றி நான் எண்ணியதே இல்லை. கவிகள் வருணிப்பார்களே, ''வாளிப்பான உடல். மருண்ட பார்வை; நீண்ட கரிய கூந்தல். மாம்பழக் கன்னங்கள்'' என்ற அவர்கள் வருணனை யெல்லாம் என்னைப் பற்றித்தான் என்று பெருமிதத்துடன் எண்ணினேன். என் கன்னங்கள் குழிவிழச் சிரித்து மகிழ்ந்தேன். உண்மையிலேயே எனக்கு என் அழகினுல் சற்றுக் கர்வம்கூட வந்து விட்டது.

அன்றிரவு உமாகேசுவரர் கோவிலில் 'எள் போட்டால் எள் விழாதபடி' அவ்வளவு கூட்டம். தீபாலங்காரங்கள் கண்ணைப் பறித்தன. சிற்சபேசன் சன்னிதிக்கெதிரில் நடனமாட, பிரத்தியேக அரங்கு ஒன்றைச் செய்திருந்தனர். அங்கிருந்த ஜனத் திரளையும், எங்கும் பிரகாசிக்கும் விளக்குகளையும், புஷ்பத் தோரணங்களையும் பார்க்கப் பார்க்க எனக்கு என்னையறியாமலே ஒருவிதப் படபடப்பு ஏற்பட்டது. என் தாய் தான் அருகில் இருந்து உற்சாகமூட்டி வந்தாள்.

நடு அரங்கில் நின்ற நான் சுற்று முற்றும் பார்த்தேன். எதிரே அழகானதோர் ஆசனத்தில் மன்னர் விக்கிரமர் உட்கார்ந்து என்னையே கண் கொட்டாது பார்த்துப் புன்முறுவலித்துக்கொண்டிருந்தார். பக்கத்தில் மந்திரிகள் பிரதானிகள் கலைஞர்கள்; மறுபுறம் ஊர்ப் பிரமுகர்கள், ஏனைய ஜன சமுத்திரம். எதிரே நடராஜர் ஜகஜ்ஜோதியாக, தாண்டவம் புரிந்து கொண்டிருக்கும் நிலையில் என்னைப் பார்த்துப் பரிகசிப்பது போலிருந்தது. என் மெய் சிலிர்த்தது. எல்லோரையும் கை கூப்பி வணங்கிவிட்டு நடனமாட ஆரம்பித்தேன். ''கல்-கல்!'' என்னும் என் கால்களில் கட்டியிருந்த சதங்கை யொலி கோவிலுள்ளே நன்கு எதிரொலி செய்தது. வாத்தியங்களின் இசையொலியும், நட்டுவஞரின் குரலும் சேர்ந்து கேட்கப் பிரும்மானந்தமாயிருந்தது.

''ஆத்ம திருப்தி'' என்று ஒன்று உண்டுஎன்றும் அது எல்லோருக்கும் ஏற்படாது என்

றும் பெரியவர்கள் சொல்வதுண்டு. அன்று தான் அதனுடைய முழுப்பொருளையும் நான் உணர்ந்துகொள்ள முடிந்தது. அவ்வளவு தூரம் ரஸித்து நடனமாடினேன். என்னைச் சுற்றியிருந்த, மன்னர், பிரதானிகள், கலா ரஸிகர்கள் யாவரும் என் கண்களுக்கு மறைந்து விட்டனர். தில்லையில் நடனமிடும் ஆனந்தத் தாண்டவம் தான் எதிரே சிலா ரூபத்தில் என் கண்களில் நின்றுகொண்டிருந்தது. என்னையறியாத ஓர் பக்திதான் அன்று என்னை அவ்விதம் மெய்ம்மறந்து ஆடச் செய்தது!

அன்று எனக்கு வந்து விழுந்த மலர்மாலைகளுக்கும் புகழ்மாலைகளுக்கும் அளவில்லை. மன்னர்விக்கிரமர் என் நடனத்தைச்சிலாகித்துப் பேசினார். "நம் நாட்டில் கைதேர்ந்த சிற்பிகள் இருக்கின்றனர். தமிழ், வடமொழி முதலிய பாஷைகளிலும் பாண்டித்யம்பெற்ற புலவர்களுக்கும் பஞ்சமில்லை. எல்லாக் கலை வல்லுநர்களும் இருந்தும் என் மனதில் வெகு நாளாக ஒரு குறை இருந்தது. 'பரத நாட்டியக் கலையை உத்தாரணம் செய்ய ஒருவருமில்லையே' என்ற குறைதான் அது. இப்போது சிறுமி மிருணாவின் நடனத்தைப் பார்த்தவுடன் அந்தக் குறையும் தீர்ந்து விட்டது. அவள் கற்ற இந்த அற்புதக்கலை அவளால் நன்கு நாள்தோறும் வளர இறைவன் அருளட்டும்" என்றார் அவர்! அன்று அவர் எனக்குப் பரிசாக அளித்த முத்துமாலையைப் பெரியதொரு பரிசாக எண்ணிப் பத்திரமாக வைத்திருந்தேன் பலநாள் வரை. முதற் பரிசல்லவா? இறைவர் நடராஜரே மன்னர் திருவுருவில் வந்து எனக்குப் பரிசளித்தது போன்றிருந்தது அது!

ஆனால் அதெல்லாம் கொஞ்சகாலம் தான்! பின்னர் தான் விளங்கியது என் தாயின் செய்கை! எங்கள் விட்டுக்கு முன்னைவிட அதிகமான பேர்கள் வர ஆரம்பித்தனர். என் தாயும் என்னைத் தன்னுடைய 'நீசத்தொழிலுக்கே இறங்குமாறு எச்சரிக்கத் தொடங்கினாள். அன்று கோவிலில் நடந்தது என் தாய் என் கலையை உலகறிய வேண்டிச் செய்த அரங்கேற்றமல்ல; "என்னையே" உலகுக்கு விளம்பரப்படுத்திப் பணம் சம்பாதிக்க வேண்டி நடத்திய 'பிரசார அரங்கேற்றம்' என்று அறிந்து கொண்டதும் என் நெஞ்சம் புண்ணாகியது. நான் கட்டிய மனக்கோட்டைகள் எல்லாம் தகர்ந்து மண்ணோடு மண்ணாயின.

3

கடைசி வரை என் பிடிவாதத்தைச் சாதித்தே விட்டேன். என் கலையைச் சிற்சபேசனுக்கே அர்ப்பணித்து விட்டேனென்றும் அவனுக்குத் தொண்டு செய்தே காலம் கடத்தப்போகிறேனென்றும் தீர்மானமாகக் கூறி விட்டேன் என் தாயிடம். "குலத்தைக் கெடுக்க வந்த சண்டாளி!" என்று என்னை அவள் சபித்துக்கொண்டிருந்தாள்.

வருடங்கள் ஐந்து ஓடி மறைந்தன. அன்று திருக்கார்த்திகை. உமாமகேசுவரன் ஆலயம் விசேஷ தீபாலங்காரங்களுடன் விளங்கியது. அன்றும் நடராஜர் சன்னிதானத்தில் அரசர் மேற்பார்வையில் என் நாட்டியம் நடக்க ஏற்பாடாகியிருந்தது. மேலும் அரசரின் ஒரே செல்வக் குமாரர் 'விமலாதித்தர்,' படிப்பின் பொருட்டு 'நலாந்தா' சர்வ கலாசாலை சென்றிருந்தவர் திரும்பி வந்து விட்டாரென்றும், அவரும்அன்று பிரசன்னமாயிருப்பார் என்றும், என் தாய் எனக்கு அறிவித்தாள். இந்த ஐந்து வருஷங்களில் பலதடவைகள் கோவிலிலும் அரச சபையிலும் நடனமாடி, 'நாட்டிய ராணி' என்று பட்டம் பெற்ற எனக்கு அன்றைய நிகழ்ச்சி சர்வ சாதாரணமாகத் தான் பட்டது!

அன்றிரவு கோவிலில் ஆடரங்கில் வந்து நின்றதும் முதல் தடவையைப்போல் பயந்து அல்ல, அலட்சிய பாவத்துடன் கூடியிருந்தவர்களைப் பார்த்தேன். என் கண்கள் அரசருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த இளைஞர் பால் சென்றதும் ஒரு கணம் ஸ்தம்பித்து விட்டேன். "ஆஹா! என்ன அழகு! என்ன கம்பீரம்! இவர்தான் இளைய அரசர் போலும்! புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?" என்றெல்லாம் என்னுள்ளம் அவரைப் பார்த்து வியந்தது. அதே சமயம் அவரும் என்னை உற்று நோக்குவது போல் தோன்றியது. என் தலை தானாகவே குனிந்து கொண்டது. என் கர்வம், அலட்சியம் எல்லாம் எங்குப் போயிற்றென்றே தெரிய வில்லை. எனக்கே ஆச்சரியமாயிருந்தது. ஓர் ஆடவன் கண்களுக்கு இவ்வளவு வசீகர சக்தியா? என் உடல் முழுதும் சொல்ல இயலாத ஓர் இன்ப லாகிரியில் மிதந்து கொண்டிருந்தது. அன்று நடனம் அற்புதமாக அமைந்து விட்டது என்று சொல்லவும் வேண்டுமோ?

குருதேவா! குருட்டு அதிர்ஷ்டம் என்று ஒன்று இருப்பதாகவும் அந்த 'அதிர்ஷ்டம்' எனக்கு அடித்துவிட்டதென்றும் ஊரார் பேசிக்கொண்டிருந்தனர். ஆனால் நான் நம்பவில்லை, இப்போது எனக்கு நன்கு நினைவில்லை, எப்படி நாங்கள் இருவரும் முதலில் தனியாகச் சந்தித்தோம், நட்பு எவ்விதம் பிரேமையாகக் கனிந்தது என்று! "பிடித்தாலும் பிடித்தாள், சரியான புளியங்

கொம்பைத்தான் பிடித்தாள்!" என்று ஊரார் கேலியாக என்னைப் பற்றியும் இளவரசர் விமலரைப் பற்றியும் பேசிக்கொண்டனர். நான் ஒன்றையும் இலட்சியம் செய்யவில்லை. என்னுடைய அழகிற்கும் கலைக்கும் அவரைத் தவிர வேறு யாரும் என் கணவனாக வர லாயக்குள்ளவர்கள் என்று எண்ணியதேயில்லை. என் தாய் இப்போதெல்லாம் என்னைச் சபிப்பதில்லை.. 'மகள் கெட்டிக்காரிதான்' என்று எண்ணியிருந்தாள்!

4

பின்னும் ஒரு வருடம் ஓடியது. அப்போது தான் அந்தத் துக்ககரமான சம்பவம் நடந்து விட்டது. தக்ஷிணத்தின் மீது படையெடுத்துச் சென்ற விக்கிரம தேவர் திரும்பவேயில்லை. வெற்றி கிடைக்கும் நேரத்தில் அரசர் போர்க்களத்திலேயே இறந்துவிட்டதாகக் கூறிக்கொண்டனர். நகரமே துக்கத்தில் ஆழ்ந்து கிடந்தது.

இரவு வெகு நேரமாகிவிட்டது. உறக்கம் வராமல் நான் வீட்டில் மெத்தைமீது புரண்டு கொண்டிருந்தேன். 'தந்தையை யிழந்த விமலர் எவ்வளவு வருத்தப்பட்டிருப்பார்' என்று என்னுள்ளம் எண்ணி வருந்தியது. அந்தச் சமயம் என் வீட்டுக் கேட்டைத் திறந்துகொண்டு யாரோ வரும் சப்தம் கேட்டது. என் நெஞ்சு 'திக்திக்'கென்று அடித்துக்கொண்டது. என் தாய் என்னிடம் வந்து விஷயத்தைச் சொன்னாள். எனக்கு ஒரு புறம் ஆச்சரியம், துக்கம் மாறி மாறித் தோன்றின. ஆம், விமலாதித்தர் தான் வந்திருந்தார்! ஓடோடியும் சென்று அவரை வரவேற்றேன்.

"ஏது பிரபு! இந்த நேரத்தில்............" அதற்குமேல் என்னால் ஒன்றும் கேட்கமுடியவில்லை. வார்த்தைகள் வெளிக்கிளம்பாமல் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது.

"மிருணா! தந்தையின் பிரிவால் சஞ்சலமடைந்திருக்கும் எனக்கு ஆறுதல் தரக் கூடியவர்கள் அரண்மனையில் ஒருவரும் இல்லை. அதனால் தான் இங்கு வந்தேன்...... நீயும் என்னை வரவேண்டாமென்றால் திரும்பி......" அவர் குரல் கம்மிப்போய்க் கரகரத்தது. ஏதோ யோசித்தவராகச் சட்டென்று திரும்பி வாசல் வரை சென்று விட்டார்! நான் ஓடிப்போய் வழிமறித்து, "என்னை மன்னித்து விடுங்கள் பிரபு! உள்ளே வாருங்கள்" என்று மன்றாடி அவரை உள்ளே அழைத்து வந்தேன்.

உள்ளம் நொந்து போயிருந்த விமலாதித்தரைப் பலவாறாகத் தேற்றினேன். கொஞ்சம் கொஞ்சமாக அவர் மனம் ஆறுதல் பெற்று வந்தார். அப்படியே என்னை ஆலிங்கனம் செய்துகொண்டு அன்று அவர்சொன்ன சொற்கள்! ஆஹா! ஏதோ சுவர்க்கத்தில் இருப்பது போன்ற பிரமைதான் எனக்கு ஏற்பட்டது!

"மிருணா! கண்ணே! ஏதோ விதி வசத்தால் என் தந்தை வீர சுவர்க்கம் எய்தி விட்டார். நான் விரும்பினாலும் விரும்பாவிடினும் நாளை ராஜ்ய பாரம் என் கைக்குத் தான் வந்து சேரும். உலகறிய உன்னை என் பட்ட மகிஷியாக்கி!......" அவர் வார்த்தைகள், வாக்குறுதிகள் யாவும் இன்னும் என் காதுகளில் எதிரொலித்துக்கொண்டிருக்கின்றன! கடைசியில் எதை நாடி என்னிடம் ஓடி வந்தாரோ, அதைப் பெற்றுக்கொண்டு சென்று விட்டார் அவர்! ஆம். என் 'பெண்மை'தான் அது!

பின்னர் ஒரு மாதத்தில் விமலாதித்தர் பட்டம் சூட்டிக்கொண்டார். என்னை அந்த வைபவத்திற்கு அழைக்கவேயில்லை. ஏன்? அன்றை இரவுக்கப்புறம் அவர் என் இல்லம் வருவதேயில்லை. பொன்னும், மணியும் அளவற்ற பொருளும் அவ்வப்போது வந்து கொண்டிருந்தன. ஆனால் அவையா எனக்கு வேண்டும்? அரசரின் அன்பு, காதல், இவற்றிற்காகவல்லவோ ஏங்கினேன்? அவர் என்னை மறந்துவிட்டாரென்றே தோன்றியது. முதன் முதலாக அன்று தான் என் கைப்பட அவருக்குக் கடிதம் எழுதினேன். பதில் ஒன்றும் கிடைக்கவில்லை. என் தவிப்புப் பின்னும் அதிகரித்தது. மற்றொரு கடிதம் எழுதி.—இல்லை! என் உள்ளத்தை அந்தக் கடிதம் மூலம் திறந்து காட்டி—எங்கள் வீட்டுத் தாதி மூலம் கொடுத்தனுப்பினேன். அதற்கு விமலாதித்தரின் காரியதரிசி எழுதிய பதில், என் உள்ளத்தைத் தூள் தூளாகச் சிதற அடித்து விட்டது.

"குலத் தொழிலை விட்டுக் கொம்புத்தேனுக்கு ஆசைப் படாதிருக்குமாறு அரசர் அறிவிக்கின்றார்!" என்பது தான் பதிலின் வாசகம்! அன்று தான் முதன் முதல் நான் வாய்விட்டு அழுதேன். அப்போது தான் அந்தத் துக்கத்தை அதிகரிக்கும்சம்பவம் நடந்தது! எனக்கு ஒரே ஆதரவாயிருந்த என் தாய் மண்ணுலகை நீத்துச்சென்றுவிட்டாள்!

தந்தையை இழந்து விட்ட அன்று ஆறுதல் பெற வேண்டி விமலர் என்னிடம் வந்தார். தாயையும் இழந்து அரசனுடைய அன்புக்கு ஏங்கிக் கடைசியில் ஏமாற்றமடைந்து உள்

ளம் நைந்து போயிருக்கும் எனக்கு ஆறுதல் கூற யார் வருவார்கள்? என்னுடைய உண்மை நிலை அன்று தான் எனக்குப் புரிந்தது. தாயாரின் பிரிவுத் துயரைக் கொஞ்சம் கொஞ்சமாக மறந்தேன். ஆனால் அரசர், அவர் செய்கை, என்னை மறக்க முடியாமல் செய்து விட்டது. "குலத் தொழிலாம்! கொம்புத் தேனும்! பாவி! என்னைக் கடைசியில் வஞ்சித்து விட்டாரே! என்றெல்லாம் புலம்பினேன். மனத்துயர் ஆற வழியில்லை.

"அரசனுக்கு ஒரு நீதி, ஆண்டிக்கு ஒரு நீதியா? இதை விடுவதில்லை. இரண்டில் ஒன்று முடிவாக வேண்டும். அரச சபைக்கே சென்று நியாயம் கேட்கிறேன். அவ்வளவு பண்டிதர்களுக்கும் புலவர்கள், பெரிய மனிதர்களுக்கும் முன்னால் துச்சமாகப் பேசி என்னை வெளியே அனுப்பி விடுவாரோ பார்க்கலாம்!" என்று திடமாகத் தீர்மானம் செய்து கொண்டேன்.

மறு நாள் காலை நேரம். நான் என்னைப் பல விதமாக அலங்கரித்துக் கொண்டு, ஒரு மூடு பல்லக்குக் கொண்டு வரச் செய்து அரண்மனைக்குப் புறப்பட்டு விட்டேன் தன்னந்தனியாக!

நான் எதிர்பார்த்தபடியே அரச சபையில் எனக்கு உள்ளே நுழைய அனுமதி மறுக்கப்பட்டது. என் வருகையை அரசனுக்கு அறிவிக்கச் சென்றவன் ஒரு லிகிதத்தைக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்தான்.

"நீ சபைக்கு வராமல் வீட்டுக்குத் திரும்பிச் சென்றால் ஆயிரம் பொன் பரிசளிக்கப் படும்!" என்று அதில் கண்டிருந்தது. என் உள்ளம் குமுறியது. "ஆயிரம் பொன் வேண்டாம்! அரச சபையில் நியாயம் தான் வேண்டும்" என்று ஆத்திரத்துடன் சொல்லி யனுப்பினேன். கடைசியில் ஒருவாறு உள்ளே செல்ல அனுமதி கிடைத்தது.

சபையினுள் நுழைந்தவுடன் என் உள்ளம் 'பட பட' வென்றடித்துக் கொண்டது. மந்திரி பிரதானிகள் சூழ விமலாதித்தர் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருந்தார். கலைஞர்கள், பண்டிதர்கள், புலவர்கள், பெரியோர்கள் யாவரும் என்னையே வெறித்து நோக்கினார்கள். எனக்குச் சொல்ல இயலாத ஒரு விதக் கூச்சமேற்பட்டு நாணத்தால் உடல் குன்றியது. "கடைசியில் நம் கதி இவ்வாறு ஆகி விட்டாதா!" என்று எண்ணும் போது அழுகையே வந்து விட்டது.

"என்ன வேண்டும் அம்மணி!......" என்று கேட்டார் மந்திரியொருவர்.

"நியா......ய...ம்!" என் தொண்டையை அடைத்துக் கொண்டது துக்கத்தினால். கண்கள் கரகர வென்று நீரைச் சொரிந்தன. ஒன்றுமே அறியாதவர்போல அரசர் வீற்றிருந்ததைக் காண என் உள்ளம் கொதித்தது.

" யார் என்ன குற்றம் செய்தார்கள் ?"

அசாதாரணத் துணிச்சலொன்று அச்சமயம் எனக்கு ஏற்பட்டது! கண்களைத் துடைத்துக்கொண்டு, மிடுக்குடன் நின்றேன்.

"அரசரவர்களையே கேளுங்கள்!"

"ஆ ஆ!!..." சபையிலிருந்தவர்கள் ஒவ்வொருவரும் வாயைப் பிளந்தனர். அரசரையும், என்னையும் மாறி மாறிப் பார்த்தனர். விமலரின் சிரம் குனிந்தது.

"அரசர் தங்களையே சொல்லச் சொல்லுகிறார்!" அந்தப்பதில் என்னைப் பிரமிக்க வைத்தது! என்ன துணிச்சலான வார்த்தைகள்?

"ஒரு பெண்ணைக் காதலிப்பதாகவும், பின் உலகறிய மணம் செய்து கொள்வதாகவும் பசப்பு வார்த்தைகள் சொல்லி ஏமாற்றி அவளை நடுத்தெருவில் கைவிட்டு வரும் ஆடவனுக்கு என்ன தண்டனை?" நான்தான் பேசினேனா, அல்லது என் உள்ளக் குமுறல்கள் தான் அவ்வார்த்தைகளாக உருப்பெற்று வந்தனவா, என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது!.

"இடம், பொருள், ஏவல், குலம், கோத்திரம், இவற்றைப் பொறுத்திருக்கின்றது இந்தக் கேள்வியின் பதில்!"

என்றால் நம்பவே முடியவில்லை. கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டு பார்த்தேன்; ஆம்! விமலாதித்தர் தான் பேசினார் இவ்விதம்!

"பெண், அவ்வளவு தூரம் ஏமாந்தது அவள் பிசகுதானே?"

சபையிலிருந்தோர் யாவரும் வாயடைத்து அரசரையே பார்த்துக் கொண்டிருந்தனர். எனக்கு அழுகை பீரிட்டுக் கொண்டு வந்தது. "என்னை வஞ்சிக்காதீர்கள் அரசே! தங்கள் வாக்குறுதிகளைக் காப்பாற்றுங்கள், ஏழைக்கொரு நீதி, மன்னருக்கொரு நீதியா?"

என் கதறலைக் கேட்டு அத் துன்மார்க்கர் ஏளனச் சிரிப்பு சிரித்து,

"அரசனுக்கு ஆசை நாயகிகள் பலர் இருப்பார்கள்! ஆனால் 'பட்டமகிஷி' ஒருத்திதான். அது நீயாக இருக்கமுடியாது" என்றார். நெஞ்சம் துணிந்து தம் வாக்குறுதிகளையெல்லாம் காற்றில் பறக்க விட்டுவிட்டார்.

"பாவி! என்னை வஞ்சனை செய்தாயே! பெண் பாவம் பொல்லாது! உனக்கு நரகம் தான் கிட்டும்!" என் கூக்குரலைக் கேட்ட சபையோரின் முகங்கள் எல்லாம் வெளிறிவிட்டன. அரசர் 'சரே'லென்று உள்ளே சென்று விட்டார்.

என் தலை சுழன்றது. நிற்கவும் முடியவில்லை. ஏமாற்றத்தால் உடைந்த உள்ளம் சபையில் ஏற்பட்ட அவமானம் யாவும் என்னை நிலைகுலையச் செய்தன. மயக்க முற்று மூர்ச்சையாகி விட்டேன்.

நினைவு வந்து பார்த்தபோது உஜ்ஜயினி நகரின் எல்லையைத் தாண்டி ஒரு வண்டியில் என்னைக் கிடத்திச் சில வீரர்கள் கொண்டு போவது தெரிந்தது.

அரசனை அவமதித்த குற்றத்திற்காக நான் நாடு கடத்தப் பட்டேன் என்றும் என் சொத்துக்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டன வென்றும் அவர்கள் எனக்களித்த அரசனுடைய லிகிதம் அறிவுறுத்தியது.

இப்போது சொல்லுங்கள் குரு தேவரே! நான் தாஸி குலத்தில் பிறந்தது என் குற்றமா? அரசனைக் காதலித்தது குற்றமா? நான் நியாயம் வேண்டிச் சபையில் கதறிய போது அங்குள்ள அறிவாளிகள், பெரிய மனிதர்கள் யாவர் வாய்களும் ஏன் அடைபட்டு கிடந்தன? உலகத்தில் உண்மை, சத்தியம் எல்லாம் ஒழிந்துவிட்டனவா? எனக்கு ஏன் இந்தப் பெரிய தண்டனை? உரிமையைக் கேட்டதற்காகவா?"

உள்ளம் குமுற மிருணாளினியின் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் பிக்ஷுக்கள் எல்லோருடைய உள்ளத்தையும்கலக்கிவிட்டன! மௌனமாகக் கண்ணீர் விட்டனர்! குருதேவர், உபகுப்தர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டார்.

"யாருக்கு, எது உரிமை குழந்தாய்? அரசனுக்குத் தான் மக்கள், அவர்கள் சொத்துக்கள் எல்லாம் உரிமை! உனக்கும் எனக்கும் என்ன உரிமை இருக்கிறது அங்கே?!"

"இதற்குப் பிராயச்சித்தம் செய்தாக வேண்டும் குருதேவா?"

மிருணாவின் கேள்வி உபகுப்தரின் கண்களை அகல விரியச் செய்தது."

"என்ன பிராயச்சித்தம் குழந்தாய்?"

'பழிக்குப் பழிதான் இதற்குப் பிராயச்சித்தம் பிரபோ! விமலாதித்தர் சுகமாக வாழப்போவதில்லை! என் சாபம் பலிக்கட்டும்!"

உபகுப்தர் காதுகளைப் பொத்திக் கொண்டார்.

"பொறு! மிருணா! 'பழி' என்ற சொல்லுக்கே இங்கு இடமில்லை குழந்தாய்! துன்பம் செய்தவர்களுக்கும் இன்பம் செய்வது தான் புத்தன் போதிக்கும் பிராயச்சித்தம்! அரசன் உன் உடலை அழித்துவிட்டானேயன்றி உன் உள்ளத்தை அழிக்க முடியாது. நீ வாழ்வில் பட்ட கஷ்டங்கள் போதும். அவனவன் செய்த வினையை அவனவன் அனுபவித்தே தீரவேண்டும். அது உங்கள் இருவருக்கும் பொருந்தும். மனதைத்திடம்செய்து கொள். உன் வாழ்வு இனி புனிதமாகட்டும் புத்தன் சன்னிதானத்தில். விலை கூறவேண்டி தொழிலுக்காக உன் தாய் உனக்குப் 'பரத நாட்டியம்' என்ற அற்புதக் கலையைக் கற்றுக் கொடுத்தாள்; கலையைக் கலைக்காகவே, எங்கும் நிறைந்தஇறைக்காகவே அர்ப்பணம் செய்யுமாறு நான் உபதேசிக்கிறேன் மிருணா! நான் சொல்லும் வாசகம் இப்போது உனக்குப் புரியாது. இந்தப் பௌத்தமடம். சுற்றுப்புறம் முதலியவற்றால் முதலில் உன் உள்ளத்தீ ஆறட்டும். பின்னர் நடைபெறவேண்டியதைப் பற்றி யோசிக்கலாம். காமக் குரோத எண்ணங்களுக்கு இனி உன் உள்ளத்தில் இடமிராது. கோழையாகாதே! எழுந்திரு. கோழைகளுக்கு இம்மையுமில்லை, மறுமையிலும் இடமில்லை."

உபகுப்தரின் உபதேசம் மிருணாளினியின் மனதைக் கொஞ்சம் ஆறுதல் பெறச் செய்தது.

5

ஒரு மாதம் ஓடியது. ஆசிரம வாழ்க்கை மிருணாளினியைப் புத்துயிர் பெறச் செய்தது. உபகுப்தர் அவளுக்கு அவ்வப்போது பல நீதிகளையும் உண்மைகளையும் உபதேசித்து வந்தார். அவளுடைய உள்ளத்தீ முற்றிலும் ஆறிவிட்டதுபோல் தோன்றியது. படிப்படியாகத் துறவு மார்க்கத்தில், தொண்டாற்றும் பணியில், தனக்கென வாழாப் பிறருக் குழைக்கும் வழியில் அவள் உள்ளம் ஈடுபட்டுச் சாந்திபெற ஆரம்பித்தது.

ஒரு நாள். சாயந்திர நேரம். மிருணாளினி நர்மதையாற்றங்கரையில் உட்கார்ந்து கொண்டு அஸ்தமன சூரியனின் அழகை ரஸித்துக்கொண்டிருந்தாள். அவள் மனம் அமைதியடைந்திருந்தது.

"மிருணாளினீ!" என்று கூப்பிட்டுக்கொண்டே உபகுப்தர் வந்தார் வேகமாக. அவரைத் தொடர்ந்து பிக்ஷுக்கள் பலர் ஓடி வந்தனர். மிருணாளினி திரும்பினாள்.

"மிருணா! "பெண் பாவம் பொல்லாது" என்றாயல்லவா ஒருநாள்? உன் சாபம் பலித்துவிட்டது!" வறண்ட சிரிப்புடன் சொன்னார் குருதேவர்.

"என்ன? என்ன நடந்தது குருதேவா?" என்றாள் மிருணாளினி என்றுமில்லா நடுக்கத்துடன்.

"தான் செய்த வினையின் பயனை இப்போதே பெற்று விட்டான் அரசன் விமலாதித்தன். அரண்மனைப் பூங்காவில் கருநாகம் தீண்டி இன்று காலையில் அரசன் காலமாகிவிட்டானாம்!"

"என்...ன? இறந்து விட்டாரா?" மிருணாவின் வார்த்தைகள் தடைப்பட்டன. 'ஓ' வென்று கதறி அழ ஆரம்பித்து விட்டாள் அவள்!

உபகுப்தருக்கு ஒன்றுமே விளங்கவில்லை. "பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்ற வைரம் வைத்திருந்தவளா அரசன் இறந்ததற்கு உள்ளம் குமுறி அழுகிறாள்?" அவருக்கு மட்டுமல்ல: ஏனைய பிக்ஷுக்களுக்கும் அவள் அழுகை விளங்காத ஒரு புதிராக இருந்தது!

ஆனால், உபகுப்தரின் அறிவுக்கும் எட்டாத வகையில், மிருணாளினியின் உதரத்தில் வளர்ந்துகொண்டு வந்த அந்த மூன்று மாதச் 'சிசு' புதிருக்கு விடையளிப்பது போல் யாவரையும் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது!

ஸ்டெரிலைன்

மாதவிடாய் கோளாறுகள் உங்கள் வாழ்க்கையின் ஆரோக்யத்தையும், இன்பத்தையும் பாதிக்கின்றன. இனி துயரப்பட வேண்டிய அவசியமில்லை. நவீன ஆராய்ச்சிகளின் விளைவான 'ஹார்மோன் எஸ்ட்ரின்' எனும் மருந்தின் சக்தி நிறைந்த ஸ்டெரிலைன் உங்கள் தொல்லைகளை நீக்க, சுலபமான முறை அளிக்கிறது. இன்றே ஸ்டெரிலைன் உட்கொள்ளத் தொடங்கவும். ஆரோக்ய வாழ்வு மீண்டும் உங்களைத் தேடி வரும்.

'ஸ்டெரிலைன்' 3 விதங்களில் கிடைக்கிறது.

சிறிய பாட்டில் ரூ. 8. பெரிய பாட்டில் ரூ. 15.
ஸூபர் ஸ்டெரிலைன் ரூ. 13. பெரியசைஸ் ரூ. 25.
நீண்ட நாளைய கேஸ்களுக்கு ரூ. 45.

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

ELLIS & MARTYN
Kothari Mansion, Opp. G. P. O.
Post Box No. 414 (C. V.)
Fort, BOMBAY-1.

Coffee
Ours for Quality
RAW ROAST
OR
GROUND
GANESH & CO
(MADRAS), LTD.
Retail Branches
285, China Bazaar :: 71, Pondy Bazaar T. Nagar,
MADRAS.

குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்
டோங்கரேயின் பாலாம்ருதம்
K.T. டோங்கரே அண் கோ., பம்பாய்-4.

லக்ஷியக் கனவு

கே. சுந்தரம்மாள்

"எங்கேயோ படித்துக்கொண்டிருக்கிறான்" என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள், அவள் அவ்வூருக்கு வந்த புதிதில். ஐந்து வருஷங்களுக்கு முன் ஒரு தடவை வந்திருந்த பொழுது ஒரு நாள் வீதியில் பார்த்தது. சரியானபடி கூடப் பார்க்கவில்லை. விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது, நடுவில் வந்து விளையாட்டைக் கலைத்துவிட்டு, வேடிக்கையாக ஆளுக்கு ஒரு குட்டுக் குட்டிவிட்டுச் சென்றவனென்பது மட்டுமே அவள் நினைவில் தோன்றினதே தவிர அவனது உருவம் அவ்வளவாக நினைவில் தோன்றவில்லை. அதனால் அவனைப் பார்த்துவிட்டே போகலாம் என்று தோன்றினாலும், பருவத்தின் நிலைமை, அவ்விடமிருப்பதற்கு இடமளிக்கவில்லையாதலினால், 'பவானி! அப்படியானால் நான் வீட்டிற்குப் போய் வருகிறேன்" என்றாள்.

"அண்ணா வந்தால் நீ பார்க்க வேண்டாமா அப்புறம் போகலாம்" என்று சொல்லும்பொழுதே அவ்விடம் வந்தாள் மி. மாமி. அவளைக் கண்டதும், "அம்மா லீலா வீட்டிற்குப் போகிறேனென்கிறாள்" என்றாள்.

"லீலா! எங்கள் சங்கர் வரப்போகிறான். ஐந்து வருஷத்திற்குப் பின் இன்று தான் பார்க்கப் போகிறேன் என் பிள்ளையை. நம்ம வீட்டுக் குழந்தைகளில் நீ ஒருத்தி என்றே நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். அவன் வந்த பிற்பாடு சாப்பிட்டுவிட்டே நீ போகலாம்" என்றாள் மி. மாமி.

"ஜல் ஜல்" என்ற சலங்கைச் சப்தத்துடன் இரட்டை மாட்டு வில் வண்டி வந்து நின்றது. குழந்தைகளெல்லோரும் "அண்ணா வந்துவிட்டான்" என்று ஓடினார்கள்.

லீலா ஹாலின் ஒரு கோடியில் உட்கார்ந்து ஒரு புஸ்தகத்தைப் படிக்கத் தொடங்கினாள்.

"அரை மணி நேரம் வரவேற்புக் குதூகலமான பேச்சிலும், தாயாரின் அன்பான உபசரிப்பிலும் கழிந்த பின்பு, குழந்தைகள் பின் தொடர ஹாலுக்குள் வந்த சங்கரைக் கண்டு எழுந்து நின்றாள் லீலா.

"இந்தப் பெண் யாரம்மா?" என்றான் அவளைப் பார்த்தபடி நின்ற சங்கர்.

"நன்றாகப் பார். அவளை உனக்குத் தெரியவில்லையா?" என்றாள் தாயார்.

இன்னும் சற்று உற்றுப் பார்த்துவிட்டு, தெரியவில்லை என்பதாகத் தலை ஆட்டினான். அவன் தன்னை உற்றுப் பார்ப்பதைக் கண்டதும் சட்டெனத் தலையைக் குனிந்து கொண்டாள் லீலா.

"சாம்பு மாமா பெண் லீலா" என்றாள்.

"ஓ, அப்போது நான் பார்க்கும் பொழுது அழுக்குப் பாவாடையும் பறட்டைத் தலையுமாக வீதியில் விளையாடிக் கொண்டிருந்தவள் இன்று எவ்வளவு மாறிவிட்டாள். நிறம் கூடன்னா வெளுப்பா ஆகிவிட்டாள். ஏதோ அப்ஸர ஸ்திரீ நம்ம வீட்டு ஹாலில் தவறி நுழைந்து விட்டாள் என்று நினைத்தேன்" என்று சிரித்தபடி கூறினான்.

தலையைக் கவிழ்த்த வண்ணம் நிற்கும் லீலாவைப் பார்த்து. "என்ன லீலா, இப்படி வெட்கப்படுகிறாய். படித்த பெண் தைரியமாகப் பேச வேண்டாமா? அன்று பள்ளிக் கூடத்தில் அத்தனை பேருக்கு மத்தியில் எவ்வளவு தைரியமாகப் பேசினாய்?" என்றாள் மி. மாமி.

"அப்படியொன்றுமில்லை மாமி, இப்பொழுது தானே பார்க்கிறேன்." என்று சொல்லிவிட்டு, "நமஸ்காரம் மிஸ்டர்" என்று கை குவித்தாள் பயத்தினால் உடலெல்லாம் வியர்க்க.

"ஓ தாங்க்ஸ்" என்றான் சங்கர்.

லீலா உள்பட யாவரும் கொல்லெனச் சிரித்தார்கள்.

"எம்மா சாம்பு மாமா............ அப்பா எழுதியிருந்ததாக ஞாபகம்" என்று நிறுத்தினான்.

"ஆமாம்பா, அதையேன் கேட்கிறாய்? லீலாவின் அம்மாவும் போய் இரண்டுமாதமாகிவிட்டது."

'அட பாவமே! அப்படியானல் இப்பொழுது நம்ம வீட்டில்தானே வைத்துக்கொண்டிருக்கிருய்?''

"நான் தான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளுகிறேன். ஆனல் படிப்பதற்கு வசதி வேண்டும். என்பதற்காக, எச்சூழ

மாமி துணையுடன் அவர்கள் வீட்டிலேயே இருக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன்'' என்றாள்.

''லீலா, கவலைப்படாமல் நன்றாகப் படி. நாங்களெல்லோரும் உன்னைக் கைவிட மாட்டோம். இதுதான் உன் வீடு'' என்று நினைத்துக்கொள்'' என்றான்.

நன்றியறிதலுடன் அவனை நோக்கிவிட்டு, ''வெரி தாங்க்ஸ்'' என்றாள்.

மறுபடியும் யாவரும் சிரித்தார்கள்

''பரவாயில்லையே'' என்று சிரித்தான் சங்கர்.

தமாஷாகப் பேசிக்கொண்டு சாப்பாடு முடிந்ததும் விடை பெற்றுக்கொண்டு வீட்டிற்குச் சென்றாள் லீலா.

அதன் பிறகு சாயங்காலம் லீலா வந்ததும், பொழுது போக்கில் சங்கரும் கலந்து கொள்ளுவான். சிறு வயதில் தாயாரிடம் கொஞ்சம் பிடில் வாசிக்கக் கற்றுக்கொண்டான். பிறகு விஞ்ஞானத் துறையிலிறங்கிய பிறகு பாட்டு அவ்வளவாக அவனால் ரஸிக்கப்படவில்லை. இப்பொழுது லீலா வாசிக்கும் பொழுது தானும் பிடிலை வைத்துக் கொண்டு, எட்டிக்குப் போட்டியாகத் தாறுமாறாக வாசிப்பான்.

''இது என்ன சங்கர்! அவளை வாசிக்கவொட்டாமல் செய்கிறாயே. எழுந்து அந்தப் பக்கம் போ'' என்று அன்பாகக் கடிந்து கொள்ளும் தாய்க்குப் பதில்,

''அப்பவெல்லாம் எனக்குச் சொல்லிக் கொடுத்தாய்; நான் நன்றாக வாசிக்கவில்லையா? பிறகுதான் அந்த வழியில் மனம் செலுத்தத் தொடங்கினதும் சங்கீதத்தில் கவனக் குறைவு ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது லீலாவுடன் சேர்ந்து வாசிக்கலாமா வென்று பார்க்கிறேன். ஏன் லீலா, உனக்கு இடஞ்சலா செய்கிறேன்'' என்றான்.

''அப்படி யொன்றும் நினைக்கவில்லையே நான்'' என்று சிரித்த வண்ணம் கூறினாள்.

''நல்ல கேள்வியப்பா. நீ எனக்கு இடைஞ்சல் செய்கிறாயென்று உன்னிடம் சொல்லுவாளா''?

''சரியம்மா, நாளை முதல் அவள் ட்யூஷன் முடிந்த பின்பு அவளிடமே நான் ட்யூஷன் சொல்லிக் கொள்ளுகிறேன்''

''எத்தனை தேசங்கள் சுற்றி வந்தாலென்ன? உன் விளையாட்டுப் பேச்சு மட்டும் துளிக்கூட மாறவில்லை''

''பிறவிக் குணத்திற்கு மட்டை வைத்துக் கட்ட முடியாது என்று நீ தானே சொல்லுவாய்.'' எனச் சிரித்தான். இப்படியாக ஒரு மாதம் சென்றது. லீலாவிற்கும் தாயாரைப் பற்றிய துக்கம், பள்ளிக்கூடம் செல்வதிலும், சங்கருடைய விளையாட்டுப் பேச்சுக்களைக் கேட்பதிலும் அதிகமாக வருத்தாமலிருந்தது. முன்பெல்லாம் சிலநாள் இரவு வேளையில் தாயாரை நினைந்து வருந்தும்பொழுது எச்சுமு தேற்றுவாள். தற்சமயம் ஒரு மாதமாக அவ்விதம் வருந்தாமல் படித்தபின்பு, சங்கர் செய்யும் விளையாட்டுச் செய்கை, பேச்சு இவைகளைப் பற்றி எச்சுமு மாமியினிடம் சொல்லுவதிலேயே தூக்கம் வரும் வரை பொழுது கழியும்.

எல்லாம் பருவத்தின் கோளாறுகள். மி. மாமி இதன் விளைவை எதிர்பார்த்துத்தான் நடப்பாள். எப்படியாவது இப்பெண் நல்ல இடத்தில் சேர்ந்தால் சரி என்ற நினைப்பில்,

''அவன் குழந்தை முதலே இப்படித் தான் செய்வான். பேசாத பேரையும் பேச வைத்து விடுவான். கள்ளம் கபடே கிடையாது. பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளை என்ற கர்வமே கிடையாது. அன்னிக்கு ஜலங்கொட்டப் போகிறேன், மாமி ஸௌக்யமா? என்ன பேசமாட்டேங்கறேளே ''என்றான். ''பேசாமே எனக்கென்னப்பா வந்தது. நாங்கள்ளாம் பட்டவிசாரத்திற்கு உங்கம்மா வயத்துலே பாலைவார்த்து எங்களிடம் இப்படி பேசுவாயா என்று தவங்கிடந்தோம்'' என்று சொல்லி விட்டு வந்தேன். மி, மாமி மனம் வைத்தால் உன்னையே தன் நாட்டுப் பெண்ணாக்கிக் கொண்டு விடுவாள். அதனால் பிள்ளை உன்னிடம் பிரியமாக நடந்தால் அந்த மாமிக்கு மிகவும் திருப்திகரமாகவேயிருக்கும். அவள் குணம் தங்கம்'' என்று முடித்தாள்.

''போங்கோ மாமி, என்ன வெல்லாமோ சொல்லுகிறீர்களே. யாருமற்ற அனாதையெங்கே? அழகு, உத்யோகம், பணம் இவை யாவும் பொருந்திய அந்தக் குடும்பமெங்கே? ஏதோ இவ்வளவு உதவி செய்கிறார்களே. அதற்கே நன்றி செலுத்த முடியாது என் ஜன்மாவில். அதிக ஆசை அதிக நஷ்டத்தைத் தான் கொடுக்கும். நான் கல்யாணம் இப்பொழுதைக்குச் செய்து கொள்ளுவதாக இல்லை. படித்து விட்டு வாத்தியார் வேலைக்குப் போகப் போகிறேன். பிறகு பணமில்லாமல் என்னை யார் விவாகம் பண்ணிக் கொள்ளுகிறார்களோ அவரைத் தான் ஏற்றுக் கொள்ளுவேன். மெள்ள மி. மாமியினிடம் உத்தரவு வாங்கிவிட வேண்டும்'' என்றாள்.

சுந்தரி பாய் லக்ஸ் டாய்லட் சோப்பின்

புதிய பரிமளத்தை விரும்பும் இன்னுமொரு நட்சத்திரம்

சினிமா நட்சத்திரங்களின்
அழகு தரும் சோப்

LTS. 209-23 TM

"போடி அசட்டுப் பெண்ணே. கரும்பு தின்னக் கூலியா வேண்டும்? அப்படி யேதாவது அவர்கள் பிரஸ்தாபம் பண்ணினால் இது மாதிரி ஏதாவது உளறாதே. சரி என்று சொல்லி விடு. வருகிற சீதேவியை உதைத்துத் தள்ளாதே" என்றாள்.

"என்னமோ, நடக்க நடக்கப் பார்ப்போமே" என்றாளே தவிர, மனதிற்குள் 'அந்தப் பாக்யம் கிடைத்து விட்டால்? ஆஹா! நம்மைவிடப் பாக்யசாலி யார்?' என்றது அவளது அந்தராத்மா?

மறு நாள் சாயங்காலம் மி. மாமியினிடம் லீலா தன் டீச்சர் கொடுத்ததாக ஒரு கடிதத்தைக் கொடுத்தாள். அதில், "தாயார் இறந்து போன துக்கத்தில் பள்ளிக்கூடம் வராதிருந்ததில், அவள் முதல் பிரைஸ் வாங்குவாள் என்று எதிர்பார்த்த எங்களுக்கு மிகவும் ஏமாற்றமாகி விட்டது, கடந்த டெஸ்டில். அதனால் அவளுக்குக் கொஞ்சம் ட்யூஷன் அவசியம். நானே சொல்லிக் கொடுக்கிறேன். பணம் ஒன்றும் வேண்டாம். சாயங்காலம் வந்து போக உத்தரவு கொடுத்தால் போதும்" என்று எழுதியிருந்தது.

"ஊரை விட்டுத் தள்ளியிருக்கிறது பள்ளிக் கூடம். நீ ட்யூஷன் சொல்லிக் கொண்டு வருவதானால் நன்றாக இருட்டி விடுமே?"

"அது தான் நானும் யோசித்தேன். நான் இனிமேல் பாட்டில் காலம் செலவிடாமல் அந்த நேரத்தைப் படிப்பதில் செலவிடுகிறேன் என்று சொன்னேன். அவர்கள் ட்யூஷன் அவசியம் என்று வற்புறுத்துகிறார்கள். நான் முதல் பிரைஸ் வேண்டாமென்றாலும், அது அவர்களுக்கு அவமானமாம்" என்றும் முடிக்கும் சமயம் அவ்விடம் வந்த சங்கர்,

"யாருக்கு? எதற்கு? எந்த விடத்தில் அவமானம்?" என்றான்.

விஷயத்தை விளக்கினாள் தாயார்.

"பூ, இது தானா! நான் சொல்லிக் கொடுக்கிறேன் லீலா. ஆறு மாத லீவையும் இவ்விடத்தில் தான் செலவிடப் போகிறேன். அதற்கப்புறம் ஒரு வருஷத்திற்குப் பக்கத்தில் தான் உத்யோகம். அப்பொழுது வாரம் தப்பாமல் வருவேன். அதனால் S. S. L. C. முடியுமட்டும் ட்யூஷன் வாத்தியார் ஸ்தானம் என்னால் வஹிக்க முடியும்."

"சங்கர், நான்கூட அப்படித்தான் நினைத்தேன். ஆனால் நீ என்ன சொல்லுவாயோ எங்கெல்லாமோ என்னவெல்லாமோ கஷ்டப் பட்டு விட்டு வந்தால், இவ்விடத்திலும் தொல்லையா என்று கேட்டு விடுவாயோ என்று பயந்தேன்."

"உலகத்தையும் சமூகத்தையும் சீர்திருத்த, தங்கள் வாழ்நாள் முழுவதையுமே செலவிடுகிறார்கள் பூஜ்யர்கள். என்போன்றவர்கள் இதையாவது செய்ய வேண்டாமா?"

"லீலா, இன்றைக்கே தொடங்கி விடுகிறேன். புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு வா" என்று அவ்விடத்திலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

லீலா பாடம் சொல்லிக் கொள்ளும் பொழுது, குழந்தைகளெல்லாம் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொள்வார்கள். அவர்களும் ஏதாவது கேட்பார்கள்: வாசிப்பார்கள். ஆகப் பாடம் சொல்லுமிடமானது, குழந்தைகள் சண்டையும், கூக்குரலும் சிரிப்புமாக ஒரே கலாட்டாவாகத் தோன்றும். இப்படியே ஒருவாரம் சென்றது. ஒருநாள் பாடம் சொல்லிக்கொள்ளும் சமயம் அவ்விடம் வந்த மி. மாமி சற்று நேரம் கவனித்தபடி நின்றாள். பிறகு,

"சங்கர்! இதென்ன சந்தை இரைச்சலில் குடியிருந்து கெட்டடையோ" என்பது போலிருக்கிறதே. இதில் எப்படி அவள் வாசிக்க முடியும். இவைகள் சொன்னால் கேட்கா. நாளைமுதல் அவள் வீட்டிற்கு நீ போய்விடு. அதுதான் நல்லது" என்றாள்.

'நான்கூட அப்படித்தான் நினைத்தேன். பிறகு நீ என்ன சொல்லுவாயோ? என்று பேசாமலிருந்து விட்டேன்" என்றான்.

"இதில் என்னத்தைச் சொல்லக்கிடக்கிறது? நாளைமுதல் அவ்விதம் செய். இவர்களுக்குத் தெரியாமல் போய்விடு. இல்லையானால் அங்கும் வந்து பிராணனை வாங்கும்."

"மறுநாள் இவன் அவள் வீட்டிற்குச் சென்றபொழுது புஸ்தகத்துடன் தயாராக மேஜையருகில் உட்கார்ந்திருந்தாள். இவனைக்கண்டதும், "வாருங்கள் ஸார். இப்படி உட்கார்ந்து கொள்ளுங்கள்" என்று நாற்காலியைச் சுட்டிக் காண்பித்துவிட்டு உள்ளே சென்று ஒரு டம்ளரில் சூடான காப்பியைக் கொண்டு வந்து அவன் முன்னுள்ள மேஜைமீது வைத்தாள்.

"இது என்னத்திற்கு? உனக்கு வீண் சிரமம்"

"சிரமமா? மனமுவந்து கொண்டு வந்தேன். இன்றைக்கு முதலாவதாக இவ்விடம் பாடம் சொல்லவந்ததற்காகக் குருதக்ஷிணை கொடுக்கவேண்டாமா? என்னாலா

னது இதுதான். மற்ற யாவும் தங்கள் சொந்தம்.”

“பரவாயில்லையே! குருதக்ஷிணை! ஒருடம்ளர் காபியில். இதைக்கொடுத்து ஏமாற்றி விடலாம் என்று பார்க்கிறாயோ? பணம் கட்டிப் பரீக்ஷையில் ராஜதானிக்கே முதன்மையாகப் பாஸ் செய்ய வேண்டும். பிறகுதான் குருதக்ஷிணை பெற்றுக்கொள்ளுவேன். சாமானியமாக வாங்கிக்கொள்வேனா? ஏமாற மாட்டேன்” என்று சொல்லிக்கொண்டே காபியைக் குடித்தான்.

இச்சொற்கள் அவள் மனதில் அர்த்தமில்லாத ஓர்வித இன்பவுணர்ச்சியை உண்டாக்கின. அந்த நிலைமையில், “என்தேகத்தில் ஓடும் ஒவ்வொரு ரத்தத்துளியும் உங்கள் தாயாரின் அன்பின் சக்தியினால் இயங்குகின்றது. நான் உங்களை ஏமாற்றுவது என்பது எப்படி முடியும்?” என்று சொல்லிய வண்ணம் மேஜை மறு பக்கத்திலுள்ள நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.

“ஓ தேவலையே. நான் வந்த புதிதில் ஊமை போலிருந்தாய். கேட்ட வார்த்தைகளுக்குக்கூடப் பதில் சொன்னால் வாய் முத்து உதிர்ந்து விடுமோ என்ற ரீதியில் எண்ணிப் பேசுவாய். ஒரு வார சிக்ஷையில் தைரியமாகவும், அர்த்த புஷ்டியுடனும் நன்றாகப் பேசுகிறாயே! சந்தோஷம்” என்றான்.

“தவறாகப் பட்டால் மன்னித்து விடுங்கள். யாவும் பழக்கத்திலேற்படுவதுதான் சகஜமாகி விடுகிறது. அந்த நிலைமையில் தான் பதில் சொன்னேன்.”

“மன்னிப்பா? எதற்கு? பெண்கள் இப்படி இருக்க வேண்டு மென்பதுதான் என் விருப்பம்! எனது லக்ஷியப் பெண்ணாக இருக்கிறாய், அவ்வளவு தான். சரி, புஸ்தகத்தை எடு” என்றான்.

தினம் ஒரு மணி அவகாசம் பாடம் படித்து விட்டுப் பிறகு மி. மாமி வீட்டிற்கு வந்து, பாட்டுச் சொல்லிக் கொண்டு போக வேண்டு மென்பது ஏற்பாடு. ஒரு மாதம் வரை அந்தப்படி நடந்து வந்தது. பிறகு ஒவ்வொரு நாளைக்கு ஏதாவது படிக்கும் பொழுது அதில் ஒரு விஷயத்தை எடுத்துக் கொண்டு சர்ச்சையிலிறங்கி விடுவார்கள். அந்தச் சமயம் மணி ஆவதையே கவனிக்க மாட்டார்கள். இங்கிலீஷும் தமிழுமாக இவர்கள் பேசும்போது வாயைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருப்பாள் எச்சுமு மாமி.

சில நாள் வேலையிருந்தால் வெளியில் சென்று விடுவாள். அந்தச் சமயம் இவர்கள் இருவர் மட்டுமே இருப்பார்களானாலும் ஓர் வித சலனமுமின்றிப் படிப்பு ஒன்றிலேயே கவனம் செலுத்தி வந்தார்கள். சர்ச்சை நடந்த நாட்களில் “அம்மா! இன்று இந்த விஷயத்தைப்பற்றிச் சர்ச்சை செய்தேன். நாழிகையாய் விட்டது. அதனால் பாட்டுச் சொல்லிக் கொள்ள வர வேண்டா மென்று சாப்பிட்டு விட்டுப் படுத்துக் கொள்ளச் சொல்லி விட்டு வந்து விட்டேன்” என்று சங்கரே சொல்லி விடுவான்.

பரீக்ஷைக்கு ஒரு வாரமே இருந்தது. ரோமியோவும் ஜூலியட்டும் உப பாடமாக இருந்தபடியினால் அன்று அதைப் பற்றி டீச்சர் கொடுத்திருந்த குறிப்பிற்கும், புஸ்தகத்திலுள்ளதற்கும் பொருத்தமாயில்லை யென்று, விஷயத்தை விளக்கிச் சொல்லிக் கொண்டிருந்தான் சங்கர்.

பதுமைபோல் தரையைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள். அவள் ஞாபகம் பாடத்திலில்லை யென்பது அவனுக்குத் தெளிவாயிற்று. சட்டென ஒரு கேள்வியைக் கேட்டான்.

திடுக்கிட்டவளாக, “என்ன?” என்றாள்.

“பரீக்ஷை நெருங்கி விட்டதினால் வால் மாத்திரம் பாக்கியாக இருக்கிறதோ?” என்றான் புன்சிரிப்புடன்.

“சிமிண்ட் கட்டடம். எலி வர இடமிருக்காது. தாங்கள் மன்னிக்க வேண்டும். தாங்கள் சொல்லுவதை அலக்ஷியம் செய்வதாக நினைத்துக்கொண்டு விடாதீர்கள். இந்த வகுப்பிற்கு இந்தப் பாடத்தை வைத்தார்களே, இந்த யோசனை எந்த மேதாவியின் மூளையில் உதித்ததோ? புரியவும் செய்கிறது. புரியவும் இல்லை. எழுதியவர் மஹா கவி தான். கதையும் அற்புதம் தான். இவை B. A. மாணவ மாணவிகள் என்றால் அனுபவித்துப் படிக்க முடியுமோ என்னமோ என்று சிந்தனையில் இருந்து விட்டேன், அவ்வளவு தான்.”

“அப்படியல்ல. இந்த வகுப்பிற் படிக்கும் மாணவ மாணவிகள் யௌவனத்தை எட்டிப் பார்க்கும் தருணம் வாய்ந்தவர்களல்லவா? இதிலிருந்தே அவர்களது வாழ்க்கைப் பாதையை நேர்மையான வழியில் திருப்ப வேண்டு மென்று தான் ஏற்படுத்தியிருப்பார்கள்”

“மாணவ மாணவிகளெல்லாரும் ரோமியோவும், ஜூலியட்டுமாக இருக்க வேண்டு மென்றா?”

“ஆமாம்”

"எந்த விஷயத்தில்"

"வாழ்க்கையிலே முக்யத்வம் பெறுகிறது காதல். இந்த ஒரு விஷயத்தில் எல்லா மதமும் ஒரே அபிப்ராயத்தையே பல மாதிரியாக வெளியிடுகின்றன. அந்தத் தெய்விகக் காதலைச் சித்திரித்துக் காட்டுவது ரோமியோ ஜூலியட்டின் வாழ்க்கைச் சித்திரம். படிக்கப் படிக்க அற்புதமாகத் தோன்றுகிறது கவியின் கற்பனை. மனதிற்கு எல்லையற்ற ஆனந்தத்தை உண்டாக்குகிறது."

'மன்னிக்க வேண்டும். சற்று முன் நான் அதைத் தான் சொன்னேன். உங்களுக்கு அனுபவிக்கச் சக்தியிருக்கிறது, என்னிடத்தில் அது இல்லை யென்று."

"அந்தச் சக்தியை உண்டாக்குவது தான் என்னுடைய வேலை தெரிந்ததா?

"எதற்கு அந்தச் சிரமம், மனப்பாடம் செய்து வரும் கேள்விகளுக்கு விடை யளித்து விட்டால் சரி. பார்க்கவேண்டும், அது நிச்சயம் கிடைத்து விடும். மற்றப்படி காதல் என்பதுபற்றிச் சர்ச்சை எதற்கு?"

"அதென்ன அப்படிச் சொல்லி விட்டால்? நாமும் உலகத்தை யொட்டினவர்கள் தாம். நாமும் ரோமியோ ஜூலியட்டின் நிலைமையை அடையக்கூடியவர்கள் தாம்.

"நாமும் என்றால்?" என்று அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"நாம் தான் உலகம். உலகம்தான் நாம். ஒவ்வொரு ஆணும் பெண்ணும் ரோமியோவும் ஜூலியட்டுமாக இருப்பதில் நன்மை தானே உண்டாகும். நம்முடைய வாழ்க்கைப் பாதையும் அவ்வித அன்பில் திகழ வேண்டுமென்பதே என் விருப்பம்."

"என் மனம் அவைகளை விரும்ப வில்லை. ரோமியோ ஜூலியட், லைலா மஜ்நூன், அம்பிகாபதி அமராவதி, இவர்கள் காதற் கதையை உலகம் போற்றுகிறது என்றாலும் காதல் நிறைவேறாமல் காலனை யணுகின அவர்கள் காதலைப் பின்பற்றுவதில் நன்மை எப்படி உண்டாகும்? நிறை வேறாது என்ற நிலைமை ஏற்பட்டால் அதை உதறுவதே நன்மை தரும், என்று அறிந்திருந்தும் அதைச் செய்ய முடியாமல் போவது ஏன்?"

"அதுதான் காதலின் சூக்ஷ்மம். மன மொத்த அன்பு. எந்த நிலைமையிலும் மாறாமலிருக்கும் பாசம்"

"இவ்வளவையும் அனுபவத்தில் கண்ட பின்பு தானே.

"உண்மைக் காதல்" என்று வாழ்க்கையின் ராட்டினத்தை சுற்றவிடமுடியும். முன்னோர்கள் அவ்விதப் பண்பாட்டில் வாழ்க்கையைத் தொடங்கினதாகத் தெரியவில்லையே. அவர்கள் தாம்பத்யத்தில் குறைவுள்ள அம்சம் எதுவும் தென்பட்டதாகத் தெரியவில்லையே"

"வாழ்க்கையைத் தொடங்குமுன்போ? தொடங்கின பிறகோ எப்படியானாலும் ஒருவருக்காக மற்றவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும், எந்த நிலைமையிலும் ஒரே மாதிரியான பாசம் படருவதினாலும் ஏற்படும் அன்பு கலந்த இன்பமானது எதற்கும் ஈடாகாது."

"இவையெல்லாம் ஏட்டுச் சுரைக்காய் தானோ? அல்லது சொந்த அனுபவத்தின் பேரில் தான் சொல்லுகிறீர்களோ?"

"ஓகோ! அந்த ஓலையை நான் திருப்பினால்?"

"எப்படி?"

"நிறைவேறாக் காதல் என்பதை"

"அப்படிப்பட்ட அனுபவம் இதுவரையில்லை. இனிமேலும் வரவேண்டாம். ஏதோ மனதில் தோன்றியதைச் சொன்னேன். மன்னித்துக் கொள்ளுங்கள்"

"அதேபோல் நானும் மனதில் தோன்றுவதை வெளி ஆதாரங் காட்டிச் சொன்னேன். ரோமியோ ஜூலியட், அம்பிகாபதி அமராவதி, லைலா மஜ்நூன், இவர்களின் காதல் நிறைவேறவில்லையென்று நீ நினைப்பது தப்பு. அவர்கள் காதல் புற உலகத்தில்தான் அவ்விதம் தோன்றும். அவர்கள் காதல் அழியாத அமரத்வம் பெற்றது. காதலின் ஜோதியில் கலந்து, இன்பவாரிதியில் மிதந்து, இணைபிரியாக் காதலர்களாக அழியாத உலகில் வாழ்க்கை நடத்துகிறார்கள். அதனால்தான் எவ்வளவு காலமானாலும் அவர்களது காதலின் சிறப்பு லக்ஷியஸ்தானத்தை அடைந்தது."

"அடேயப்பா! காதலைப்பற்றி என்ன வெல்லமோ சொல்லுகிறீர்களே. உங்கள் வாழ்க்கையில் காதல் ஒன்றிற்குத்தான் முக்ய ஸ்தானம் போலும். அமரத்வம் பெற்ற அம்மூன்று ஜோடிகளுக்குப் பிறகு உங்கள் ஜோடி உலகில் முக்யஸ்தானம் பெறும்போலும். ஆனால் அவர்களைப் போலாகாமல் இந்த உலகத்திலேயே நிறைவேறிய லக்ஷியமாக இருக்கும்படி ஈசன் அருள் செய்யட்டும். இதில் உங்களுடன் பங்கு பெறும் பாக்கியவதி கொ[illegible]து

வைத்தவளாகவே இருக்கவேண்டும் அந்தப் பாக்கியவதி யாரோ?" என்றாள் தரையைப் பார்த்த வண்ணம் புன்சிரிப்புடன்.

"ஒரு அம்மா பெற்ற பெண்."

"அம்மா பெற்றபெண் என்பது யாவரும் அறிந்த விஷயம். அந்தப் பெண் ஏற்பட்டு விட்டாளா? இனிமேல்தான் ஏற்படப் போகிறாளா?" என்பதற்காகக் கேட்டேன்.

"கடந்தமாதம் வரை ஏற்படவில்லை. கடக்கப் போகிற மாதத்தில் ஏற்படலாம். ஒரு சமயம் அந்தப் பாக்யவதி லீலாவாக அமையச் செய்யலாம். விதி இருக்கிறதே அதன் விசித்ரச் செயலை ஒருவரும் மீற முடியாது. முன்கூட்டி அறியவும் முடியாது."

"நீங்கள் இப்படியெல்லாம் பேசுவதானால் நாளை முதல் ட்யூஷனில்லாமலே பாடம் படிப்பது மேல். காதலைப் பற்றிய கேள்வித்தாள் கொடுக்க மாட்டார்கள். அதனால் அதைப் பற்றிய சர்ச்சையில் நான் பங்கு பெற வேண்டாம்" என்றாள் பொய்க் கோபத்துடன்.

"அடேயப்பா, இதற்கென்னத்திற்கு இவ்வளவு கோபம். விதியின் விளையாட்டிற்காகச் சொன்னேன். ஒரு கதை

கேட்டிருக்கிறாயா? ஒரு ராஜாவின் பெண் குதிரைமேல் ஏறிக்கொண்டு உலாவச் சென்றாளாம். குதிரை ஓட்டுபவன் பின்னோடு ஓடிக்கொண்டிருந்தானாம். வழியில் ஒரு வாழை மரத்தின்மீது ஒருவர் உட்கார்ந்து ஒரு கயிற்றில் முடிச்சுப் போட்டுக்கொண்டே இருந்தாராம். அதைக் கண்ட ராஜகுமாரி குதிரைக்காரனை நோக்கி, "அவர் ஏன் அப்படிச் செய்கிறாரென்று கேட்டுவா" என்றாள். திரும்பி வந்த ஆள் சொல்லத் தயங்கினான்.

"என்னடா விஷயம்?" என்று அதட்டினாள்.

"அவர் உலகத்தில் இந்தப் பெண்ணிற்கும் இந்த ஆணிற்கும் தான் கல்யாணம்" என்று முடிச்சுப் போடுபவராம். அந்த முடிச்சு அது தானாம்" என்றான்.

"அப்படியானால் எனக்கும் யாருக்கும் முடிச்சு என்று கேட்டுவா?" என்றாள்.

"அது அவராகப் போடுவதில்லையாம். விதி அவருக்குச் சொல்லுமாம். அதன்படி தான் போடுவாராம்"

"அது சரியடா, நான் சொன்னதைக் கேட்டுவா?"

"கேட்டேன்........." என்று நிறுத்தினான்.

"என்ன சொன்னார்?"

"..............."

"அடேய் என்னடா சொன்னார் சொல்லுடா"

"எப்டிச் சொல்லுவது?"

"எதுவானாலும் சொல்லுடா. பரவாயில்லை பயப்படாதே"

"கோபிக்க மாட்டீங்களே?"

"இல்லை, சொல்லு"

"உங்களுக்கும் எனக்கும்........" என்று முடிப்பதற்குள், "அட பாபி, நீ இருந்தால் தானே" என்று குதிரைச் சவுக்கினால் அவன் நினைவு தப்பும் வரை அடித்துவிட்டுத் திரும்பிப் பாராமல் சென்று விட்டாளாம்.

இரண்டு வருஷம் கழித்து அவளுக்கும் ஒரு சக்ரவர்த்திக்கும் கல்யாணமாயிற்றாம். பள்ளியறையில் முதலில் சந்திக்கும் பொழுது அவன் நெற்றியில் பொட்டின்கீழ் ஓர் காயம் பட்ட வடுவு தென்பட்டதைப் பார்த்து, "இது என்ன வடு" என்றாளாம்.

"நீ அடித்தது" என்றானாம்.

"உங்களை முன்னால் படத்தில் தானேபார்த்தேன். பிறகு இன்று தான் நேரில் பார்த்தேன். அப்படியிருக்க நான் அடித்தது என்றால்? பரிகாசம் செய்யாதீர்கள். உண்மையைச் சொல்லுங்கள்" என்றாளாம்.

"உனக்கும் எனக்கும் முடிச்சுப்போடுகிறார் விதி புருஷன் என்று சொன்னதற்கு என்னை அடித்து விட்டுப் போனாயல்லவா? நான் கண் விழிக்கும் பொழுது ஒரு யானையின் துதிக்கைக்குள் இருந்தேன். சரி அப்படிப் பிழைத்து இப்படிச் சாகிறோம் என்று நினைத்து, கண்ணை மூடிக்கொண்டேன். சற்று நேரத்தில் மங்கள வாத்தியங்கள் கோஷித்த சப்தம் கேட்டு விழித்தேன். ஒரு பெரிய கூட்டத்தின் முன் என்னை விட்டது யானை. உடனே ஒரு பெரியார் என்னிடம் வந்து, 'இவ்வூர் அரசர் சந்ததியில்லாமல் இறந்து விட்டார். வழக்கப்படி பட்டத்து யானையை அனுப்பினோம். அது உங்களைக்கொண்டு வந்தது. தயவு செய்து எங்களுடன் வந்து அரசரின் ஈமக்கிரியைகளை நடத்திவிட்டுப் பட்டமேற்று ராஜ்யபாரத்தை வஹிக்க வேண்டும் என்றார்." அவ்வளவு தான் என்றானாம்.

"விதியை வெல்ல முடியாது ஸ்வாமி. என்னை மன்னியுங்கள்" என்று அவன் காலில் விழுந்தாளாம். உடனே அவன் தூக்கி அடித்த கைக்கு முத்தம் என்றானாம்.

"விதி என்பதைத் தாங்கள் நம்புகிறீர்களா?"

"நீ நம்புகிறாயா இல்லையா?"

"என் அனுபவத்தில் நம்பித்தானே யாக வேண்டியிருக்கிறது"

"அப்பொழுது உன் கேள்வி அனாவசியம் தானே"

"உபமான உபமேயத்துடன் விஷயங்களைத் தெளிவாக்கும் சக்திபெற்ற தாங்கள் கூட விதியை நம்புவீர்களா என்ற சந்தேகத்தினால் அக்கேள்வி எழுந்தது. மேலும், உங்களைப்போன்ற சிலர் லக்ஷியம் அது இது என்று எதையெல்லாமோ சொல்லிக்கொண்டு பகல் கனவு காண்கிறார்களே, ஏன் எங்கள் ஸ்கூல் மாணவிகளிடையே கூட இவ்விவாதங்கள் எழும்பும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு லக்ஷியத்தைப்பற்றிப் பேசுவார்கள்; தீர்மானமும் செய்வார்கள்; சபதமேற்பார்கள். அப்படிப்பட்ட லக்ஷியவாதியானால் விதியை நம்புவது என்பது எப்படி என்று தான்."

"ஓ, நான் லக்ஷியவாதி தான். 'வாலிபர் சங்கம்' என்று ஒன்று ஏற்படுத்திக் கொண்

டிருக்கிறோம். மூன்று மாதத்திற் கொரு முறை கூடுவோம். ஒவ்வொரு தடவை ஒவ்வொரு ஜில்லாவைத் தேர்ந்தெடுப்போம். எங்கள் சங்கத்தின் நோக்கம் புரட்சிகரமான விஷயத்தில் இறங்கக்கூடாது;சாத்வீக முறையில் சமூகத்தையொட்டிச் சீர் திருத்தங்கள் செய்வதில் நாங்கள் சபதம் எடுத்துக் கொள்ளுவது; விதவா விவாகம், வயது சென்றவர்கள் சிறு பெண்களை மணக்கக்கூடாது என்பது; திக்கற்றவர்களுக்கு ஒரு வழிகாட்டுதல்; தவறுதலுக்காகச் சமூகத்தினின்றும் தள்ளப்பட்டவர்களுக்குத் தவறை உணர்ந்து நல்வழியில் நடந்துமறுமலர்ச்சி பெறும்படி செய்தல். இவைகளே எங்கள் முக்ய நோக்கங்கள். அதில் விதிக்கு மதிப்புக்கொடுப்பவன் நான். சமூகத்தின் செய்கைகளைக் கொண்டே விதி விளையாடுகிறது என்பது என் சித்தாந்தம். ஆனால் தவறுதலை விதியென்று பார்த்துக் கொண்டிருக்கும் மனப்பான்மை யுடையவனல்ல. சீர்திருத்தமும் விதியின் செயலினாலேயே நடைபெறும்'' என்பதுதான்.

''நல்லவிதி. இவ்விவாத மேற்படுத்தியதும் விதியின் செயல்தான் போலும். அரசியல் விஷயமாகப் போராட உங்களை விதி அனுமதிக்கவில்லை போலும்''

''சுதந்திரம் பெற, அன்னியனை விரட்ட மாபெருந்தலைவர்கள் பாடுபடுகிறார்கள். அதற்காக ஏதோ எங்களாலான பணிகளை அவர்களுக்குச் செய்வோம். ஒரே விஷயத்திற்காக எல்லோரும் முயற்சி செய்து அபிப்பிராய பேதமேற்படுத்துவதைக் காட்டிலும் இச்சிறு பணிகளினால் ஐக்ய பாவத்தை ஏற்படுத்தலாம் என்பது எங்கள் நோக்கம்''

''விதி விசித்ரம் தான். இன்று ரோமியோ ஜூலியட், குதிரைக்காரன் ராஜகுமாரி, லக்ஷ்யம் அரசியல் வரை பேசும்படி செய்தது. பாடத்திலிருந்து வெகு தூரம் சென்று விட்டோம் என்றாலும் ஒரு விஷயம் நிம்மதி. புனிதமான உங்கள் சங்கத்தின் ஆதரவில் அனாதையான எனக்கு நிச்சயம் உதவி கிடைக்கும்'' என்றாள்.

''நீ எப்படி அனாதையாவாய். எங்கள் குடும்பத்திலொருத்தி நீ. அதிலும் என் பிரிய லீலா எப்படி அனாதையாக முடியும். இந்த வார்த்தை இனி மேல் நீ சொல்லக் கூடாது. நினைக்கவும் கூடாது. நீ அப்படிச் சொல்லும் பொழுது என் ஹ்ருதயம் மிக்க சங்கடமடைகிறது. நான் என் பிரிய லீலாவாக உன்னை நினைக்கிறேன்'' நீ என்னை எப்படி நினைக்கிறாய்? ''

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் மேலவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்ட்.

178043

"எனது பிரிய, அன்பார்ந்த குருவாக நினைக்கிறேன்" என்றாள் புன்சிரிப்புடன்.

"அவ்வளவு போதும்." என்றான் புன்சிரிப்புடன்.

புஸ்தகத்தை மூடி வைத்தாள்

"ஏன் புஸ்தகத்தை மூடி விட்டாய்? படிப்பில் மனம் செல்ல வில்லையோ?"

"இன்று எவ்வளவோ விஷயங்களைத் தெரிந்து கொண்டாய் விட்டது. அந்த ஆராய்ச்சியில் மனம் லயிக்கும் பொழுது இந்தப் புஸ்தகத்தில் எப்படி கவனம் செலுத்த முடியும்?"

"அப்படியானால் நான் சென்று வரட்டுமா?"

"தங்கள் சித்தம் என் பாக்யம்"

"குடிக்க ஜலம் கொண்டு வருகிறாயா?"

"கட்டளையிட்டால் சந்தோஷமாக இருக்கும்" என்று சொல்லி விட்டுச் சென்றாள்.

"அவள் ஜலம் கொண்டு வரும் பொழுது நடு ஹாலில் நின்று கொண்டிருந்தான்: ஜலத்தைக் கையில் கொடுப்பதா கீழே வைப்பதா என்ற பிரச்னை வந்து விட்டது. இது வரை மேஜை பக்கத்திலிருப்பதினால் அதன் மேல் வைத்து விடுவாள். இன்று சிந்தனைக்கு இடமேற்பட்டு விட்டது என்றாலும் சட்டென அவன் கையில் கொடுக்கவே மனம் அனுமதியளித்தது. லோட்டாவை வாங்கும் பொழுது தற்செயலாக நிமிர்ந்தாள். இருவர் கண்களும் உறவாடின. சட்டெனக் குனிந்து கொண்டாள்.

"வருகிறேன் லீலா" என்று சொல்லிவிட்டுச் சட்டெனச் சென்று விட்டான்.

"அன்று இரவு என் பாக்யமே பாக்யம், எவருக்குண்டிந்த சிலாக்யம்" என்று சாயங்கால சம்பவத்தின் குதூகலத்தில் பாடுவதை அறியாத எச்சுமு மாமி, "லீலா மாமி இதைச் சொல்லித் தந்தாளா? அருணாசலக் கவி பாட்டு மாமி பாடினா இன்றை முழுவதும் கேட்கலாம்" என்றாள்.

பிறகு இது மாதிரியான தர்க்கங்கள் எவ்வளவோ முறை செய்திருக்கிறார்கள், ஆனாலும் ஒருவர் மனதிலிருப்பதை மற்றவர் அறியாதது போலவே நடந்து வந்தார்கள். அவ்வருஷம் பரீக்ஷையில் முதன்மையாகத் தேறினாள். பரிசுகளும் கிடைத்தன.

"லீலா, முதல் பிரைஸ் கிடைத்தது பற்றி மிக்க சந்தோஷம்" என்றான் சங்கர்.

"எல்லாம் உங்கள் முயற்சியினால் தான் அன்று ரோமியே ஜூலியட் சினிமாவிற்கு அழைத்துச் சென்றிரா விட்டால் இந்தப் பிரைஸ் வாங்கியிருக்க முடியாது. அதில் எவ்வளவோ விஷயங்களை அறிந்து கொண்டேன். கைம்மாறு கருதாத இவ்வுதவிக்கு எது ஈடாகும்" என்றாள்.

"ஈடு நீயும் உனது கல்வியும் தான். ரோமியோ ஜூலியட் இவ்வருஷம் படித்தது கொஞ்சம். அடுத்த வருஷம் தான் அவர்களைப் பற்றிய முழு அம்சத்தையும் படிக்க வேண்டும். இனி மேல்.........இந்த ஊரில் அதிகம் தங்க முடியாது, உத்யோகத்திற்குச் செல்ல வேண்டும். வாரம் ஒரு முறை அவசியம் வந்து விடுவேன். இன்னும் இரண்டு மூன்று முறை அப் படத்தைப் பார்த்தாயானால் விஷயங்கள் அநேகம் விளங்கும். நான் வரும் சமயங்களில் சமீபத்திலுள்ள எந்த ஊரில் நடந்தாலும் அழைத்துச் செல்லுகிறேன்.

"அவ்வளவு சிரமம் அனாவசியம்" என்று நினைக்கிறேன்."

"அவசியமென்று நான் நினைக்கிறேன்"

"பிறகு சொல்ல என்ன இருக்கிறது?"

'இருக்கிறது ஒரு விஷயம்"

'என்னவோ?"

"இந்த லீவில் ஒரு மாதம் தான் நான் இவ்விடமிருப்பேன். அது வரை மத்யானம் இரண்டு மணியிலிருந்து மூன்று மணிக்குள் நான் இவ்விடம் வருவேன். ஆங்கிலத்தில் நீ அதிகத் தேர்ச்சி பெறக் கூடிய அருமையான புஸ்தகம் இரண்டு இருக்கின்றன. அதை இந்த ஒரு மாதத்திற்குள் உனக்குக் கற்பிக்கப் போகிறேன்!"

"மூன்று மணியிலிருந்து எத்தனை மணி வரையிலும்?"

அந்தக் கணக்குச் சொல்ல முடியாது. எனக்கிஷ்டமான வரை, உனக்கு அலுப்புத் தட்டும் வரை என்று வைத்துக்கொள்ளேன்"

"என்றைக்கு அலுப்புத் தட்டினவளாக நடந்துகொண்டேன். உங்கள் முன்னால் உட்கார்ந்திருக்கும் பொழுது சுற்றுப்புறமே என் கவனத்தில் தோன்றுவதில்லையே; அப்படியிருக்க..........."

"என் நிலைமையும் அவ்விதமிருப்பதினால் தான் இதில் சிரத்தை எடுக்கத் தோன்றுகிறது. இதுவரை அலுப்புத் தட்டினவளா

கக் காட்சியளிக்கவில்லை. இனிமேல் பருவத்தின் கோளாறு..............."

"இப்படியெல்லாம் பரிகாசம் செய்தால் நான் உங்களிடம் பேசமாட்டேன்" என்று பொய்க் கோபத்துடன். முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

"அட, நிஜமாகவா கோபம். சரி பேச வேண்டாம், படித்தால் போரும். நான் சொன்னபடி செய்வாயா?"

"இந்த விஷயத்தில் கேள்வியே அனாவசியம்"

"அப்படியல்ல. அம்மா மூன்று மணிக்குப் பாட்டுக் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்கிறாள்"

"நீங்கள் நேரத்தை மாற்றிக்கொண்டு விடுகிறது."

"பாட்டுக்கு முக்யஸ்தானம் கொடுக்க இது சமயமல்ல"

"அதை நீங்களே சொல்லிவீட்டால் மாமி சரி யென்று சொல்லிவிடுகிறார்."

"அப்படி எடுத்துச் சொன்னால் என்ன நினைப்பாளோ வென்று அஞ்சுகிறது என் மனம்."

"அஞ்ச வேண்டிய அவசியமேயில்லை. நினைப்பவராக இருந்தால் பாடம் சொல்லிக் கொடுக்க இவ்விடம் வரும்படி அனுமதியளித்திருக்க மாட்டார்கள்."

"அது எப்படியானாலும் எனக்காக இந்த உதவி செய்ய மாட்டாயா?"

"எந்த உதவி? வேடிக்கையாக இருக்கிறதே என்னிடத்தில் நீங்கள் உதவி கேட்பது."

"நீயாக எதாவது சாக்கு ஏற்படுத்திக் கொண்டு என்னிஷ்டத்தை நிறை வேற்ற வேண்டும், பெண்கள் மனம் வைத்தால் நடக்காத விஷய முண்டா?"

"இது தலையைச் சுற்றி மூக்கைப் பிடிக்கும் செயல். நேரான வழியிலேயே மாமி சம்மதமளிப்பார். ஆனாலும் உங்கள் விருப்பம் எதுவானாலும் செய்யக் கடமைப்பட்டவள் நான். ஸ்கூலில் டீச்சர் ஓர் குறிப்பு எடுக்கச் சொன்னார். அதை இரவில் செய்து கொள்ளலாம். உங்கள் மனோபீஷ்டத்திற்காக மூன்று மணி சமயத்தை மாமிக்குச் சொல்லி அனுமதி வாங்குகிறேன். சரி தானா?"

"அஃது தான் வேண்டும் எனக்கு. சரி பாஸ் செய்ய வைத்ததற்குப் பரிசு எங்கே?"

"பணங்கட்டி, ராஜதானிக்கே முதன்மையாக வரும்பொழுதன்றோ வாங்கிக்கொள்வதாகச் சொன்னதாய் ஞாபகம்." என்று சிரித்தபடி கூறினாள்.

"அது தக்ஷிணையன்றோ, பரிசு?"

"சரிதான். தக்ஷிணை பரிசு இரண்டும் கொடுக்க என்னிடம் என்ன இருக்கிறது?"

'இருப்பதைக் கொடுத்தால் போரும்"

"தற்சமயம் ஸ்வாதந்தரிய மற்றவள், பராதீனம். அதனால் ஸ்வாதந்தரியம் ஏற்படும்பொழுது எதுவும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன்."

"ஓ. அப்படியா? சரி. உன்னிஷ்டம்." நான் வரட்டுமா?"

"உம்" என்று தலையை அசைத்தாள். அவன் சென்றதும், "தேவி! இதென்ன பேதைமை. அறிந்தும் அறியாதது போல் நடப்பது! இதில் அவர் தான் முதல் பரிசு வாங்குவார் போல் நடந்து வருகிறார். விதி, அது என்ன செய்யப் போகிறதோ. தாயே! நீ தான் தஞ்சம்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு 'தாயே ஏழைபால் தயை செய்வாயே' என்று பாடிய வண்ணம் எச்சுமு மாமி பக்கத்தில் வந்து படுத்துக் கொண்டாள்.

(தொடரும்.)

கண்ணாடி



K. V. சௌந்தரராஜன்

பலருக்குத் தெரிந்த கதை. மேல் நாட்டில் 'நர்ஸிஸஸ்' என்னும் ஒரு இளைஞன், வெகுகாலத்துக்கு முன்பு இருந்தானாம். அவன் ஒரு நாள் பூஞ்சோலையில் தடாகத்தில் சலனமற்ற தண்ணீரில் தன் வனப்புமிக்க உருவத்தைக் கண்டானாம். அதை ஒரு கட்டழகியின் தோற்றமென எண்ணி, 'வா, வா,' என்றழைக்க 'அவளும்' அவனை வா வென்றழைப்பது போல் தோன்றியதாம். அவன் 'அவளுடன்' கொஞ்சினால் 'அவளும்' அவனுடன் கொஞ்சினாளாம். அவன் கோபமாக மூஞ்சி காட்டினால், அந்த 'ஜாலக்காரியும்' அவ்வண்ணமே செய்தாளாம். இளைஞன் தன் 'காதலியை' அடைய முடியாமல் தண்ணீரைக் கலைத்து 'அவளை' வெளிப்படுத்த முயன்றபோது 'அவள்' மறைந்தாள். அவளைப்பற்றிய இன்ப எண்ணங்களில் மனதை அலையவிட்டு அங்கேயே ஊணுறக்கமின்றி, நீரைப்பார்த்த வண்ணமே காலம் கடத்தி, இறுதியில் உடல் மெலிந்து மாண்டானாம் அவ்விளைஞன். அவ்விடத்தில் அவன் பெயர் கொண்ட ஒரு மலர்ச் செடி வளர்ந்ததாம். இதுதான் கதை. இம்மாதிரி, தன் அழகையும் பெருமையையும் எண்ணித் தானே மோகம் கொள்வதை நர்ஸிஸ்ஸ் கோளாறு (Complex) என்பார்கள்.

இக் கதையிலிருந்து நமக்கு, பழைய காலத்தில் மனிதனுக்குத் தன்னுருவத்தைத் தானே அறிந்துகொள்ளும் திறமை ஏற்படவில்லை என்று தெளிவாகிறது. முகம் பார்க்கும் கண்ணாடியை முதன் முதலில் யார் உபயோகித்தார்கள்.?

படிமக்கலம் பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே உலகின் பற்பல பாகங்களில் கையாளப் பட்டு வந்தது. ஆதியில், இப் பழக்கம் ஏரி, கிணறு, குளங்களில் தோன்றுகின்ற சுய பிம்பத்தினின்றே ஜனித்திருக்க வேண்டும். முதலில் தங்கம், வெள்ளி முதலிய பிரகாசம் மிக்க உலோகத் தட்டுக்கள் உபயோகிக்கப் பட்டன. பிறகு சில காலத்தில் தகரம், செம்பு இவை கொண்ட கலப்பு உலோகங்களாலான தட்டுக்கள் பழக்கத்துக்கு வந்தன. பழங் காலத்தில் கண்ணாடியின் உற்பத்தியை மனிதன் அறியுமுன், எரிமலைக் குழம்பிலிருந்து, உறைந்த தாதுப் பொருளான ஆப்ஸிடியன் (Obsidian) என்னும் வழவழப்பும், சுமாரான பிரதிபலிக்கும் சக்தியுமுடைய இயற்கைக் கண்ணாடி உபயோகிக்கப் பட்டது. இதனால் செய்யப் பட்ட படிமக்கலங்கள் தென் அமெரிக்காவில் 'பெரு' என்னும் பிரதேசத்தில் தழைத்து மறைந்த 'இன்காஸ்' ராஜ்யத்தின் பாழடைந்த பட்டணத்திலும், மெக்ஸிகோ தேசத்திலுள்ள மண் மூடிப் போன பண்டைய நகரங்களிலும் கிடைத்திருக்கின்றன.

சீனர்கள் ஏறக்குறைய 2000 ஆண்டுகட்கு முன்னரே கண்ணாடியை உபயோகித்து வந்தார்கள் என்பதற்கு அவர்களின் பழைய இலக்கியங்களில் சான்றுகள் கிடைக்கின்றன. இதைத் தவிர சீன அரச வமிசத்தார் கையாண்ட உலோகப் படிமக்கலங்களும் காப்பாற்றப்பட்டு வந்திருக்கின்றன. ஜப்பானில் முகம் பார்க்கும் தட்டிற்கு முக்கியமானதொரு கருத்து இருந்துவந்ததாகத் தோன்றுகிறது. பெரும்பாலும் கலப்பு உலோகங்களால் செய்யப்பட்ட இதை ஜப்பானியத் திருமணங்களின்போது, மணமகளுக்கு, வாழ்வில் உதவும் ஒரு சாதனமாக அளிப்பது வழக்கம்.

எகிப்தில் தான், முதன் முதலாகக் கண்ணாடிகள் (Glass) உபயோகிக்கப்பட்டன. இதற்குச் சான்றாக எகிப்து தேசத்தின் நான்காவது, ஐந்தாவது வமிசத்து (சுமார் 2400 B.c.) அரசர்களின் சமாதிகளில், பொறிக்கப்பட்டுள்ள சித்திரங்களில், கண்ணாடியை உற்பத்தி செய்யும் காட்சி, சித்திரிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் வெகுகாலம் வரை, அங்கும், உலோகப்படிமக்கலங்களையே உபயோகித்தார்கள். அவைகள் கோழி முட்டை வடிவமுள்ளவையாயும், பிடியுள்ளவையாயும், நுணுக்கமான வேலைப்பாடமைந்தவையாயும் இருந்தன.

ஹீப்ருக்களும் கண்ணுடியை வெகு காலத்துக்கு முன்னரே உபயோகித்த தற்கு ஆதாரமாக, அவர்களுடைய மத நூலில் ஓரிடத்தில் அவர்கள் தலைவர் மோஸஸ் (சுமார் 1500 B.c.) கண்ணுடி களைச் சேகரித்ததாகக் குறிப்பிடப்பட்டி ருக்கிறது.

பினீஷ்யர்கள் தான் முதலில் கண்ணுடி உற்பத்தி செய்தார்கள் என்ற கொள் கை தவருனது. அவர்கள் இதை எகிப் தியரிடமிருந்தே கற்றுக் கொண்டார்கள். ஆயினும் இந்த உற்பத்தியில் அவர்கள் மிகவும் தேர்ச்சியடைந்தார்கள். அவர் களால் செய்யப் பட்ட கண்ணுடித் தினு சுகள் பல தற்காலம் வரை மேல் நாட்டுப் பொருட்காட்சிச் சாலைகளில் காப்பாற் றப் பட்டு வந்திருக்கின்றன. அவைக ளைப் பார்த்தால் பினீஷ்யர்கள் கண்ணுடி சாமான் செய்வதில் காட்டிய திறமை நமக்கு நன்கு புலப்படுகிறது.

சிங்களத் தீவில் சுமார் 2200 ஆண்டு கட்கு முன்னர் கண்ணுடிகள் பழக்கத்தி லிருந்து வந்திருக்கின்றன. அதற்காதார மாகப் புத்த நூலான "மஹா வம்சத் தில்", பிரகாசம் பொருந்திய முகம் பார்க் கும் கண்ணுடிகள் ஊர்வலமாகக் கொண் டு செல்லப் பட்டன என்ற குறிப்பு கிடைத்திருக்கிறது.

கிரேக்கரின் சிறந்த இதிகாச ஆசிரிய ரான 'ஹோமருக்கு' (850 B.C.) கண் ணுடிப் படிமக்கலங்களைப் பற்றித் தெரி யாது என்று தோன்றுகிறது. கிரேக்கர் கள் சுமார் கி. மு. 600-ல் கண்ணுடியைப் பற்றித் தெரிந்து கொண்டார்கள். ஆனல் 'ரோமர்கள்' கிரேக்க நாகரிகத் தைக் கிரகித்துக் கொண்டார்களாளு லும், பெரிய நிலைக் கண்ணுடி செய்வதில் சமர்த்தர்களாக இருந்தார்கள். பேர் பெற்ற ரோமக் கவியான 'வெர்கில்' என்பார். (B. C. 70-90) கண்ணுடியின் நிர்மலமான பிரதி பலிப்பை, நிச்சலமான ஏரியின் நீர்ப் பரப்புக்கு ஒப்பிடுகிருர். ரோமரின் பண்டைய பண்புக்கு எடுத் துக் காட்டாக இருந்து மறைந்த, நகரங்க ளில் ஒன்ருன பாம்பீ (Pompei) என்னுமி டத்தில் தொல் பொருள் ஆராய்ச்சியின் போது, சுவரில் மூன்று துவாரங் களின் மூலம் பதிக்கப்பட்டிருந்த கருமை யான கண்ணுடியாலான படிமக் கலம் கிடைத்தது. ரோமர்கள் தான், கண்ணு டியுடன் வெள்ளீயத் தகடுகளைச் சேர்த்து நல்ல பிரதி பிம்பங்களை உண்டு பண்ணக்கூடும் என்பதைக்கண்டு பிடித் தவர்கள். பாதரஸம் தோய்ந்த தகரத் தகடுகளோடு, கண்ணுடியைப் பொருத் தும் வழக்கம் சமீப காலத்தியது.

இத்தாலிய தேசத்திலுள்ள வெனிஸ் நகரத்து வர்த்தகத் தொழிலாளிகளுக் குப் பெரிய நிலைக்கண்ணுடிகள் நிர்மா ணிக்கும் தொழிலில் பெரும் தேர்ச்சி இருந்து வந்தது. உயர்ந்த ரகத்தைச் சேர்ந்த வெனிஸில் பண்ணப்பட்ட பெரிய முகம் பார்க்கும் கண்ணுடிகளில் அக்காலத்து ஜனங்களுக்கு இருந்த நாட் டமும் கொஞ்ச நஞ்சமல்ல. இதற்கு உதாரணமாக, ஒரு சமயம் வெள்ளிச் சட்டத்திலமைக்கப்பட்ட பெரிய நிலைக் கண்ணுடியொன்று, உலகப் பிரசித்தி பெற்ற 'ராபேல்' (1483-1520 A. D.) என்னும் சித்திரக்காரரின் வர்ணச் சித் திரத்தைக் காட்டிலும் அதிக விலைக்குப் போயிற்று. வெனிஷ்யர்கள் தங்கள் கண்ணுடித் தொழிலின் ரகசிய நுட்பங் களைச் சட்டங்களின் மூலம் ஜாக்ரதை யாக வெகுகாலம் காத்து வந்தார்கள்.

தென்னிந்தியாவில் கண்ணுடி போன்ற பொருளைப்பற்றிய அறிவு பழங்காலத் தில் இருந்தது என்பதற்குச் சான்று 'ஸ்படிகம்' என்று பொருள் படும்படி யான முதல் தமிழ்ச் சொல்லான 'பளிங்கு' என்பதிலிருந்துதான் என்று சில அறிஞர் கள் அபிப்பிராயப்படுகிருர்கள். இந்தச் சொல், முதன்முதலில் 'பட்டிப்ரோலு' என்னுமிடத்தில் கிடைத்த சாசனத்தில் (கி. மு. 200) உபயோகிக்கப்பட்டிருக் கிறது. ஆனல் சாதாரணமாகக் கண் ணுடி என்னும் சொல்லை, பழங்காலத்தி லும் உருவம் பிரதிபிம்பிக்கும் படிமக்க லம் என்னும் பொருளில்தான் உபயோ கித்திருக்கிருர்கள். இக்காலத்தில் அது Glass என்னும் ஆங்கிலச் சொல்லுக்குப் பொருளாக ஆயிற்று. இந்திய பாஷை களில் எல்லாவற்றிலும் ஹிந்துஸ்தானி ஒன்றில் தான் (இது உருதுவும் இந்தியும் சேர்ந்த கலப்புப் பாஷை) கண்ணுடிக்கு 'சீசி' என்கிற தனிப்பதம் இருக்கிறது. இதைத்தான் நாம் இன்று கொச்சைத் தமிழில் சீசா என்னும் கண்ணுடிப் பாட் டிலைக் குறிக்கும் பதமாக உபயோகிக் கிருேம்.

இன்று நாம் நம் பார்வையைத் திருத் தும் சாதனத்தை 'மூக்குக்கண்ணுடி' என்றுகூடக் கொச்சையாக அழைக்கி ருேம். மூக்குக்கு வந்த வாழ்வே வாழ்வு!

உருளைக்கிழங்கின் தோலைப்போக்கி இரண்டாக துண்டித்து உட்பாகத்தை குடைந்தெடுக்கவும். நசுக்கிய பட்டாணிக்கடலை, அரிந்த வெங்காயம், மிளகாய், எலுமிச்சஞ்சாறு, ருசிக்குத் தேவையான உப்பு இவைகளை கலக்கவும். குடைந்த உருளைக்கிழங்கு பாதிகளில் கலவையை திணிக்கவும். இருபாதிகளையும் சர்க்குச்சிகளில் தொடுத்து ஒன்றுகப்பொருத்தவும். சூடான டால்டாவில் உருளைக்கிழங்கை பொரித்து தனியாக வைத்துக்கொள்ளவும். வெங்காயம், தக்காளிப்பழம், மசாலா இவைகளை சமையல் பாத்திரத்தில் போட்டு வதக்கவும். பிறகு பொரித்த உருளைக்கிழங்கைப்போடவும். நீராவிபோகாமலிருக்க கோதுமைமாவினல் மூடியை பாத்திரத்துடன் ஒட்டவைத்து ½ மணிநேரம் நல்ல சூட்டில் பக்குவம் செய்யவும். பிறகு ½ மணிநேரம் சிறு சூட்டில் வைத்திருக்கவும். சூடாக பரிமாறவும்.

உங்கள் தினசரி சாப்பாட்டை டால்டா எப்படி
அதிக சத்துடையதாகச் செய்கிறது?
இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று
வேண்டுமானாலும்—எழுதுங்கள்!

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 97-23 TM

நான் கண்ட பொருட்காட்சிகள்

சோம. லெ. இலக்குமணன்

எனது ஆறு மாத கால உலகச் சுற்றுப் பிரயாணத்தின் போது, மூன்று பெரிய பொருட்காட்சிகள் நடந்தன. இவை மூன்றும் ஐரோப்பாவில் தான் நடைபெற்றன. இவை அனைத்துக்குமே, நான் சென்றேன்.

முதலாவது பொருட்காட்சி சென்ற ஆகஸ்ட்டில் இங்கிலாந்தின் தலைநகரான லண்டனில் நடைபெற்ற யந்திரக்கருவிகள் பொருட்காட்சி, அடுத்தது சென்ற செப்டம்பரில் செக்கோஸ்லவக்கியாவின் தலைநகரான பிராஹாவில் நடைபெற்ற வர்த்தகப் பொருட்காட்சி, கடைசிப் பொருட்காட்சி சென்ற அக்டோபரில் பிரான்சின் தலைநகரான பாரிசில் நடைபெற்ற உலக மோட்டார்கார் பொருட்காட்சி.

இம் முப்பெரும் காட்சிகட்கும் பல ஒற்றுமைகள் இருந்தன. இவை யாவும் மிகப் பெரும் அளவில், பல லட்சம் ரூபாய்கள் செலவில், நடந்தன. இவற்றுக்கான ஏற்பாடுகள் பல பல மாதங்களாகச் செய்யப்பட்டன. காட்சியைக் காண வரும்படி உலக முழுவதற்கும் அழைப்புக்கள் அனுப்பப்பட்டன. ஒரே கட்டிடத்தில் இடம் போதியதாயில்லாததால், பல மாடிகளுள்ள பல கட்டிடங்களில், தனித் தனிப் பகுதிகள் காட்டப்பட்டன. காட்சி நடந்த நாட்டு மொழியை அறியாதவரும் எல்லா நிகழ்ச்சிகளையும் கவனிப்பதற்கு உதவியாக, பல மொழி பெயர்ப்பாளர்களையும் காட்சி நிர்வாகிகள் அமர்த்தியிருந்தனர். பொருட்காட்சிக்குள்ளே செல்ல, வாங்கும் டிக்கட்டுடன் ஒரு பிளான் கொடுத்தனர். நெருப்புப் பிடித்தால், நாம் இருக்கக் கூடிய எந்த இடத்திலிருந்தும் வெளியே செல்ல எது மிகச் சுருக்கமான சுலபமான பாதை என்பது இந்தப் பிளானில், பால் மணம் மாருப் பச்சிளங் குழந்தையும் புரிந்து கொள்ளும்படி, நன்ருகக் காட்டப்பட்டிருந்தது.

எந்த இடத்தில், எந்தப்பகுதி காட்டப்படுகிறது, எத்தனை விதமான கடைகள் ...ஸ்டால்கள்...உள, எந்த ஸ்டால் எங்கே இருக்கிறது இது போன்ற விபரங்கள் அடங்கிய பல புத்தகங்களும் படங்களும், மற்றும் பொருட்காட்சியில் வியாபாரம் முடிப்பதற்குரிய சட்ட திட்டங்களும் யாவருக்கும் விநியோகிக்கப்பட்டன.

பொருட்காட்சி நடந்த இடத்துக்குச் செல்ல, தனி ரயில்கள் விடப்பட்டன. காட்சியின் ஒரு பகுதியிலிருந்து மற்ருெரு பகுதிக்குப் பஸ் வசதி இருந்தது. தபால், தந்தி, டெலிபோன் நிலயங்களும் பேங்குகளும், சினிமா, நாடகம், ரயில், கப்பல், ஆகாய விமான டிக்கட்டுக்கள் விற்கும் கடைகளும், ஹோட்டல்களும், ஓய்வு எடுத்துக் கொள்ளும் அறைகளும், முதல் சிகிச்சை செய்யும் இடமும் விசாரணைகட்குப்பதில்கூறும் அலுவலகங்களும் காட்சிச்சாலையிலே ஆங்காங்கு இருந்தன.

குறிப்பாக, அந்நிய நாடுகளிலிருந்து வந்த விருந்தினர்கட்குத் தக்க உதவிகள், உடனடியாக அளிப்பதற்காக, அவர்கட்கு அடையாளச் சீட்டு பாட்ஜ் (Badge)கள் கொடுக்கப்பட்டன. அவர்கள் இக்காட்சிக்கு ஏராளமானவர் வரும்படி தூண்டுகோலாக, அவர்கட்குப் பிரயாண டிக்கட்டுகள் மலிவான விலைக்கு

விற்கப்பட்டன. வீசா என்னும் ஒரு நாட்டுக்குள் பிரவேசிக்க அந்த நாட்டு அரசாங்கம் கொடுக்கும் அனுமதி எளிதாய்த் தரப்பட்டது. அவரவர்களுடைய தபால்கள் தனி இலாகா மூலம் பொருட்காட்சிச் சாலையாரால் பட்டுவாடாசெய்யப்பட்டன. இம்மாதிரி இன்னும் பல சலுகைகள் காட்டப்பட்டன.

விற்பனைக்கான பொருள்கள் அனைத்தின் படங்களும் பார்வையாளருக்கு வழங்கப்பட்டன. ஒரு பொருளை வாங்கிவிட்டால், அதை உலகின் எப்பகுதிக்கும் கப்பலில் ஏற்றி அனுப்பிவைக்கும் பணியைத் திறமையாயும் பொறுப்பாயும் செய்யும் ஸ்தாபனங்களும் இக் காட்சிகளில் இருந்தன. எந்தத் தேசத்தில், எந்தப் பொருளை இறக்குமதி செய்ய எவ்விதமான சட்டம் அல்லது தடை அமுலிலுள்ளது, அங்கு அதன் இறக்குமதி வரி எவ்வளவு ஆகிய விபரங்களைச் சரிவரத் தெரிந்த அதிகாரிகளும் இக் காட்சிகளிலிருந்தனர்.

இக் காட்சிகள் ஒவ்வொன்றுக்கும் பற்பல லட்சம் மக்கள் வந்து கலந்துகொண்டனர். பத்திரிகைகள், அவ்வப் பொருட்காட்சியைப்பற்றித் தனி அனுபந்தங்கள் வெளியிட்டு அவற்றுக்கு முக்கியத்துவம் காட்டின.

இப் பொருட்காட்சிகள் அனைத்திலுமே, அவை வெற்றிகரமாக நடக்க, அந்தந்தச் சர்க்கார்கள் பேருதவி செய்தனர். மேலும், இக்காட்சிகளின் எல்லாத்துறைகளிலுமே, பெண்டிரும் முழுப்பங்கு எடுத்துக்கொண்டு தாங்களும் நல்ல காட்சிப் பொருள்களாக இருந்தனர்!

கடைசியாக, இன்னொரு முக்கியமான ஒற்றுமையையும் குறிப்பிட வேண்டும். இவற்றுள், ஒரு காட்சியிலாவது, சிவப்புத் தொப்பிகளை, அதாவது போலீஸ்க்காரர்களை (அமெரிக்காவில் சிவப்புத் தொப்பி என்றால் ரயில்வே போர்ட்டர் என்று அர்த்தம்) நான் காணவில்லை.

இனி, தனித் தனிப் பொருட்காட்சிகளைக் கவனிப்போம்.

லண்டன் பொருட்காட்சி

யுத்தத்தால் பிரிட்டனின் உற்பத்தி சக்தி பாதிக்கப்படவில்லை, பிரிட்டிஷார் தங்களுடைய உற்பத்தியைத் துரிதப்படுத்தி, ஏற்றுமதியைப் பன்மடங்காக்கி அதன் மூலம் தங்களுக்குவேண்டிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டும் என்பதைப் பிரிட்டிஷ் மக்களுக்கு உணர்த்துவதற்காகவும் பிரிட்டனின் ஏற்றுமதியை அதிகப்படுத்தவும் தொழில் திறமையில் பிரிட்டிஷ் நிபுணர்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தை ஏனைய உலகுக்குக் காட்டவும் இப்பொருட்காட்சி யந்திர வியாபாரிகள் சங்கத்தாரால், ஏற்பாடு செய்யப்பட்டது.

யந்திரம் செய்பவர்களும் விற்பவர்களும் மட்டுமன்றி, யந்திர நுட்பங்களை விளக்கும் மேதாவிகளும், யந்திர ஆராய்ச்சியைப்பற்றிய புத்தகங்கள், பத்திரிகைகள் வெளியிடுவோரும் தங்கள் தங்கள் அலுவலகங்களை இக்காட்சியில் திறந்தனர்.

இன்றைய நாகரிகத்தின் அடிப்படை, யந்திரம் தான். விவசாயத்தைப் பெருக்குவது யந்திரம், பல வகை உணவுகளைத் தயாரிப்பதும் யந்திரம். மானத்தைக் காக்க நாம் உடுக்கும் துணியை உற்பத்தி செய்வதும் யந்திரம். அறிவை வளர்க்கத் தினசரி நாம் படிக்கும் பத்திரிகையை அச்சிடுவதும் ஓர் யந்திரம், ஓரிடத்திலிருந்து ஓரிடத்துக்கு மனிதன் செல்லஉதவும் சாதனங்களும் பலவகை யந்திரங்கள் தான். நாம் நம்மைத் தற்காத்துக் கொள்ள ஏதுவாயிருப்பதும் யந்திரம். இத்தகைய யந்திரங்களின் உற்பத்தியில் பிரிட்டன் எவ்வளவு உயர்ந்த நிலை எய்தியிருக்கின்றதென்பதை இக்காட்சி காட்டியது.

மேனாடுகளின் பொருளாதாரச் செழிப்புக்குக் காரணமே யந்திரங்கள் தான். யந்திர உதவியோடு ஒரு மணி நேரம் வேலை செய்பவன் 10 ஜதை செருப்பு தயாரித்தால், அதை விடச் சிறந்த யந்திரத்தோடும் மின்சார உதவியோடும் அதே நேரத்தில் அவனே 20 ஜதை செய்யலாம். ஆகவே உற்பத்தியையும் தொழிலாளியின் ஓய்வையும் அதிகமாக்கவும், தேச வருவாயைப் பெருக்கவும், விரிந்துகொண்டு போகும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், இன்னும் சிறந்த உற்பத்தி யந்திரங்களைக் கண்டு

ஆரோக்கியமான, சிறந்த, ருசியான, உணவிற்கும்,
ஊறுகாய்களுக்கும் அவசியமானது ?

எங்கள்

டெக்கான் குவீன்

மார்க்

மிஸ்கி

பெருங்காயமே

காரம், குணம், மணம்,
ருசி இவைகளில்
உயர்ந்தது.

எல்லா இடங்களிலும்
கிடைக்கும்.

நாராயணதாஸ் கேஸுர்தாஸ் & சன்ஸ்,

17, கோவிந்தப்பநாயக்கன்தெரு, மதராஸ்.

ஹெட் ஆபீஸ்:- வட்காடி, பம்பாய். பிராஞ்சு:- பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 *SUNDARI ELIXIR*
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 *PHOSPHORUS OIL*
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA*
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

பிடித்தாக வேண்டும், வறுமையை ஒழிக்க மின்சாரத்தைப் பயன் படுத்த வேண்டும்; விஞ்ஞான உதவியை நாட வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் உணரும்படியாக இந்தக் காட்சி அமைந்திருந்தது.

யந்திர ஆயுதங்கள், தூசி துப்புரவு செய்யும் யந்திரங்கள், ஆக்ரா போடும் யந்திரங்கள், கட்டிடங்களையோ கனத்த பொருள்களையோ தூள் தூளாக்கும் யந்திரங்கள், அறுக்கும் யந்திரங்கள், மின்சாரத்தால் இயங்கும் சுத்தியல், சக்கரங்களின் பல்லை உண்டாக்கும் யந்திரங்கள், அரைக்கும் யந்திரம், மின்சாரக் கொல்லுப் பட்டரை போன்ற எண்ணிறந்த யந்திரங்களை இக் காட்சியிற் கண்டேன். அவை அனைத்தும், வேலை செய்து இயக்கிக் காட்டப்பட்டன.

உணவருந்திய பின்னரோ, வேறு சந்தர்ப்பத்திலோ கையைத் துடைப்பதற்கோ காயவைப்பதற்கோ உதவும் யந்திரம் ஒன்று இக் காட்சியில் இருந்தது. இதன் உயரம் நாலு அல்லது நாலரை அடி இருக்கும். மின்சாரத்தால் இயங்குகின்றது. இதன் எதிரில் நாம் போய் நின்று, நம் காலுக்கு அருகிலுள்ள ஒரு பொத்தானை மிதித்தால், இக் கருவி வேலை செய்யும். நம் கைக்கு நேரே, இக் கருவியின் வாய் இருக்கிறது. அதற்கு எதிரில் இரு கைகளையும் காட்டினால், ஒரு நிமிஷத்தில், இக் கருவி நம் கையை உலர்த்தி விடுகிறது. இதுவும் ஒரு விஞ்ஞான அற்புதம். இது கையைத் துடைக்க மிகவும் சுகாதாரமான முறையாம். இதனால், கர்ச்சீப்புக்களுக்கும் டவல்களுக்கும் தேவையில்லாமல் போய் விடும். இந்த யந்திரம் மட்டும் சென்னை எங்கும் இருந்தால், சென்னையின் குழாய்த் தண்ணீர்ப் பிரச்னை பாதிக்கு மேல் தீர்ந்து விடும். அல்லவா?

இக் காட்சிகளிற் கலந்து கொண்ட வர்த்தகர்கள், மிக்க உற்சாகத்தோடும் பெருமையோடும் இருந்தனர். உதாரணமாக, "எங்கள் கடை இப்போது நடக்கும் யந்திரப் பொருட்காட்சியில் இன்ன இடத்தில் இருக்கிறது. அதைப்பார்வையிடத் தவறாதீர்கள்" என்று ஒவ்வொரு கம்பெனியாரும் தத்தம் லெட்டர் பேப்பரிலேயே அச்சிட்டு விளம்பரப் படுத்திக் கொண்டனர்.

நல்ல வேளையாக, நானும் ஒரு யந்திரமாக மாறுவதற்கு முன்னதாக, அக்காட்சிச்சாலையை விட்டு வெளியே வந்து விட்டேன்!

பிராஹா பொருட்காட்சி

யுத்தத்துக்கு முன்பு செக்கோசுலவக்கியா, ஐரோப்பாவில் தொழில் வளம் நிரம்பிய நாடாக இருந்தது. பொருளாதாரத்துறையில் மிகவும் மேம்பாடு அடைந்திருந்தது.

கடந்த மூன்றாண்டுகளாக, இந்நாடு கம்யூனிச செல்வாக்குக்குள் இருந்து வருவதால், இங்கு இப்போது தொழில்கள் நல்ல நிலையிலில்லை என்ற கருத்து வெளி உலகில் இருந்து வருகிறது. தொழில்களைச் சர்க்கார் எடுத்துக்கொண்டு தங்களின் இரண்டு வருஷத் தேசீயத் திட்டம் வெற்றிகரமாக நடந்திருப்பதாக உலகத்தாருக்குப் பறை சாற்றவே, செக் அரசாங்கம் இப்பொருட்காட்சியை நடத்திற்று. திட்டமிட்டுப் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதால் ஏற்படும் பலாபலன்களை செக் மக்கள் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு இக்காட்சி அமைந்திருந்தது.

முக்கியமாக, தொழிலாளிகள் தம் திறமையைப் பற்றித் தாம் பூரிப்படையட்டும் என்பதற்காக, இரவு 9 மணிக்குப் பின்னரும் பொருட்காட்சியைத் திறந்து வைத்திருந்து, தொழிற்சாலைகளிலிருந்து தொழிலாளர் கூட்டம் கூட்டமாக அழைத்து வரப் பட்டனர். மாணவர்கள் இலவசமாக அனுமதிக்கப் பட்டனர். காட்சி விழா சினிமாவாக எடுக்கப் பட்டு நாடு முழுவதும் எல்லாக் கல்லூரிகளிலும் காட்டப் பட்டது. வானொலியில் இக் காட்சியைப் பற்றிப் பல விமர்சனங்கள் நடத்தப்பட்டன. இக் காட்சி நினைவாகப் பிரத்தியேகமாக, தபால் தலைகளும் அச்சிடப் பட்டன.

கிழக்கு ஐரோப்பாவில் ரஷ்ய செல்வாக்குக்குட்பட்ட பதினேரு நாடுகளிலிருந்தும் பல காட்சிப்பொருள்கள் வந்திருந்

தன. முதல் நாட் காட்சியை மட்டும் மூன்று லட்சத்துக்கு அதிகமானவர் கண்டின்புற்றனர்.

பீங்கான் (Glass) தொழிலில் செக் நாடு அடைந்துள்ள முன்னேற்றம் இக் காட்சியைக்கண்டவர் மனத்தைக் கவர்ந் தது. உலோகத் தொழில்கள், துணி மில் யந்திரங்கள், விவசாயக்கருவிகள், இசைக் கருவிகள், பொம்மைகள், வைத்திய ஆயு தங்கள், திரைப்படம் செய்வதற்குவேண் டிய பொருள்கள், சைக்கிள், பத்திரி கைக் காகிதம், விதம் விதமான தோல் சாமான்கள் (முக்கியமாகக் காலணிகள்) இவற்றில் பிற நாடுகளைவிடச் செக் தொழில் சிறப்பாயிருப்பதை இக்காட்சி பிரதி பலித்தது. இக்காட்சியின் பலனுக அமெரிக்க செக் வர்த்தக உடன்பாடு ஒன்று ஏற்பட்டது.

பிராஹா காட்சியில், பாட்டா செருப் புக் கம்பெனியாரின் ஸ்டால் தான் பிர சித்தி பெற்றது.

பிற ஐரோப்பிய நாடுகட்குச் செல்லும் நம் தேசத்தவர் பெரும்பாலோர் செக் நாட்டுக்குச் செல்லுவதில்லை. பல செக் நண்பர்கள் நான் தான் அவர்கள் சந்தித்த முதல் இந்தியர் என்று கூறினர். இக்கா ரணங்களால், பிராஹா காட்சியில் நானும் ஒரு காட்சிப் பொருளாகவே விளங்கினேன். ஆனல், பிற காட்சிப் பொருள்கள் போல, நான் இருந்த இடத் திலேயே இருக்கவில்லை. என்னை, செக் சர்க்கார், தேசீய மயமாக்கிவிடவுமில்லை.

பாரிஸ் காட்சி

லௌகிக விஷயங்களிலேயே ஈடுபட்டு அவற்றிலேயே தங்கள் சக்தியை எல்லாம் செலவிடும் பாரிஸ் வாசிகள் சர்வதேச மோட்டார் கண்காட்சியைத் தம் நகரில் நடத்தியது பொருத்தமே. சிறந்த கார் கள் செய்யும் தொழிற்சாலைகள் பல பிரான்சில் உள. ஏராளமான கார்கள் ஒரே வரிசையில் ஏககாலத்திற் செல்லும் சாம்ப்சி எலீசிஸ் சாலைக்கு அருகிலேயே இவ்வைபவமும் நடந்தது.

உலகின் எல்லா நாட்டுக்கார்களும்... நமது ஹிந்துஸ்தான் கார் தவிர இங்கே காட்சி தந்தன.

மோட்டார் தொழிலின் உட்பிரிவுகள் ஒவ்வொன்றும் நன்கு விளக்கப்பட்டதோ டன்றி, மோட்டார்காரின் ஒவ்வொருசிறு பாகத்துக்கும் தனித்தனிக்காட்சி இருந் தது. இதில் அந்தந்த ஸ்பேர் பார்ட் செய் பவர்கள் தத்தம் பொருள்களை விளம் பரப்படுத்தினர். வாகனத்தின் ஒவ்வொரு பாகத்தையும் சோதிக்கும் அல்லது சரி பார்க்கும் யந்திரங்களும் இருந்தன.

ஒவ்வொரு வாகனத்துக் கருகிலும் அதனுடைய பெயர், தேசம், நிறை, பெட்ரோல் உட்கொள்ளும் சக்தி, டயர் களைப் பற்றிய விபரங்கள், விலை ஆகிய பல தகவல்கள் உள்ள அறிக்கை தொங்க விடப்பட்டிருந்தது. அதன் யந் திரத்தை விளக்கவல்லவரும் அவ்வாக னத்திலிருந்தார், பொறுமையாய்ப் பல் லாயிரவருக்குப் பதில் சொல்ல.

மிகச் சிறந்த கார் எனப் பார்வையா ளர் மதிப்பிட்ட காருக்கும் அதைப் பொறுக்கியவர்கட்கும் பரிசுகள் கொடுக் கப்பட்டன.

இக் காட்சியில் ஏறக்குறைய பத்தா யிரம் விதமான புத்தம் புதிய கார்கள் காட்சி அளித்தன. அவற்றின் உற்பத் தியாளரிற் சிலர், சிறு உருவங்களிற் செய்த பொம்மைக் கார்களை மலிவான விலைக்கு விற்று விளம்பரப் படுத்தினர்.

இரண்டுநிமிஷங்களில், ஒரு காரை உட்புறமும் வெளிப்புறமும், அதன் யந் திரத்தையும் கூடக் கழுவிச் சுத்தம் செய்யும் கார் லாண்ட்ரி என்ற மின் சாரக் கருவி இக் காட்சியில் காட்டப் பட்டது.

இந்தியாவிலும்

ஆடிக்கொரு தடவையும் அமாவாசிக்கு ஒரு முறையும் இது வரை பொருட்காட்சி கள் நடத்தியுள்ளோம். நம் நாட்டு மக் களிற் பலருக்கே இந்தியாவில் என்ன என்ன சாமான்கள் செய்கிறோம் என்பது தெரியச் சந்தர்ப்பம் ஏற்படுவதில்லை,

உற்பத்தியாளரும் தம் சரக்குகட்குத் தக்க விளம்பரம் செய்வதில்லை. இதனால், வெளிநாட்டவர்க்கும் நம் உற்பத்தியைப்பற்றித் தெரியாமல் போய், அதன் பலனாக நமது ஏற்றுமதி குறைந்து கொண்டும் இறக்குமதி அதிகரித்துக் கொண்டும் வருகின்றன. பெரும் திட்டங்களைச் செவ்வனே வரைந்து, அவற்றுக்கு அடிப்படையாக, பொருட்காட்சிகளைச் சீரிய முறையில் அடிக்கடி நடத்தி, நம் நாட்டில் செய்யப்படும் எல்லாப் பொருள்களையும் ஏக காலத்தில் ஒருங்கே காண வசதி ஏற்படவேண்டும். உற்பத்தியாளரும் தத்தம் சரக்குகளைப் பிற நாட்டுச் சரக்குகளின் தன்மையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பு ஏற்பட வேண்டும். பொருட்காட்சி மனப்பான்மை நமது மக்களிடையே வேரூன்ற வேண்டும். நமது பொருளாதாரத்தைச் சீர்திருத்தவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் மேலும் தொழில் அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியத்தை உணரவும் அந்த உணர்ச்சியை நடைமுறையில், செயலில் காட்டவும் இவையே சிறந்த வழிகள்.

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ.	1,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	,,	72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	,,	53,00,000
ரிஸர்வ் நிதி	,,	62,00,000

எல்லாவித பாங்கு அலுவல்களும் நடத்தப்படுகின்றன.

N. கோபால அய்யர்
ஸெக்ரெடரி



N.P.B.

தி இந்தியன் பாங்க் லிட்.

கே. எம். முன்ஷி

ஹிந்தியிலிருந்து மொழி பெயர்ப்பு—“சேதி”

சக்திகளின் மோதலிலே கதை விளைகிறது. பட்டண் அரசன் கர்ணதேவன் மனைவி மீனல்தேவி ஜைன மாது. அவன் மந்திரி முஞ்ஜால்: தேச பக்தியுடன் அரச பக்தியையும் ஒன்றவைத்து மதப்பற்றைக் கட்டுப்படுத்தி நல்ல அடிப்படையில் பட்டண் பெருமையைப் பரவ வைக்கத் திட்டம் போட்டு வேலை செய்து வருகிறான். அந்தத் திட்டத்தையும் அரசி அவனிடம் கொண்டிருந்த பற்றையும் பிடுங்கி எறியப் புயலாய் வருகிறார் சந்திராவதி ஜைனயதி ஆனந்த சூரி. முஞ்ஜாலைப் பாறை எனக் கண்டு ஒதுங்கிய அவர் படகு அரசியிடம் இடம் பெறுகிறது.

கர்ணதேவன் சாகும் தறுவாயில் இருக்கிறான். அவனைக்காண அவன் அண்ணன் மகன் தேவப்ரஸாத் தன்மகன் திரிபுவனுடன் வருகிறான். ராஜ வைத்தியர் லீலாதரருடைய மருமகன் வாசஸ்பதியினுடைய உதவியினால் சிற்றப்பனைப் பார்த்த அவன், தன் மனைவி ஹம்ஸா உயிருடன் இருப்பதை அறிந்து மேலே அறிய இயலாமல் மனம் கலங்கி வீடு வருகிறான். அங்கே, தன் காதலி பிரஸன்னாவைச் சந்திக்கச் சென்ற திரிபுவனும் ‘அவளை மாளவ ராணியாக்க முயற்சி நடக்கிறது!’ என்று கிழப் பாடகன் சாமல் பார்ஹட் மூலம் அறிந்து சீறி எழுந்து வீடு வருகிறான். தன் தந்தை நிலையறிந்த மைந்தன். தாயின் உண்மையறிய மாமனிடம் தூது செல்லச் சம்மதிக்கிறான். தேசத்துக்காக இருதயத்தைக் கல்லாக்கி வைத்திருக்கும் அவனிடம் ஒன்றும் அறிய இயலாமல் திரிபுவன் திரும்பி விடுகிறான்.

விதி கர்ண தேவனைப் படுதாவைப் போல் தூக்கி விடுகிறது. மேடையில் நடிகர்கள் நின்றனர். ஆட்டம் ஓடுகிறது. ஜய தேவன் அரசனாகிறான். அரசியின் அதிகாரப் பித்து படர ஆரம்பிக்கிறது. முஞ்ஜால் மதுபுரி சேனைத் தலைவன், சாந்தி சந்திரன் பட்டண் கோட்டை அதிபதி; இது அரசன் உத்தரவு. பட்டண் கோட்டை பகல் பதினைந்து நாழிகைக்கு மூடப் படும். தேவப்ரஸாத் கைதியாவான். அவன் சேனை கைவசப் படுத்தப் படும். இது அவர்களின் திட்டம்!

இந்தத் திட்டத்துக்கு விரோதியாய் வருகிறான் முஞ்ஜால். திரிபுவனுக்கு ரகசியம் தெரிந்து விடுகிறது. தேவப்ரஸாத் வெளியேற வந்து விட்டான். அங்கே சந்தித்தனர் முஞ்ஜாலும் அவனும். தற்பெருமை சீற்றம் எழுப்ப உறவு அதை அடக்கி வருகிறது. இருவரும் வெளியே மறு நாட் காலை சந்திக்க முடிவு செய்து பிரிகின்றனர். தேவப்ரஸாத் ஹம்ஸா இருக்குமிடத்தை அறிகிறான், அரண்மனைக்கு ஓடுகிறான். அங்கே எதிர்ப்படுகிறாள் அரசி. “ஹம்ஸா? எங்கே? கைதியாகி விடு. சேனையைத் தா! ஹம்ஸாவை அடையலாம்” அரசியின் பேச்சு இது. தேவப்ரஸாத் சீறிப் பறந்து விட்டான் என்று சொல்ல வேண்டியதில்லை. ஒரே

(ஹிந்திப்பிரதி பிரசுர கர்த்தாவான ஹிந்தி கிரந்த ரத்னாகர கார்யாலயத்தைச் சார்ந்த ஸ்ரீ நாதூராம் பிரேமி அவர்கள் அனுமதி பெற்றது.)

யடியாய் அகழியையும் தாண்டிப் பாய்ந்து விட்டான்.

அரசி பரபரத்தாள். முஞ்ஜாலும் பிரஸாதும் சந்தித்தால்? கூடாது. என்ன் செய்யலாம்? விதி வ்ழிசெய்தது.

அரசியைச் சந்திக்க வந்த திரிபுவனுக்கும் இளவரசனுக்கும் சில்லறைத் தகராறு. திரிபுவன்மேல் வாள் எடுத்துப் பாய்ந்த ஜய தேவன் கையில் எங்கிருந்தோ ஒரு அம்பு வந்து பாய நிலைமை கட்டு மீறி விடுகிறது. மெய்க் காவலர் திரிபுவனை அபிமன்யுவாக்க முயலும் கட்டம். அரசி பார்த்து விடுகிறாள். ஹம்ஸாவையும் அழைத்துக் 'காட்டி மகன் தப்ப, செல்வேன் கணவனிடம்' என்று உறுதிவாங்கிக் கொண்டு விடுகிறாள். ஹம்ஸாவும் மகனைப் பிரஸன்னாவிடம் ஒப்புவித்து, பல்லக்கில் ஏறி, பிரஸாதை அடைகிறாள். பிரிந்திருந்த உயிரை அடைந்த அவள் கணவனும் தொடர்ந்தவர் ஏமாற, மற்றதை மறந்து அவளுடன் தங்கி விடுகிறான்.

மீனல் இரவோடு இரவாய் மகனையும், மயக்கம் தந்து மருமகளையும் அழைத்துக் கொண்டு சாந்தி சந்திரன்வசம் கோட்டையை ஒப்புவித்துவிட்டு வெளியேறுகிறாள். வழியே முஞ்ஜாலும் கைது ஆகிறான்.

யதியை மண்டுகேசுவரம் அனுப்பித் தான் மதுபுரி செல்கிறாள்.

இதன் நடுவே பிரஸன்னா ஏமாற்றித் திரும்புகிறாள். ராஜதூதனாகவரும் முரார்பாலன் உண்மையறியாமல் அவள் அழகுக்கு மயங்கி அழைத்து வந்து பட்டணில் விட்டு விடுகிறான். அவளும் கதவு மூடிய அரண்மனைக்குள் போக இயலாமல் அரசி வெளியேறிய ரகசியம் அறிந்து அதை முதலாக வைத்து வியாபாரம் செய்ய எண்ணி நிற்கும் கொக்கான ஊதா சேட்டிடம் வந்து சேருகிறாள். அவனும் அவளைத் தன் வீட்டில் வைத்துவிட்டு வெளியேறுகிறான்.

ரகசியம் தீப்போலப் பரவுகிறது. பட்டணில் பெருமையுள்ள பேடிகள் ஜைனர்களிடம் காட்டி விடுவார்களா? சந்திராவதி சேனை எதிரே வந்துவிட்டது! அரசி அதனுடன் சேரப் புறப்பட்டுச் சென்று விட்டார்கள். இனி என்ன வேண்டும்? ஊர் திரண்டு எழுந்தது. 'ஜெய் ஸோம்நாத்' என்ற மந்திரம் அவர்களை ஒருங்கு சேர்த்தது: இயக்கிற்று. இந்தக் கூட்டத்துக்கு டுங்கர் நாய்க் என்ற 'சோதா' வீரன் தலைவனானான்.

சரிதானே! மேலே

ஸோலங்கியைத் தேடிப் பிடி

பட்டண் வாசிகளின் இந்த ஆரவார ஊர்வலம் அரண்மனைக்கு வந்து சேர்ந்தது. யாருக்கும் எந்த உண்மையான காரணத்தைக் கொண்டு இந்தக் கொந்தளிப்பு என்று தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் எல்லோருக்கும் தெரியும்: மீனல் தேவி நகரத்தை வீட்டுப் போய் விட்டாள். சாந்தி சந்திரன் கையில் அதிகாரம் இருக்கிறது. அவன் சந்திராவதி மனிதன், நம்பக் கூடாது!'' தலை நகரில் வேலை ஒன்றுமின்றித் திரியும் அநேகர் இந்தக் கூட்டத்துடன் தமாஷா பார்க்க வந்து சேர்ந்தனர். சிலர் என்ன தான் நடக்கிறது பார்க்கலாமே! என்று எண்ணி வந்தனர். ''மீனல் தேவி இரவோடு இரவாய் வெளியேறி விட்டாள். சந்திராவதி சேனை தலை நகருக்கு வெளியே வந்து இறங்கியிருக்கிறது என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டிருந்தனர். சிலர் இனி குஜராத்தின் தலை நகர் சந்திராவதி தான் என்றும் சொல்லிக் கொள்ள ஆரம்பித்தனர்! சிலர் வருங்கால வாக்கும் கொடுக்க ஆரம்பித்தனர்: மீனல் தேவி இருக்கும் வரை பட்டணுக்கு ஆபத்துத் தான். என்ன இருந்தாலும் அன்னிய தேசத்தவள் தானே!''

முதலில் பெண்கள் பயந்தனர். கதவை மூடிக் கொண்டனர். ஆனால் காரணம் தெரிந்தவுடன் ஜன்னல் வழியாக வெளியே பார்க்க ஆரம்பித்தனர். சந்திராவதி சேனை கோட்டைக்கு வெளியில் இருக்கிறது என்று தெரிந்தவுடன் அவர்கள் தங்கள் தங்கள் கணவர்களை வெளியேற்றினர். இப்படி வந்த எல்லோரும் அரண்மனை வாசல் முற்றத்தில் வந்து கூடினர். அவர்களுள் விஷயம் தெரிந்த அநேகம் தலைவர்களும் இருந்தனர். ஹாலார் மண்டலத்தின் அரசர்கூட இதைக்கேட்டுக் கொதித்தெழுந்தார். கேங்காரும் கூட குதிரை மேலேறி வந்து சேர்ந்தான். அவன் பழைய கால, வேகம் மிகுந்த ராஜபுத்திர வீரன். அவனைப்பார்த்து ஊதாவும் அவனிடம் வந்து சேர்ந்தான்.

''மகாராஜ்! பார்த்திர்களா? இனி பட்டண் பேர் தங்கள் கையில் தான்!''

"என்ன பேசுகிருய் நீ! இதோ பார்; சாந்திசந்திர மேத்தாவை ஒரே நொடியில் நிமிர்த்து விடுகிறேன். பார்க்கிறேன் பட்டண் மேல் படை எடுப்பவர் யார் என்று!"

ஊதா பொங்கிப் பெருகிப் பரவி நிற்கும் ஊர்வலத்தைப் பார்த்தான். பார்த்துக் கொண்டிருக்கும் போதே எவ்வளவு பெரிய மனிதர்கள் எல்லாம் வந்து சேர்ந்து விட்டனர்! டுங்கர் சிங் போன்றவர்களின் உத்ஸாகம் எல்லாம் ஆரம்ப சூரத்தனம் தான் என்று ஊதா அறிவான். உண்மையாகப்பெரிய மனிதர்களிடையே ஒரு ஆவேசம் ஏற்படும் வரை ஒன்றும் ஆகாது. இப்பொழுது ஊதாவுக்கு இன்னும் ஒரு கவலை ஏற்பட்டு விட்டது. வளர்ந்து பெருகிய கூட்டத்தில், பெரிய கலவரத்தின் மத்தியில் இவனை லக்ஷியம் செய்வார் ஒருவரும் கிடையாது. அவன் ஒரு வேலை செய்தான். அவர்களை அங்கேயே விட்டான். மெதுவாக நழுவிப் பக்கத்துத் தெரு வழியாகப் போய் அரண்மனை வாசலை அடைந்தான். கதவும் திட்டிவாசலும் அடைக்கப்பட்டிருந்தன. ஓட்டம் ஓட்டமாய் ஓடிப்பின் கதவை அடைந்தான். அதுவும் அடைத்திருந்தது. துவாரம் வழியாய்ப் பார்த்தான். பாராக்காரன் காவலிருந்தான்.

"ஏய் காவல்காரா?" என்று சப்தம் போட்டான்.

"யாரது?"

"நான்தான் அப்பா ஊதா! கொஞ்சம் திட்டிவாசலைத்திற."

"முடியாது. மகாராணியின் கடுமையான கட்டளை."

"அட, முண்டம்! ஏண்டா, ஏதாவது தெரியுமா? திற. இல்லையானல் சட்ணியாகி விடுவாய்!"

"ஏன் ஊதாசேட்! புத்தியை எங்கேயாவது அடகு வைத்து விட்டீரோ? போமய்யா போம்! ராணி அம்மா தலையை வாங்கி விடுவார்கள்.........!"

"அடே அசடே! ராணி எப்பொழுதோ போய்விட்டார்களே, காற்ருய்! பட்டண் முழுவதும் வருகிறதப்பா கூட்டம் கூடி!"

"என்ன சொல்லுகிறீர்கள்,...மகாராணி!?"

"அடே. மஹாராணி சந்திராவதி போய்ச் சேர்ந்துவிட்டார்கள். இதோ பார். பணம் வேண்டுமானல் எவ்வளவு கேட்டாலும் தருகிறேன். இல்லை வேறு உயர்ந்த உத்தியோகம் வேண்டுமா? நாளைக் காலையிலேயே கொடுக்கச் செய்கிறேன்! கதவை மட்டும் திறந்து விடு."

"மகாராணிதான் இல்லையே! இப்பொழுது என்ன நடக்கும்?"

"ஸத்தியமே! திரிபுவன் பால் சோலங்கி உள்ளே இருக்கிருரல்லவா? உள்ளே விடு. நாளையே பார். நீ நாயக் ஆகிவிடலாம் அல்லது பெரிய ஜாகிரே கிடைக்கலாம்!"

"அது எல்லாம் அப்புறம் ஆகட்டும், இப்பொழுது காது குண்டலங்களைக் கொடும்!"

"சரி. எடுத்துக்கொள்ளேன்.!" ஊதா முத்துப் பதித்த குண்டலங்களைக் கழற்றி எடுத்தான்.

சிப்பாய் கதவைத் திறந்து விட்டான். 'ஆனல்-பாரும். நாளையே ஜாகிர் கிடைக்க வேண்டும்!' என்று கண்டித்துக் கொண்டான்.

"கண்டிப்பாய்!" என்று சொல்லி ஊதா ஓடினன். லீலாதர வைத்யர் அறைக்கு. கர்ணதேவ் உடம்பு சரியில்லாததிலிருந்து லீலாதரரும் அரண்மனைக்குள்ளேயே இருந்தார்.

"லீலாதர் பெரியப்பா, பெரியப்பா!"

"யாரது?" என்ற பெண்குரல். ஜன்னல் கதவு வழியே வெளியே வந்ததும் ஒரு பெண் முகம்.

"யாரது மாத்ரா தேவியா! அப்பா, எங்கே? நான் தான் ஊதா?

"ஊதா அவர்களா? அப்பா திரிபுவன் பாலிடம் அல்லவா இருக்கிருர்கள்."

"திரிபுவன் பால் மகாராஜா எங்கே இருக்கிருர்?"

"அங்கே...அவர்......' புதிதாய் மணமானவள் கொஞ்சம் வெட்கம் காட்டினள்.

"அதோ பண்டித்ஜீ இருக்கும் இடத்திலா? இவ்வளவு நாளாகியும் இன்னும் என்ன வெட்கம்? பண்டித் கஜானனுக்கு நீ சித்தியா, புத்தியா! என்று கேட்டு, கொஞ்சம் தமாஷ் செய்து விட்டு வேகமாகச் சென்ருன்.

'வாசஸ்பதி! மாமனர் எங்கிருக்கிருர்? திரிபுவன் பால் எங்கே?"

"யாரது!" உள்ளே இருந்தபடியே வைத்யர் கூப்பிட்டார். ஊதா ஓடி உள்ளே அடைந்தான்.

லீலாதர் வைத்யர் கவலையை விட்டு வெற்றிலையை மென்றுகொண்டிருந்தார். ஸாமல் பார்ஹட் ஒளியிழந்த கண்களுடன் ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு உக்கா குடுகுடுத்துக்கொண்டிருந்தார். திரிபுவன் பாலன் கட்டிலின் மேல் உட்கார்ந்திருந்தான். ரத்தம் ரொம்ப வெளியேறிவிட்டிருந்தது. என்றாலும் வைத்யரின் மூலிகைகளின் அதிசயப் பலனினால் இரவு நன்றாய்த் தூங்கி, களைப்புடன் இருந்தாலும் சௌகர்யமாகக் காணப்பட்டான். ஒளி பொருந்திய முகம் ரத்தம் குறைந்த காரணமாய் ஏற்பட்ட வெண்மையில் அதிக அழகு கொண்டு தோன்றிற்று: அவன் குழந்தை முகத்தில் கவலைக் குறிகள் குடிகொண்டு நின்றன. அவன் தந்தை போய் விட்டார். அவன் தோழி ஏமாற்றி மறைந்து விட்டாள். தானும் மீனல் சின்னம்மாவின் கையில் சிறைப் பட்டவன் போல் கிடந்தான்.

"நமஸ்காரம் மகாராஜா! வைத்ய ராஜரே வணக்கம். ராம் ராம் பாரஹட்ஜீ!" ஊதா உள்ளே நுழைந்தான். இருவர் அவனைக் கண் கொண்டு நோக்கினர். பார்ஹட் முகத்தை அவன் பக்கம் திருப்பினார். திரிபுவன் நெற்றியில் சுருக்கம் ஏற்பட்டது.

"மகாராஜ், மன்னிக்க வேண்டும். பட்டண் நகரவாசிகளின் ஒரு விண்ணப்பத்தைக் கொண்டு சமுகத்துக்கு வந்திருக்கிறேன்...!"

"என்னிடம் பட்டண் நகர வாசிகள் விண்ணப்பம்!" திரிபுவன் ஆச்சரியப்பட்டான். மற்ற இருவரும் வாளா இருந்தனர்.

"ஆம் அரசே, பட்டணத்து ஜனங்களை ஆதரித்து ஆண்டு காப்பாற்றத் தாங்கள் ஒருவரே தான் தங்கியிருக்கிறீர்கள். ஜனங்கள் தங்களுக்குப் பாத காணிக்கை செலுத்த வந்து கொண்டிருக்கிறார்கள்!"

வைத்யர் கேட்டார்; "ஊதா, என்ன? பைத்யமா? பிதற்றுகிறாய்?"

"மகாராஜா! என்ன? தங்களுக்குக் கூடத் தெரியாதா? மகாராணி மீனல் தேவி ஜயதேவனுடன் சந்திராவதி போய் விட்டார்களே! பார்ஹட்ஜீ! என்ன கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறீர்கள்? சந்திராவதி சேனை பட்டணைப் பிடிக்க வந்து கொண்டிருக்கிறதே!"

லீலாதரர் பொடித்து எழுந்தார்: "இது அந்தச் சதிகாரன் யதியின் வேலையாகத் தான் இருக்க வேண்டும்."

"என்ன சொல்கிறாய் ஊதா சேட்? திரிபுவன் எழுந்தான். பலஹீனம். மறுபடி உட்கார்ந்தான். "பட்டண் பேரில் சந்திராவதியினர் படை எடுக்கிறார்களா?"

லீலாதரர் சொன்னார்: "ஏன் அப்பா வர மாட்டார்களா? யதி நல்லதிற்கா வந்திருக்கிறார்?"

திடீரென்று ஸாமல் பாரஹட் எழுந்தார்: "திரிபுவன் பால் ஸோலாங்கி! என்ன உட்கார்ந்திருக்கிறாய்?" ஹுக்காவைத் தள்ளி நிமிர்ந்து நின்றான். "நீ இன்னும் குழந்தை. பிரஸன்னா போய் விட்டாள். அவந்தியும் சந்திராவதியும் இங்கே ஏறி வருகிறது. இங்கே ஒரு வீராங்கனை மகனும் இல்லையா எதிர்த்து நிற்க?"

"மகாராஜா! பட்டண் முழுவதும் கலவரம் கொண்டு நிற்கிறது. எல்லோரும் அரண்மனைக்கு வெளியே நிற்கிறார்கள். எல்லோரும் தங்களைத் தரிசிக்கக் காத்து நிற்கின்றனர்!"

'நான் என்ன செய்வேன்? என் கைகள் வலியற்றுவிட்டனவே!'

பார்ஹட் சொன்னார்: ஸோலங்கி வீரா! அப்படிச் சொல்லாதே! உன் வலியற்ற கைகள் மற்ற எல்லாக் கைகளையும்விடப் பலம் கொண்டவை. எழு; 'சொல் ஜய் சோம்நாத்! என்று. எங்கே எல்லோரும்! யவனர்கள் வந்தபோது பீமதேவர் குதித்து நின்றார். நான் வலியிழந்தவனா என்று எண்ணிக்கொண்டு நிற்கவேயில்லை!"

'பார்ஹட் ஜீ! எல்லாரும் வெளி முற்றத்தில் நிற்பார்கள். சாந்தி சந்திரனிடமும் அவர்களுக்கு அவநம்பிக்கை தான்!"

பாரஹட்ஜீ. வாருங்கள். நாம் போய்ப் பார்க்கலாம், பாரஹட் சொன்னார்: "கிளம்பு. வைத்யரே கிளம்பும். கிளம்புங்கள் என் வீர ஸோலங்கியுடன்! என் ஸோலங்கிகள் நெடுங்காலம் வாழட்டும்." ஜய் சோம்நாத்!

பாவம் தளபதி!

ஸேட்சாந்தி சந்திரன் எழுந்தவுடன் ஜயதேவனைத் தாக்கவந்த சண்டையில்இறந்த மதனபாலனுடைய (கர்ணதேவனுடைய மாமா) சவத்தைச் சில சிப்பாய்களுடன் மயானத்துக்கு அனுப்பி சூரியோதயத்தில் வழக்கப்படி சூரியன் சாக்ஷியாக எரிக்கச் செய்தான். பிறகு அரண்மனையில் எல்லாக்கதவுகளிலும் கடுமையான பாராவைப் போட்டான். வழக்கப்படி ,ஒப்பாரி ,வைக்கவும் ஏற்பாடு செய்தான். மீனல்தேவி வெளியேபோனது தெரியாமலிருக்கவே அந்த ஏற்பாடு. ஒப்பாரிக்கு வந்தபெண்கள் எல்லாம் வீட்டுக்குப்போன

பிறகுதான் அவனுக்கு ஒரு மாதிரி அமைதி ஏற்பட்டது. நித்ய கர்மங்களைச் செய்து முடித்து, எப்படியாவது இரண்டு நாள் இந்த மாதிரி சென்றுவிட்டால் கவலைவிட்டது என்று எண்ணிக்கொண்டிருக்கும் போதே யாரோ வந்த சப்தம் கேட்டது.

வாயிற்காப்போன் வந்து, 'முரார்பால் வந்திருக்கிறான்" என்றான். முரார்பால் உள்ளே வருவிக்கப்பட்டு வந்ததும் என்ன சமாசாரம் என்று கேட்டான்.

"விக்ராட்டைத் தாண்டி கொஞ்ச தூரம் போனவுடனேயே ராணியவர்கள் என்னைத் திருப்பிவிட்டார்கள். இங்கே எல்லாம் என்ன நிலைமையிலிருக்கிறது.?"

"இங்கே எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது!"

'நாளை மாலை என்னைச் சாம்பனேரி வாயிலுக்கு வரச்சொல்லிருக்கிறார்கள். மகா ராணி அவர்கள் அப்பொழுதுதான் வருவார்கள்.

"ரொம்பசரி; அது வரை எல்லாம் சரியாகத் தான் நடக்கும். ஆனால் ஒருவருக்கும் இந்த விஷயம் தெரியவேண்டாம்!" முரார்பாலுக்குப் பிரஸன்னு விஷயம் தெரியும் ஆனால் பிரஸன்னுவின் காதல் முகம் (!) அவன் காக்குக்குத் தடை போட்டுவிட்டது.

"சரி, நீரே போய் அழைத்துவாரும். நான் வந்தால் வீண் சந்தேகத்துக்கு இடம் உண்டாகும்!" பேசிக்கொண்டேயிருக்கும்போது ஒரு காவற்காரன் வந்தான். தலை நிமிர்த்தி, 'ஏன்!' என்று கடுமையாகக் கேட்டான் சாந்தி சந்திரன்.

'ஏன! நான் தான் வந்திருக்கிறேன்:" என்று சொல்லிக்கொண்டே மானகுமாரிதேவி உள்ளே வந்தாள். வந்தவுடனேயே ஏதோ ஆரம்பித்தாள்.

சாந்திசந்திரன், பொதுவாக—"சரி முரார்பால்ஜீ! நீங்கள் போங்கள். சொன்னதை மட்டும் மறந்து விடாதீர்கள்." என்று அனுப்பிவிட்டான். முரார்பாலும் பதி பத்னியிடையே நிற்பது சரி அல்ல என்று தன் வெற்றுக் காதலைப்பற்றி எண்ணிக் கொண்டே போய்விட்டான். சாந்திசந்திரன் மனைவியைத் தணிக்கமுயன்றான்.

"ஏன்? இவ்வளவு என்ன கோபம்? என்ன நடந்துவிட்டது?"

"என்ன நடக்கும்? முழு ஊரும் திரண்டு புரண்டு உங்கள் உயிரைக் குடிக்கவருகிறது தெரியுமா?."

தண்டநாயக் துடித்தெழுந்தான். "ஏன்? ஊர் திரளுவானேன்?"

"சந்திராவதி யதிக்கு இங்கே என்ன வேலை? அதனால்தான். மீனல்தேவி எங்கே சொல்லுங்கள் பார்க்கலாம்!"

சாந்திசந்திரன் பதற்றம் பாதரஸம் குட்டில் ஏறுவது போல் ஏறிற்று. "அட கொஞ்சம் மெதுவாகத்தான் பேசேன்."

"எதற்காக, யாருக்குத்தெரியாத விஷயத்தை நீங்கள் அடக்கிவைக்கிறீர்களாம்? மீனல்தேவி வெளியே போனதும் சந்திராவதி சேனை வாசலில் வந்து காத்திருப்பதும் ஊரறிந்த ரகஸ்யம் தெரியுமா?"

"யார் சொன்னது அப்படி? அசடே, உள்ளதைச் சொல்கிறேன் கேள். மகாராணி எல்லாரையும் சமாதானப்படுத்தப் போயிருக்கிறாள். நாளை மாலையிலே திரும்பி வந்துவிடுவாள்......"

"அது சந்திராவதியின் சேனை? அது என்ன உங்கள் சொந்தமோ?"

"என்ன உளறுகிறாய்? சந்திராவதி சேனையாவது, மற்றென்றாவது? இது என்ன கனவு?"

"கனவுமில்லை, பிதற்றமுமில்லை. எல்லாரும் சொல்வது பொய், நீங்கள் மட்டும் ஹரிச்சந்திரர்! இதோ பாருங்கள், வேண்டாம் இந்த வேலை. நரைத்த தலையில் மண்ணை ஏன் வாரிப் போட்டுக் கொள்கிறீர்கள்?"

சாந்திசந்திரன் கொஞ்சம் கோபத்துடன் சொன்னான்: ஸேடானி! இப்பொழுது நகரைக்காப்பாற்றுவது என் கடமை, தெரியுமா? அறுபத்தைந்தாவது வயதில் ராணி வார்த்தையைத் தட்டி எஜமானத் துரோகம் செய்ய என்னாலாகாது?

"ஆகா, ராணி வார்த்தையை ஏன் தட்டுவீர்கள்? தந்தையர்கள் சம்பாதித்த பெருமைக்கு உலை வைப்பீர்கள்! ஊரே புரண்டு வருகிறது என்றால்...........! சந்திராவதி சேனையை இங்கே யாராவது நுழையப்பார்த்துக் கொண்டிருப்பார்களா?"

"அட, அது யார் சொன்னது? நீ போ, வீண் பேச்சு சொல்லாமல். நான் அவர்கள் வந்தால் பதில் சொல்லிக் கொள்கிறேன்."

"பதில் சொல்வீர்கள், சொல்வீர்கள், சொல்லமாட்டீர்களே? என்ன சொல்லுவீர்களாம்?"

"என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள் என்று சொல்லி விடுவேன். அரண்

மனையில் யார் நுழையமுடியும்? அடே அங்கே யாரடா, நாயக்?'' இதே சமயம் ஜனங்கள் ஆரவாரம் காதுக் கெட்டிற்று. "அட, இது என்னடா சப்தம். ஸரஸ்வதியில் இந்த வெள்ளம்?''

"அதுதான் அந்த ஜனங்கள் போடும் கோஷம்!'' ஸேட்டம்மாள் சொன்னாள்.

தொலைவிலிருந்து உருப்புரியாமல், பாய்ந்து பரவி கனத்து அச்சுறுத்தி வரும் ஆரவாரம் கேட்டுச் சாந்திசந்திரன் படபடத்தான். இப்படிப்பட்ட, நிலைபுரண்ட சமுத்திரம் போன்று இதயத்துள் புகுந்து பதறவைக்கும் அலறலை மகாசக்தியின் இரண்டு வகைகள் தான் ஏற்படுத்த முடியும்; அந்த இரண்டு வகைகளுக்கும் ஆழ்ந்த அடியில் ரத்தினங்களின் ஒளி, மின்னல்; வடவாக்னியில் கருணையற்ற நெருப்பு; இன்னல் தரும் முதலை முதலிய நீர்ப்பிராணிகளின் ரத்த வெறி கொண்ட ஆர்ப்பாட்டம் இருக்கும். புகழுக்குரிய அமைதிகொண்டிருக்கும் போது இரண்டு வகைகளிலும் வெளியில், மயக்கும் சங்கீதத்வனி கொண்ட ஆனந்த அலையடித்து விளங்கும். கண்மூடித் திறக்குமுன், மாறிய காற்று வாக்கில் அமைதி அழியும்; பேயலறல் ரத்தத்தை உறைய வைத்துக் கிளம்பும். அந்த அலறலில் வடவாக்னி முதலை முதலியவைகளின் பயம்கூட மறந்துவிடும். அரக்கப் பசி தணியவே சக்திகள் இந்தச் சீற்றம் சீறுகின்றன. அருகில் செல்கிறவர் அவர்கள் வயிற்றில் புதைந்து மடிவார். மனிதன் புத்தி பலம் கொண்டு நிறுத்தப்பட்ட சிறு சிறு மணல் குவியல்கள் மறைந்து ஒழியும்.

பட்டண்காற்று போக்கு மாறிற்று. இன்ப அலைகள் பேயுரு எடுத்தன. ராணி யதிசாந்திசந்திரன் கட்டிய மணற்கோட்டைகளைக் கரைத்து மறைக்க ஊர் திரண்டு பொங்கி எழுந்து விட்டது! அலைந்து எழுந்த அந்த ஜன சமுத்திரத்தின் தாண்டவ நடம் புரியும் திரை ஒலியைச் சாந்திசந்திரன் கேட்டு, கிடுகிடுத்து ஆடினான், பீமதேவனின் இளமைக் காலத்தில் யவனர்கள் படை எடுத்து வந்த காலத்தில் பட்டண் ஜனசமுத்திரத்தின் புயல் அலையைப்பற்றிக் கேள்வீப் பட்டிருந்தான். இன்று மீண்டும் எழுந்த அந்த ஒலிக்கு என்ன காரணம்? பலன் என்ன ஆகும்? இதை அறிய அரசியல் ஞானம் சாந்திசந்திரனுக்கு ஏது?

"சோப்தார் சோப்தார், கலியாண நாயக்கைக் கூப்பிடு.''

கலியாண நாயக் உள்ளே வந்தான்.

"கலியாண்! இது என்ன சப்தம்?''

"ஜனங்கள் கூச்சல் போடுகிறார்கள் போலிருக்கிறது!''

"நாயக், நீ ராஜபக்தியுடையவன். நம்முடைய பக்திக்கு இன்று பரீக்ஷைக் காலம் ஏற்பட்டிருக்கிறது. மகாராணி ஊரில் இல்லை, அவர்கள் திரும்பி வரும் வரை எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வது நம் பொறுப்பு. எது நடந்தாலும் சரி. நீ அரண்மனையின் தலை வாசலில் இரு. சமயம் வந்தால் அதையும் சாத்தி விட்டுக் காவல் புரிய வேண்டும். நானும் முதல் கட்டுக்கு வருகிறேன்.''

"ஆனால், மகாராஜ்! நம் வீரர்களைப்பற்றி ஒன்றும் சொல்ல முடியாது. நேற்றுத் தகவலுக்குப்பிறகு அவர்களுக்கு ராணி இங்கே இல்லை என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது............''

"அதைப்பற்றிக் கவலையில்லை, நீ கதவைப் பார்த்துக்கொள். நான் எல்லோருக்கும் சொல்லி அனுப்புகிறேன். ....சேடனி! நீ போவதாயிருந்தால் வெளியே போய்விடு. நான் அசையப்போவதில்லை.''

மானகுமாரி தேவி கணவன் மாறாத திடசித்தத்தைக் கண்டு மகிழ்ந்தாள். இந்தக்கிழவயதில் உங்களைத் தனியே விட்டு நான் எங்கே போகிறேன்?''

கலியாண நாயக் கதவுக்குச் சென்றான். சாந்தி சந்திரன் தயார் செய்து கொண்டான்.

'ஜய் சோம்நாத்' சப்தம், புகையில் உருஎடுத்துச் சீறி எரியும் நெருப்புப்போல் ஏறி வர ஆரம்பித்தது. அரண்மனையின் உயர்ந்த ஒரு பலகணி வழியாக, சாந்தி சந்திரன் திரளின் தன்மையை அறிய முயன்றான். ஆழி நோக்கி அலறி ஓடும் நதி போல் தோன்றியது அந்தப் பிரவாகம்.

கலியாண நாயக் ஓடி வந்தான்.

"மகாராஜா! சிற்றரசர் கேங்கார் சிங் வந்திருக்கிறார். தங்களையும் ராணியையும் பார்க்க விரும்புகிறார்.''

சாந்தி சந்திரன் சப்த நாடியும் ஒடுங்கி வந்தது. வருவித்த தைரியத்துடன் சாந்தி சந்திரன் கேட்டான். "நீ என்ன சொன்னாய்?''

'மகாராணி அவர்கள் துக்கம் காக்கிறார்கள். சாந்தி சந்திரர் பூஜையிலிருக்கிறார்' என்று சொன்னேன்.''

'பிறகு?'

"வரட்டும்'' என்று காத்திருக்க ஆரம்பித்தார். அழைத்து வந்து சபைக் கூடத்தில் அமர்த்தியிருக்கிறேன்.

"சரி. நான் சென்று பார்க்கிறேன். நம்மிடம் சேனை வீரர்கள் எவ்வளவு பேர் இருப்பார்கள்?"

"கிட்டத்தட்ட நூற்றைம்பது..."

"ஆபத்து வந்தால் உயிரைப் பணயம் வைத்து நம்முடன் நிற்பவர்கள்..."

"ஐம்பது அறுபது ஆகி வரலாம்......"!

"சரி, மற்றவர்களைப் போக்குக் காட்டி எவ்விதமாவது வெளியே அனுப்பி விடு. மற்றப் பொருள்கள் இருக்கின்றனவா?"

"ஆம்......"

அந்தக் காலத்து அரண்மனைகள் ஆபத்துக் காலத்தில் கட்டுக் கேற்ற கோட்டையாகவும் விளங்கின.

"சரி, சில சிப்பாய்களுடன் முன் வாயிற்படியில் இரு. என்னைக் கேட்காமல் கதவு திறக்கப்படல் கூடாது" என்று எச்சரித்து சாந்திசந்திரன் கீழே இறங்கிவந்தான். சபைக் கூடம் பெரியதாய் பொன்னிழைத்துப்பொருமையுடன் விளங்கிற்று. அதன் மூலையில் கேங்கார் சிங் வெளுத்த மீசையைப் பழுத்த கையினால் தடவி விட்டுக்கொண்டு நின்றான்.

"சாந்தி சந்திரரே. நான் ராணி அவர்களைப் பார்க்க வேண்டும்"

"அவர்கள் துக்கம்......"

'பரவாயில்லை. உள்ளேயிருந்து பேசட்டும்'

"ஆனால் அப்படியாவது என்ன அவசரம்?" அவர்கள் கடுமையான உத்தரவிட்டிருக்கிறார்களே?"

"சரி, குமார் ஜயதேவ் துக்கம் காக்கவில்லையே......!"

"அது சரி, அவசியம் என்ன என்று சொல்லவில்லையே!"

"சாந்தி சந்திரரே! ஜனங்கள் சொல்வது சரியா தப்பா என்று தெரிந்துகொள்ள வேண்டும்"

"கேங்கார் சிங்! நீங்கள் கர்ணதேவருக்கு வேண்டிய நண்பர். இந்தச் சமயம் நண்பர் என்ற முறையில் வந்தீரா அல்லது எதிரியாகவா?"

"சேட்ஜீ! மகாராஜ் கர்ணதேவர் குமார் எனக்குக் கடவுள் மாதிரி. அதற்காக நான் பட்டணின் பெருமைக்குக் கொள்ளிவைக்க முடியாது. குமார் ஜயதேவைப் பார்த்து விட்டு உடனே போய் விடுகிறேன்!"

"மண்டலேசுவரா! சொல்கிறேன் கேளும். தேவப்ரஸாதும் முஞ்ஜாலும் சேர்ந்து பட்டண் பேரில் படை எடுக்க முடிவு செய்திருந்தனர். அதைத் தடுக்கவே, ராணி அவர்கள் என்னிடம் இதை ஒப்புவித்து மதுபுரி சென்றிருக்கிறார்கள்"

"சாந்தி சந்திரரே! கேங்காரையா ஏமாற்றப் பார்க்கிறீர்?"

"இல்லை இல்லை.........உண்மை......!"

"எது உண்மை? அந்த யதி ராணியைச் சந்திராவதி சேனையருகில் இட்டுப் போயிருக்கிறார். ராணி அந்தச் சேனையுடன் பட்டண் நகரைப் பாழாக்க வருகிறார்கள் என்பதல்லவா உண்மை!".

"போம் ஐயா இந்த மாதிரி செய்வதற்குத் தான் என்ன காரணம்?"

மண்டலேசுவரன் சொன்னான்: வேறு ஒன்றுமில்லை; மண்டலேசுவரர்களைப் பயமுறுத்தி அடிமையாக்கலாம்! சாந்தி சந்திரரே! இது உம்முடைய சூழ்ச்சி. இப்பொழுது வெளியே கூடி நிற்கும் ஜனங்களுக்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்?"

"வெளியே எதற்காகக் கூடி நிற்கிறார்கள்? யார் நிற்கிறார்கள்?"

"யாரா? யாரில்லை என்று கேளுங்கள்! மேதா! தகவல் வலுத்து விட்டது. மகாராணி பட்டண் முகத்தில் கரி பூசி விட்டார்கள். இப்பொழுது வருந்த வேண்டி வரும். ஜனங்கள் உயிரை வாங்கி விடுவார்கள்."

"கேங்கார் சிங். என்ன செய்தாலும் ராணி ராணி தானே. ஜனங்களுடன் சொல்கிறேன், சும்மா இருங்கள் என்று."

"சேட், புத்தி மாறாட்டமா? சந்திராவதி சேனையை வாசலில் வைத்துக் கொண்டு பட்டண் வாசிகள் சும்மா இருக்கவா? என்ன ஆனால் என்ன? நாங்கள் வாயில்களைச் சாத்தி உட்காரப் போகிறோம். உமக்கும் ஆபத்து வரப் போகிறது!;'

சாந்தி சந்திரன் என்ன செய்வான்? ராணி வரும் வரை தலை பணியக் கூடாது. அதிகாரத்துக்குச் சிதைவு ஏற்படக்கூடாது. "மண்டலேசுவரரே! அதிகாரத்தைக் காப்பாற்றுவது என் கடமை, அதிகம் போனால் கோட்டையைச் சாத்திக்கொண்டு உள்ளே உட்கார்ந்து விடுவேன். ஜனங்கள் வெளியில் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும்?"

ஜனங்கள் இதோ அரண்மனையில் வந்து விடுவார்கள், சேட்ஜி, வீண் முரட்டுப் பிடிவாதம் பிடிக்காதீர். ஜனங்களை அமர்த்தும். பட்

டன் கோட்டை வாயில்களை எங்களிடம் ஒப்புவியும். அவ்வளவுதான் வேண்டியது."

"உங்களைப்போலப் பல சிற்றரசர்கள் சொன்னாலும் நான் கடமையிலிருந்து வழுவமாட்டேன்...தவிர சந்திராவதி ஜைனர்கள் என்ன வேற்றாட்களா? நம்மவர்கள் தானே!"

மண்டலேசுவரன் திரும்பி நின்று சொன்னான்; "உங்களவர்களா யிருப்பார்கள். நம்மவர்கள் என்று சொல்லாதேயும்! சொல்லி விட்டேன். பிறகு உம் சௌகரியம்!"

"கேங்கார் சிங்! நீர் இப்பொழுது வெளியேற முடியாது. அரண்மனை வாயில் மூடியாய்விட்டது."

கேங்கார் வாளில் கைபோட்டு அதட்டினான்:

"என்ன? என்னைக் கைது செய்யவா?"

"மண்டலேசுவரரே! என்னை மன்னியும். நீர் வெளியே போகமுடியாது."

"வெளியே எதிர் பார்க்கிறவர்கள்?......"

"நின்று பார்த்துவிட்டுப் போகிறார்கள்......நான் உயிருடனிருக்கும் வரை கதவு மட்டும் திறவாது........."

"ஏன்?" கேட்டது ஒரு இளங் குரல்; அதிகாரம் கொண்ட குரல்; வெளுத்து பலம் குறைந்தும் கோபத்தால் ஒளி பெருகி விளங்கும் முகத்துடன் திரிபுவன் பால் வாயிற்படியில் நின்றிருந்தான். அவன் முதுகைத் தாங்கி ஊதா நின்று கொண்டிருந்தான் லீலாதர வைத்தியரும் ஸாமல் பாரஹட்டும்கூட இருந்தனர். தேவனைப் போன்ற திரிபுவனைப் பார்த்து சாந்திசந்திரனும் கேங்காரும் அசைவற்று நின்றனர்.

ஸாமல் பார்ஹட் கேட்டார்: "சாந்தி மேதா! பட்டன் குடிகள் வாயிலில் காத்து நின்று, கதவு அலற ஏன் சாத்தப்படவேண்டும்? பசு பிராமணர்களைக் காப்பாற்றுபவன் கதவு அடைபட்டு என்றாவது நீர் கேட்டதுண்டா?"

சாந்தி சந்திரன் கோபம் புரளும் குரலில் சொன்னான்: "பார்ஹட்ஜீ! நான் யார் யாருக்குப் பதில் சொல்வது? ராஜ்யத்தைக் காப்பாற்றுவது என் பொறுப்பு. யார் கதவைத் திறக்க முடியும்? திறக்கப்போகிறவன் தலை தனியே பறந்துவிடும்."

திரிபுவன் உதட்டைக் கடித்து, கோபத்தை அடக்கினான்.

"மேதாஜீ! நான் திறக்கமுடியும்! குமார் ஜயதேவ் இல்லை. அப்பா இல்லை. இன்று பட்டணின் பெருமை என் கையால் காக்கப்படவேண்டும். பெண்கள்போலப் பதுங்கியிருக்க என்னால் முடியாது. நான் திறப்பேன் கதவை."

சாந்தி சந்திரனும் திரிபுவன் பாலை அறிந்தான். கேங்காருக்கும் விளங்கிவிட்டது. ஒருவன் பயந்தான். மற்றவன் ஆனந்தம் கொண்டான். கேங்கார் கோஷமிட்டான். "யார்? மண்டலேசுவரர் குமாரன் திரிபுவன்பாலனா? ஸோலங்கி வீரா! வாழ்வாயாக!"

"நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள்." சாந்தி சந்திரன் நாணல்போல் எதிர்பாராது அடித்த காற்றுவேகத்தில் நடுங்கிச் சொன்னான்.

"முடியாது, பட்டன் குடிகள் அவர்கள் அரசன் வீட்டு வாசலில், நிற்கக்கூடாது. அவர்களுக்கு வரவேற்பளிப்பதில் தாமதமா?" திரிபுவன் பால் சொல்லிக்கொண்டே முன்னேறி உள் முற்றத்துக்கு வந்துவிட்டான். மேடையிலிருந்து அரண்மனையின் வெளிச்சுவருக்கு இடையே முற்றம் குறுகியது தான். இரண்டு முற்றங்களும் சில சமயங்களில் சேனை நிறுத்த உதவியாக இருந்தன. கேங்கார் சிங் திரிபுவன் பாலனைத்தொடர்ந்தான். சாந்திசந்திரன் கலவரத்துடன்! கேங்காரைச் சிறை பிடிக்கலாம். திரிபுவன் பாலனை என்ன செய்வது?

"குமார்! நான் தளபதி. சொல்வதை நீங்கள் கேட்கவேண்டும்!" திரிபுவன்பால் பதில் சொல்லாமல் சென்றான். கேங்கார் பாய்ந்து ஓடி அரண்மனை வெளிச் சுவர்க்கதவை அடைந்தான். கல்யாண நாயக்கிடம் ஏதோ சொன்னான். அவன் ஒன்றும் புரியாமல் சாந்தி சந்திரன் பக்கம் திரும்பி விதித்தான்: தளபதி தலையைக் கீழே போட்டிருந்தான். முற்றத்தின் நடுவில் திரிபுவன் பாலனையும் பார்த்தான். நிலைமையின் சங்கடத்தை எண்ணி அவனும் சும்மா நின்றான். கேங்கார் திட்டி வாசலைத் திறந்துவிட்டான். அணைக்குப்பின் நின்ற பிரவாகம் சிறிய மடைவழியாக அறுத்துக்கொண்டு ஓடிவர ஆரம்பித்தது. பிறகு தாழ்ப்பாள் தள்ளிப் பெரிய கதவும் திறக்கப்பட்டது!

திறந்த கதவு வழியே உள்ளே வந்த ஒரு பெரிய அலை முற்றத்தில் பரவி நின்றது.

முடிவு

மெதுவாக லீலாதரர் கையைப் பிடித்துக்கொண்டு திரிபுவன் சபைக் கூடத்துக்கு வந்தான். அங்கே வந்த அவனை உள் பக்க முள்ள ஒரு வாசலில் தென்பட்ட கவலை கொண்ட ஆனால் அழகிய பழக்கமுள்ள ஓர் பெண்ணின் முகம் திடுக்கிடச் செய்தது. அவளைக்கண்டு அவன்கொண்ட கடுந்தோற்றம் ஆவல் அலையடிக்க வந்த பிரஸன்னவைக் கல்லாக்கிற்று. திரிபுவன் மெதுவாகப் பொற்சிம்மாஸனத்தருகில் வந்து, தலையணையைத் தாங்கி உட்கார்ந்து சொண்டான். அவனால் அதற்குமேல் நிற்க முடியவில்லை.

பட்டணத்து ஜனங்களின் கூட்டம் முதலில் வேகமாய் வந்தது. பிறகு அடங்கி நின்றது. அரண்மனையில் உரிமையில்லாதவர்கள் வருதல் கூடாது. அவர்கள் கொஞ்சம் தயங்கி நின்றுவிட்டார்கள். ஆரவாரம் அடங்கி அமைதி ஏற்பட்டது. கோயிலுக்குச் சமமான அரண்மனையைத் தங்கள் வினயமற்ற செயல்களினால் அபவித்திரமாக ஆக்க ஒருவருக்கும் தைரியம் இல்லை. டுங்கர் நாயக் கூடத்தான் அடங்கியது மட்டுமன்றி அடக்கமான முறையில் மற்றவரையும் அமர்த்த முயன்றான். சிற்றரசர்கள், ஸேட் சாவுக்கார்கள் மற்ற கவுரவமுள்ள பெரிய மனிதர்கள் சபாபவனத்துக்குள் வந்தார்கள். டுங்கர் நாயக் வாயிற்படியில் நின்று கொண்டான். ஊதாவும் பெரிய மனிதர்களை உள்ளே அழைத்து வரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டான். எல்லோருமே அவனை அந்த நேரத்தில் உண்மை ஊழியனாக எண்ணத் தொடங்கி விட்டனர். ஊதா மற்றவர் யோசிக்குமுன்னமேயே திரிபுவனருகில் சென்று அமர்ந்து, தன் சால்வையினால் விசிற ஆரம்பித்தான். லீலாதரர் எல்லாரையும் உட்காரச் செய்தார். சாந்தி சந்திரன் என்ன செய்வது? ராணிக்கு என்ன சொல்வது? என்றே தெரியாமல் கேள்விக்குறியாய் உட்கார்ந்திருந்தான்.

கேங்கார் ஆரம்பித்தான், "திரிபுவன்பால்ஜீ இப்பொழுது நீங்கள் தான் எங்கள் அரசர்.

ஏதாவது செய்யவேண்டிய சந்தர்ப்பம் நேரிட்டு விட்டது."

"கேங்கார் பெரியப்பா. நீங்கள் பெரியவர்கள். உங்கள் கையினுல் தான் இன்று பட்டண்பெருமை காக்கப்படவேண்டும். சாந்தி சந்திரரே நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" சாந்தி சந்திரன் புட்டியில் அகப்பட்ட தக்கையைப்போல் வார்த்தைகளை இழுத்தான்.

'மகாராஜா! தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள். ஏன் வீணில் கலவரம் அடையவேண்டும்? இவ்வளவு வருஷத்தில் என் உழைப்பில் ஏன் கரி தீற்றுகிறீர்கள்? தாங்கள் பட்டணில் எவ்வளவு பெருமை கொண்டிருக்கிறீர்களோ அவ்வளவு எனக்கும் இல்லை என்று ஏன் சந்தேகிக்கிறீர்கள்? ஸோலங்கிகளின் ஜோதி சூரியன் பிரகாசித்துக்கொண்டேயிருக்க வேண்டும் என்று தானே நானும் பிரயத்தினம் செய்து வருகிறேன்......'

இரண்டு மூன்று பேர்கள் குறுக்கிட்டார்கள். கிழவனின் வயதான தன்மதிப்பு ஒளிவிட்டு எரிய ஆரம்பித்தது. திரிபுவன் சொன்னுன்: "நீங்கள் உட்கார்ந்துகொண்டு அமைதியுடன் சொல்லுங்கள்......"

உட்கார்ந்துகொண்டு மந்திரி மெதுவாகச் சொன்னுன்: "சகோதரர்களே, நீங்கள் ஏன் பதறுகிறீர்கள்? ராஜ்யத்தில் அமைதி ஏற்படுத்தத்தான் ராணி அவர்கள் வெளியே போயிருக்கிருர்கள். ஒரு புறம் கோபம் கொண்ட முஞ்ஜால் மதுபுரியில் டேரா அடித்திருக்கிருர். மற்ருெருபுறம் ரோசம் கொதிக்க மண்டலேசுவரர் சேனை மேரளத்தில் இருக்கிறது. இருவரையும் அமர்த்தி விட்டு, ராணி நாளை மாலையே வந்துவிடுவார்கள். அதுவரையில் பொறுத்திருங்கள். பிறகு வேண்டியதைச் செய்துகொள்ளலாம். நீங்கள். எல்லாம் தெரிந்தவர்கள். ஒரு நாளில் ஒன்றும் முழுகி விடாது.!"

சிலருக்குத் தண்டநாய்க் சொன்னது சரி என்று பட்டது.

ஊதாவுக்கு இப்படி அமைதி ஏற்பட்டு விட்டால் நஷ்டம்தான். அதற்காக அவன் கேட்டான். ஒரு குரல் "நாம் ஏமாற நேரிட்டு விட்டால்?

சிலர் அவனுக்கும் "ஆம்" போட்டார்கள்.!

லீலாதர் கேட்டார்: "கதவுகளை எல்லாம் சாத்திவைத்து விட்டால் ஏமாற்றம் எப்படி நேரிடும்?"

சாந்தி சந்திரன் அவசரமாக அதை ஆமோதித்தான். "என்னிடம் விட்டு விடுங்கள். ஒரு எதிரியும் வராமல் பார்த்துக்கொள்கிறேன். பிறகு என்ன வேண்டும் உங்களுக்கு?" எல்லோரும் அதை ஒத்துக்கொள்ளு முன்னமேயே ஊதா "சந்திராவதி சேனை எங்கிருக்கிறது என்றுயாருக்குத் தெரியும்?" என்று கேட்டு வைத்தான்.

சாந்தி மேதா தீவிரமாக மறுத்தான்: "முற்றிலும் பொய். சந்திராவதி சேனை மதுபுரியிலிருந்து நகரவேயில்லை. அங்கேயே தான் இருக்கும்!"

"அப்படியானுல் சரி!' என்று சொல்லி எழுந்திருக்க ஆரம்பித்தனர். அவர்கள் வேகம் தணிய ஆரம்பித்திருந்தது. ஆபத்து வாயைப் பிளந்து அருகில் வந்தால் ஒழிய யார் ஆயுதம் எடுத்துச் செல்ல விரும்புவார்கள்? சாந்தி மேதாவுக்கும் துடித்த இதயம் அடங்கி வர ஆரம்பித்தது. இந்தக் காற்றில் இருண்ட மேகங்கள் சிதறி விடலாம்!

இவ்வளவில் வாசலில் நின்ற ஜனங்களிடையே குழப்பம் ஏற்பட்டது ஜய்சோம்னுத் பல்லாயிரம் வாய்களில் பட்டு எழும்பிற்று. கேங்கார், திரிபுவன் கோபித்தார்கள். சாதாரண மக்கள் மரியாதையை மீறி இப்படிக் கத்துவது ஒருவருக்கும் பிடிக்கவில்லை.

திரிபுவன் கேட்டான்: "கல்யாண நாய்க் இது என்ன ரகளை?"

கல்யாண் பதில் சொல்வதற்கு முன்னமே டுங்கர் நாய்க் ஒரு கடிதத்துடன் உள்ளே புகுந்து வந்தான். "மகாராஜா! விக்ராட்டிலிருந்து தூதன், ராணி அவர்கள் சமுகத்துக்கு நிருபம் கொண்டு வந்திருக்கிருன்."

திரிபுவன் வந்த வேகத்தின் காரணமாகப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கும் தூதனைப் பார்த்தான். பிறகு கடிதத்தை வாங்கிப் படித்தான். படிக்கப் படிக்க அவன் முகம் கறுத்தது. "என்ன சாந்தி சேட்! யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்? இதோ சந்திராவதி சேனை விக்ராட்டில் தண்டு இறங்க ஆரம்பித்துவிட்டதே!"

எல்லோரும் குதித்தெழுந்து அடக்கத்தை மறந்து, என்ன? என்று அலறினர்.

"சாந்தி மேதா நமக்குக் கதை சொல்லுகிருர்.! விக்ராட்டிலிருந்து தேவஜீ கிராமத் தலைவன் சமாச்சாரம். அனுப்பியிருக்கிருன்......"

விதியே சாந்தி மேதாவுக்குச் சதி செய்தது! யதி சேனையின் சில பகுதிகளை விக்ராட்டிற்கு அனுப்பியிருந்தார். ராணி வரும்போது அங்கே இறங்க விரும்பியிருந்தாள். அந்தக் கிராமத் தலைவனுக்கு இதைப்பற்றி ஒன்றும் அறிவிக்கப்படவில்லை. ஆகவே அவன் சேனையைக் கண்டதும் பயந்து அலறிச் சமாசாரம் அனுப்பிவிட்டான், ராணிக்கு.'' கடிதத்தைப் படிக்கக் கேட்ட எல்லோரும் இடியுண்ட நாகம் போல் அசந்து விட்டனர்.

சாந்திசந்திரன் சந்திரன் இருப்பிடத்தைப் பார்க்க ஆரம்பித்தான். இனிக் கடவுள் தான் அவனுக்கு உதவிக்கு வரவேண்டும். இனி அவன் வசத்தில் ஒன்றும் நில்லாது. ஆனாலும் ஒரு முறை முயன்றான். "என்ன சமாசாரம்? தூதுவனைக் கூப்பிட்டு நன்றாய்க் கேட்கலாம்.''

ஊதா கத்தினான்: "கூப்பிட்டுக் கேட்பதென்ன? மேதா வயது ஆய்விட்டதல்லவா? பேசிப் பேசி ஏமாற்றிக் காலம் கடத்தப் பார்க்கிறீர்! மகாராஜா சீக்கிரமே ஏதாவது முடிவு செய்யுங்கள்! சண்டைக்கு ஆவேசம் கொள்பவர்களும் உண்டு; அருகில் வந்த சண்டைக்கு உதவுபவர்களும் உண்டு. திலக் சந்த் அந்தக் கூட்டத்தில் சேர்ந்தவன். அவன் கெஞ்சினான். ''ஊதாசேட் கொஞ்சம் அமைதியாகவே நடக்கட்டுமே!"

"அமைதி! அமைதி? யாரடா அது? அமைதிக்கு அழுபவர் யார்? அவன் பெயரைத்தான் கொஞ்சம் சொல்லுங்களேன்!'' முழங்காலை ஊன்றி உடலுடன் துப்பட்டியாகப் பிணைத்து ஆடிவிழுந்து கொண்டிருந்த ஸாமல் பாரஹட் எழுந்து நின்று சத்தம் போட்டார். ''அமைதி என்று சொல்ல வெட்கமாக இல்லை அவனுக்கு! தாயின் பாலை அல்லவா அவமானப்படுத்துகிறான்! எந்த ராணியின் மகனும் இல்லையா அவன் நாக்கைப் பிடுங்க!''

ஸேட் சாந்திசந்திரன்:—''பாரஹட்ஜீ! நீங்கள் ஏன் கஷ்டப்படுகிறீர்கள்? நான் சொல்வதையும் கொஞ்சம் கேளுங்களேன்!'' என்று கெஞ்சினான். ஆத்திரத்தால் துடிக்கும் அந்தக் கூட்டத்தில் அவன் தனி. எப்படியாவது இரண்டு நாள் கழிந்தால் முரார்பால் சொல்கிறபடி ராணி வந்துவிடுவாள். பிறகு அவன் தொந்தரவு தீரும். இந்தச் சமயம் விக்ராட்டிலிருந்து இந்தத் தூதன் இந்த ஓலை கொண்டு எங்கே வந்தான்? பாரஹட் நாக்கில் நெருப்பு இருந்தது அவனுக்குத் தெரியும். அதனால் அவனைச் சமாதானப்படுத்த ஆரம்பித்தான்.

"யார்? கஷ்டப்படுகிறேனா? அமைதியாயிருக்க வேண்டுமா? அடே! எவ்வளவு காலம் அமைதியாயிருந்து உங்கள் கூத்து நடந்து வருகிறது? சாந்தி! நாலு புத்திரர்களுடன் ஸோமநாதத்துக்கு எதிரில் வீரசுவர்க்கம் எய்திய அந்தத் தந்தையின் மகனா இன்று பட்டணை வாரிவிட யோசனை செய்திருக்கிறாய்?. இவர்கள் எல்லாரும் பார்த்துக் கொண்டுமிருக்கிறார்கள்! எவ்வளவு நேரம் வீண் பேச்சில் கழிகிறது! வனராஜதேவன் தலை நகரிலுமா இந்தக் கோழைகளின் காட்சி!''

கண் இழந்த கிழவயது பார்ஹட்ஜீயின் தேர்ந்த உயர்ந்த குரல் ஜனசமுத்திரத்தின் மேல் எதிரொலித்துப் பாய்ந்தது, ஸாமல் பார்ஹட்டைப்பற்றி ஜனங்கள் கர்ப்பத்திலிருந்தது முதலே கேட்டுவந்தார்கள். இன்று எதிரே கண்டு கண் திறந்து வாய் திறந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். முதலில் பார்ஹட் பாதிச் செய்யுளும் பாதி வசன நடையிலும் சொன்னார். வாயில் பொறி பறக்க, போகப் போக ஏறி வரும் குரலில் கிழவர் பேசிக்கொண்டு சென்றார். அந்த நடுக்கம் தான் எங்கே பறந்துவிட்டது? வளைந்த உடல் நிமிர்ந்து நின்றது.ஒளி இழந்த கண்களும் புத்தொளி காட்டி மின்னின. பீமதேவனைத் தட்டி எழுப்பி ஆவேச உயிர் கொடுத்த அதே குரல் இன்று அதிர்ந்து ஒலித்தது; நெருப்பைக் கக்கிற்று.

திரிபுவனும் பாரஹட்ஜீ என்று அமர்த்தினான். கிழவன் குரல் துள்ளி எழுந்தது. ''குமாரா! என் ஸோலங்கி வீரா! இது என்ன காலம் வந்துவிட்டதடா? என் வீரப் பட்டண் நகரவாசிகள் எங்கே போய்விட்டார்கள்? என் சூர சோலங்கிகள் எங்கே? குமார்! இந்த நாளும் வருமா? என் உள்ளம் நகையுண்கிறதே! நான் பட்டணில் வீரத்தின் எல்லையைப் பார்த்தவன்! மரியாதையைக் காப்பாற்ற, பெயரை நிலைநிறுத்த, புகழைப் பறிகொடுக்காமல் இருக்க, இருபது இருபது புத்திரர்களை உதட்டிறுதியில் புன்னகையுடன் சண்டையில் ஆகுதி கொடுத்துப் பார்த்திருக்கிறேன்! குஜராத்தின் கௌரவத்திற்காக 'வாழைக்காய் போல் குழந்தைகள் 'கேசரியர் செய்வதை என் கண்கள் கண்டு பரவசமடைந்திருக்கின்றன. காதல் பித்துப்பிடித்த கணவர்களை யுத்தத்துக்கனுப்ப, முதலிலேயே நெருப்பில் விழுந்து எரிந்து நின்ற தெரிவையர்களைப் பார்த்து ஆச்சரியமடைந்திருக்கிறேன். நான் பீமதேவன் விமல் மந்திரியுடன் சுற்றியிருக்கிறேன். ஒன்றரை மாதம் கோட்டைக்குப் பின்னிருந்து ஆப்கானியர்களை அல்லல்படுத்தியிருக்கிறேன். இந்தச் சமயத்தில் ஒரே மந்திரம்தான் உச்சாடனம் செய்யவேண்டும். அந்த் மந்திரத்துடன் தான் துயர் நீங்கும். தெய்வத்தை ஆராதிக்க வேண்டும்.....''

பாரஹட்ஜீ சரியான ஏற்றம் தாழ்த்தி கொடுத்துச் சொல்லிக்கொண்டே சென்றார். மக்கள் பிணைப்புண்டு நின்றனர். 'பார்ஹட் எந்த மந்திரத்தால் துயர் நீங்கும்?' என்று கேட்டனர். பெரிய பேச்சாளன் செய்வதுபோல் தயங்கி, நிறுத்தி உரத்தகுரலில் போட்டார் ஒரு கோஷம்: "ஜய் சோம்நாத்!"

ஏரியில் எழுந்த பேரலைபோல் சற்றுச் சும்மா நின்ற கூட்டத்தின் அமைதியில் வானளாவி ஜய் சோம்நாத் சப்தம் எழுந்தது. கூடவே உறை நீங்கி ஒளித்து ஆகுதிபெற்ற நெருப்பின் நாக்குகள் போல வெளியேறின அநேக வாட்களும்!

திரிபுவன் முன்னேறினான்: "பட்டண் வீரர்களே! இன்று மீட்டு மொருமுறை பாரஹட் பட்டணைக் காப்பாற்றினார். இப்பொழுது ஒரே வழிதான். கதவுகளை அடைத்துவிட்டு யுத்தத்துக்குத் தயாராகவேண்டியது தான், கேங்கார் சிங் ஜீ! தாங்கள் பழக்கம் பெற்றவர். தாங்களே இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள்."

வஸ்துபாலன் சாந்தி சந்திரனைப்பற்றி ஞாபகப்படுத்தினான். "அவரை என்ன செய்கிறது? அவர் ஒன்றும் பேசவில்லையே!" பாவம் சாந்தி சந்திரன் முகம் தயவுக்கு விண்ணப்பம் போட்டுக்கொண்டிருந்தது. ஊதா சொன்னான்: "சாந்தி சந்திரன் என்ன சொல்வார்? அவர் பாட்டில் தனித்திருந்து பஜனை செய்யட்டும்!"

வஸ்து பாலுக்கு ஒரு வெகுநாளைய ஆசை. பொக்கிஷதாராக வேண்டும் என்று. ஆனால் அதை எப்படி தன் வாயால் சொல்வான்? ஆனாலும் ஊதாவிடம் கெஞ்சும் பார்வையுடன், "ஊதா சேட்! பொக்கிஷம் யார் வசம் இருக்கும்? இந்தச் சமயம் அது மிகவும் முக்கியமான விஷயமாயிற்றே!" என்று வாயால் கொஞ்சமும் கண்ணால் அதிகமும் பேசினான்.

ஊதா பறந்து பிடுங்கினான் வார்த்தையை. திரிபுவன் பக்கம் திரும்பி "மகாராஜா! இந்தச் சமயத்தில் பொக்கிஷதார்வேண்டாம். கொஞ்சநேரத்தில் என்ன நடக்கும் என்று யார் சொல்ல முடியும்? பொக்கிஷத்தைப் பூட்டி பாரா போடுங்கள். தொந்தரவு நீங்கும்"

கேங்கார் ஒரு சந்தேகத்தைக் கிளப்பினான்: "ஆனால் ரூபாயில்லாமல்......?"

ஊதா சொன்னான்: "ரூபாய்க்கு என்ன கவலை? இந்த உபத்திரவம் தீரும் வரையில் ஆகும் செலவுக்கெல்லாம் நான் தருகிறேன். சரி, தவிர பிறகு என்ன வேண்டும்?"

இந்த எதிர்பாராத பெருந்தன்மை எதிர்பார்த்த பெருமையை விளைவித்தது! எல்லாச் சேட்டுகளும் திடுக்கிட்டனர். ராஜபுத்திர வீரர்கள் ஊதாவை உண்மைத் தேசபக்தனாகவும், தான வீரனாகவும் எண்ணினர்.

ஸாமல் பார்ஹட் பேசிய களைப்புத் தாங்காமல் கீழே விழுந்துவிட்டார்! வெளியேறிய ஆவேச வார்த்தைகள் அவர் வாழ்க்கைத் தீபத்தையும் அணைத்து முடிந்துவிட்டன. கீழே விழுந்த சப்தத்தைக் கேட்டு எல்லோரும் அவர் பக்கம் திரும்பினர். லீலாதர வைத்தியர் நாடியைப் பார்த்துவிட்டு, 'சிவ' பிரானைக் கூப்பிட ஆரம்பித்துவிட்டார். சபை முழுவதும் கண்ணீர் பெருக்கிற்று. பழைய வீரத்தை உருவாக்கி எதிரே நிறுத்தி உயிரில் ஒளி பொருந்திய வீரன் பார்ஹட் வீழ்ந்திறந்துவிட்டார்! யவனர்கள் கண்களில் விரல் கொடுத்து ஆட்டிய, பட்டண் வீரர்களை உத்ஸாகமூட்டிய அந்த வீரப் புகழ்பாடி இன்று அவர்கள் வழித் தோன்றல்களுக்கு வீர மூட்டி மறைந்துவிட்டார். ஸாமல் இரண்டுதடவை பட்டணைக் காப்பாற்றினார். அன்று பீமதேவன் உடன் இருந்து அடங்காத புயவலியால்; இன்று அவன் பேரன் மகனுடன் இருந்து தம் வார்த்தைகளின் மந்திர சக்தியால் காப்பாற்றி, கவுரவத்துடன் இறந்தார்!

காதலனும் காதலியும்

பிரஸன்னாவுக்கு அரசியலைவிட உள்ளத்தைக் கவரும் மற்றப் பல விஷயங்கள் இருந்தன. பெரிய கூட்டத்திலும் பார்ஹட்டின் பேச்சு மழையிலும்கூட அவள் திரிபுவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். பார்ஹட் விழுந்ததும் அவன் பக்கத்திலுள்ள மாத்ராவிடம் போய்ச் சேர்ந்தாள்.

"மாத்ரா அக்கா! வைத்தியரைக் கூப்பிடேன்!"

'ஏன், வயிற்றில் வேதனையோ? அல்லது வேறு யாருடைய வேதனைக்காவது மருந்து வேண்டுமோ!'

'ஏது இவ்வளவு வாய் பெருத்துவிட்டதா? இருக்கட்டும். கஜானனத்தாத்தா எங்கே போய்விட்டார்? அதோ பாரு, பார்ஹட்டைத் தூக்கிப் போகிறார்களே, அவர்களுடன் பாரேன்...?"

'ஏன், என்ன வேலை?'

"உன் தலை! போய்ப் பாரு அக்கா என்றால்......தலை வலித்து போய்விட்டது, போ."

"சரிதான். சொல்லித்தான்விடேன்...... என்ன வேலை?"

உபயோகத்திற்குப் பிரசித்தி பெற்றவை

அழகாக எழுதுவதற்கு

PACHOLI HAIR TONIC

பச்சோலி ஹேர் ஆயில்

கூந்தலின் அழகிய வளர்ச்சிக்கு

சிறந்த சுகாதார வசதிகளுக்கு

பிரகாசமான நீடித்த வெளிச்சத்திற்கு

Manufacturers :

RAMAN INKS Co., Regal Agencies,

186, Royapettah High Road, :: MADRAS.

"சரி நானே போகிறேன். நாம் சாகாமலா சுவர்க்கம் பார்க்கமுடியும்?" பின் அறை வழியாகப் பிரஸன்னு புயல் வேகத்தில் சென்று லீலாதரரை மடக்கினுள்; "சாகிற வன் செத்துவிட்டால் இருக்கிறவர் ஞாபகமா வது இருக்கிறதா?"

"ஏன்? என்ன நேர்ந்துவிட்டது?"

"என்னை ஒன்றும் புலி கடித்துவிடவில்லை. நேற்றுத்தானே திரிபுவன்..."

லீலாதரர் நாக்கைக் கடித்துக்கொண்டு கைகளைச் சொடுக்கினுர்............... "ஓ. ஆமாம் என்னையும் இந்தக் கிழத்தனம் பிடித்துக்கொண்டதா, என்ன? ஆனுல் அந்தச் சோலங்கி வீரனுக்குத் தான் சண்டை என்ருல் போதுமே.! சரி. நான் போய் அழைத்து வருகிறேன். நீ படுக்கை தயார் செய்.'' பிரஸன்னு முன்னே படுக்க வைத்திருந்த இடத்திற்குச் சென்று படுக்கை யைத் தட்டிப் போட்டாள். அங்கே மாத்ரா வும், வந்து சேர்ந்தான்.

"திருட்டு வெளியாயிற்ரு என்றேன்!"

"என்ன திருட்டு?"

"திருட்டா, சொல்கிறேன். எங்கே முகத் தைக் காண்பி; பார்த்துச் சொல்கிறேன். அதோ, ஏன் இந்தச் சிவப்பு? இவைகள் ஏன் பயப்படுகின்றன! பிரஸன்ன குமாரி என்ருவது தன் படுக்கை தட்டியதுண்டா?"

"சும்மா இரு. இல்லையோ, தவடை தவ டை என்று தீர்த்து விடுவேன். அதோ பார் உங்கப்பா வருகிற சப்தம் கேட்கிறது" இருவரும் ஒரு கதவு வழியாக வெளியேறி னர். இங்கிதம் தெரிந்த மாத்ரா தயங்கி நடக்கும் பிரஸன்னுவை விட்டு விட்டு வேக மாக முன்னேறி விட்டாள்.

வைத்யர் சொன்னுர். "திரிபுவன் பிடிவா தம் வேண்டாம். இரண்டு மணி நேரமா வது நன்ருய்த் தூங்கு...இனி உனக்கு வேலை அதிகம் இருக்கும்."

"ஆனுல்......"களைத்த திரிபுவன் ஏதோ ஆரம்பித்தான்.

"ஆனுல் கீனுல் அதெல்லாம் ஒன்றும் கிடையாது. யார்கண்டது. நாளைக்கே சண் டை வரலாம்........."

"சரி. நான் தூங்குகிறேன். தூக்கம் வரவேண்டுமே!"

"தூக்கம் வராது போனுல் 'போலா நாத், போலாநாத்,' என்று ஜபம் செய். இந்த மருந்தைக் குடி. இரு, அந்தக் கட்டைச் சரி பண்ணுகிறேன். புண்ணும் நன்ருய் ஆறி வந்திருக்கிறது. நல்ல மருந்து தான். சரி நான் போகிறேன். என்னைக் கேட்காமல் எங்கேயும் அசையக் கூடாது."

பிரஸன்னு கேட்டுக்கொண்டே இருந் தாள்; திரிபுவன் தூங்கி விட்டான். லீலா தரர் போய்விட்டார்......! பிரஸன்னு சற்று நேரம் பொறுத்தாள். பிறகு அறைக்குள் திருட்டு விழி செலுத்தினுள். திரிபுவன் கவலை யற்றுக் கட்டிலில் சயனித்திருந்தான்; தூக் கம் வரவில்லை. அவன் விட்ட ஓர் பெரு மூச்சு கதியற்ற நிலையில் கிடப்பதை வெறுத்து வெளியேறிற்று.

பிரஸன்னு வந்து தலைமாட்டில் நின்று கொண்டாள். திரிபுவன் நிழல் பட்டதும் தலை தூக்கிப் பார்த்தான். பிரஸன்னுவின் வருகை அவன் முகத்தில் ஒரு இன்ப அலை யை எழுப்பிற்று. உடனேயே அது அடங்கி, கோபத்தின் ஒரு கோடி காணப்பட்டது. அவன் நீருண்ட இதயம் தன் தோழியுடன் சேரத் துடித்தது. ஆனுல் அவர் பிரிந்த நிலையின் கோப ஞாபகம் அவனை வருத் திற்று.

பிரஸன்னு தயங்கித் தயங்கிக் கேட்டாள்: "திரிபுவன் உன்.........உங்கள் உடல் நிலை எப்படி இருக்கிறது?"

திரிபுவன் மனம் கலங்கிற்று. அவன் பிர ஸன்னுவைக் கடைசி முறை எங்கே பார்த் தான்? ஸ்வப்னத்திலா? அரை மயக்க நிலை யிலா? நேற்றுச் சண்டை போடும் போதா? எங்கே? ஆம் அவளுடன் மற்றும் ஒரு ஸ்திரீ! ஆகா! அவள் அன்பின் செம்மை ஞாபகம் வருகிறது! அவள் யார்? அவளை எண்ணி, திரிபுவன் உள்ளம் நனைந்தது. இருகை களாலும் தன் தலையைப் பிடித்தான், அந்த உருவற்ற எண்ணங்களின் முழு விவ ரத்தையும் தன் மூளையிடம் கெஞ்சுபவன் போல.

(தொடரும்.)

அங்ஙனம் விட்டது

விஜயஸ்ரீ

தம் வேலை தீர்ந்தவுடன், பாத்திரங்களை எல்லாம் ஒழுங்காக எடுத்துவைத்துவிட்டு, சமையற் கட்டின் வாசலினருகே ''உஸ், அப்பாடா!'' என்று களைப்புடன் உட்கார்ந்து கொண்டார் அனந்தராமய்யர். அங்கே சமையல் வேலையை அவர் ஒத்துக்கொண்டு சுமார் பதினைந்து நாட்களே ஆகியிருந்தன.

வீட்டு எஜமானர் கூடத்து ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தார். சற்றுத் தூரத்தில் அவருடைய பேரக் குழந்தை விளையாடிக் கொண்டிருந்தது. அதன் சேஷ்டைகளைப் பார்த்துப் பூரித்துப் போய், புன்முறுவல் பூத்தார் வீட்டு எஜமானர். அக் காட்சியைக் கண்டவுடன் நீண்ட பெரு மூச்சொன்று வெளி வந்தது அனந்தராமய்யரிடமிருந்து.

தாமும் தம் பேரனுடன் விளையாடிக் கொண்டு உல்லாஸமாய் இருக்க வேண்டிய காலத்தில். தெய்வம் தம்மை இந் நிலைக்கு ஆளாக்கி விட்டதே என்று மனதுக்குள் அங்கலாய்த்துக் கொண்டார். இருப்பினும், பணத்தையே பிரதானமாகக் கருதும் ஆசாமிகளிடமிருந்தும், உத்தியோகச் செருக்குத் தலைக்கேறிய பேர் வழிகளிடமிருந்தும் தப்பித்துக் கொள்ளத் தாம் செய்த தியாகமாக அது இருக்கட்டும் என்று மனதைத் தேற்றிக் கொண்டார்.

பழைய நினைவுகள் ஒன்றன் பின் ஒன்றாக அவர் மனக் கண் முன்னர் தோன்றின.

* * *

அனந்தராமய்யர் மிகுந்த ஏழ்மை ஸ்திதியில் வாழ்நாள் முழுவதையுமே ஓட்டியவர். ஏழ்மை காரணமாகக் கண்ணியத்தையும், நல்லொழுக்கத்தையும் கடவுள் பக்தியையும் அவர் விட்டுவிடவில்லை. தம் கடமைகளையும் அவர் புறக்கணிக்கவில்லை. தாம், கஷ்டப்பட்ட போதிலும் தம் மனைவியையும், பிள்ளை கோபாலனையும் கூடிய வரை நன்றாகவே காப்பாற்றி வந்தார்.

அவருக்கு ஒரே ஒரு ஆசைதான் இருந்தது. கோபாலன் 'குறு குறு' வென்று படிப்பில் முன்னேறுவதைக் கண்டவுடன் அவனை ஐ. ஸி. எஸ். பரீட்சைக்குப் படிக்கவைக்க வேண்டும் என்ற அவாவினால் உந்தப்பட்டு, அல்லும் பகலும் தேகத்தால் செருப்பாய் உழைத்து, குளிர்காலத்துக்காக முன் கூட்டியே தானியம் சேர்க்கும் எறும்பைப்போல் சிறிது சிறிதாகப் பணம் சேர்க்க ஆரம்பித்தார்.

கோபாலன் காலேஜில் சேர்ந்தான். அவனுடைய செலவுகளை ஒன்றுகூடக் குறைக்காமல் அனந்தராமய்யர் ஒழுங்காகச் செய்தார். இந்த சமயத்தில் தான் அவருடைய மனைவிக்குத் தீராத வியாதியொன்று வந்து, அவள் படுத்த படுக்கையாகிவிட்டாள். ஒருபுறம் அவளுக்காக டாக்டருக்குப் பணச் செலவு; மற்றொருபுறம் கோபாலனின் படிப்புக்காகக் காலேஜ் பீஸ், புஸ்தகம் முதலியவை ரூபத்தில் செலவு. நடுவில் அனந்தராமய்யர்சேர்த் வைத்திருந்த சிறிய தொகை கரைந்து விட்டது!

பீ. ஏ. (ஆனர்ஸ்) முடிவுகள் வெளிவந்தன. கோபாலன் ராஜதானியிலேயே முதன்மையாகத் தேறியிருந்தான். வாழ்வில் இன்பமும் துன்பமும் சேர்ந்தே வருகின்றன. இச் சந்தோஷச் செய்தியுடன் கூடவே, துக்ககரமான ஒரு சம்பவமும் நிகழ்ந்துவிட்டது. படுக்கையாய்க் கிடந்த அனந்தராமய்யரின் மனைவி மரணமடைந்தாள். சாகும்போது அவரிடம், ''கோபாலனை ஐ. ஸி. எஸ். ஸுக்குக் கட்டாயம் அனுப்புங்கள். அப்பொழுது தான் என் ஆத்மா சாந்தியடையும்'' என்று கேட்டுக் கொண்டாள். ஏற்கனவே அவ்விஷயத்தைப்பற்றி உறுதியான தீர்மானத்துக்கு வந்திருந்த அனந்தராமய்யர் தம் மனைவியின் கடைசி வேண்டுகோளுக்குப் பிறகு, அதைச் செய்துவிட்டுத் தான் மறு காரியம் என்று நிச்சயித்துக் கொண்டார்.

ஐ. ஸி. எஸ். பரீட்சைக்கும் கோபாலன் உட்கார்ந்தான். பரீட்சைக்கு வேண்டிய செல

வுக்குப் பணம் இருக்கவில்லை. தம் மனைவியின் நகைகளை விற்றுப் பணமாக்கிக்கொண்டார் அனந்தராமய்யர். பாக்கிப் பணத்துக்கு, தம் ஆத்ம சிநேகிதரான ஒருவரிடம் கடன் வாங்கிக்கொண்டார். அவருடைய கனவு நினைவாகும் நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது!

கோபாலன்., ஐ. ஸி. எஸ். திருச்சிக்கு ஸப்-கலெக்டராக நியமிக்கப்பட்டான். அனந்தராமய்யர் அடைந்த சந்தோஷத்துக்கு ஒரு அளவேயில்லை.

* * *

நாட்கள் மாதங்களாயின. மாதங்கள் வருஷங்கள் ஆயின. கோபாலன் உத்தியோகத்தில் படிப்படியாக உயர்ந்து கொண்டே போனான். ஆனால் அவன் குணத்தில் மட்டும் பல மாறுதல்கள் வந்தன. அடக்கமும் கண்ணியமும் மறைந்து அதற்குப் பதில் பணத்திமிரும், உத்தியோகச் செருக்கும் விஷமென ஏறிக்கொண்டிருந்தன. அத்துடன் கூட 'தேவி'யின் தலையணை மந்திரமும், போதனையும் அநந்தராமய்யரின் நிலையைப் பரிதாபமாக்கின. அரை வயிற்றுக்குச் சோறு, அதுவும் கனிவுடன் அளிக்கப்படவில்லை.

ஒரு நாள் கோபாலனும் அவன் மனைவியும் பேசுவது அனந்தராமய்யரின் செவிகளில் அகஸ்மாத்தாக விழுந்தது :

"அடி கமலம்! நான் முன்னுக்கு வருவதற்கு அவர் தாண்டி காரணம். அவர் செய்த புண்ணியம்தான் நம் வீட்டில் இன்று விளக்கெரிகிறது."

"நன்றாய் இருக்கிறது, இவ்வளவு தன்னம்பிக்கை கூடவா உங்களுக்கில்லை? நீங்கள் கஷ்டப்பட்டுப் படித்தீர்கள், முன்னுக்கு வந்தீர்கள். அவர் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நீங்கள் இந்நிலைக்கு வந்து தானே இருக்கப் போகிறீர்கள்?"

"உம்......ஆமாம், இப்பொழுது என்ன செய்யச் சொல்கிறாய்?"

"வேறு ஒன்றும் வேண்டாம். அவர் நாள் முழுவதும் சும்மா தானே இருக்கிறார். இரண்டு வேளை சமைத்துப் போட்டால் என்னவாம்?"

"என்ன சமைத்துப் போடச் சொல்லவா?"

"ஏன், அதில் என்ன குறைந்து போய்விடுமாம்? அவர் என்ன தொழில் செய்து உங்களைப் படிக்கவைத்தார் என்பதை மறந்துவிட்டீர்களா?"

"சரி, பார்க்கலாம்."



அனந்தராமய்யருக்குத் திடுக்கிட்டது. விஷயம் இவ்வளவுக்கு முற்றிவிட்டதா, வீட்டை விட்டு நாம் வெளியேறும் காலம் வந்துவிட்டது போலிருக்கிறது. வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது என்பார்களே, அது தம் விஷயத்தில் எவ்வளவு உண்மை—என்றெல்லாம் பலவாறாகச் சிந்தனையில் ஆழ்ந்தார் அவர். ஆனால் கோபாலன் வீட்டில் இருந்த காந்த சக்தியொன்று தம்மை இழுப்பதை மறுகணமே உணர்ந்தார்.

அவருடைய நான்கு வயதுப் பேரன் சேகர் "தாத்தா! நீ ஏன் இன்னிக்கு ஏதோ மாதிரியிருக்கே?" என்று கொஞ்சிக்கொண்டே அவருடைய காலை கட்டிக்கொண்டான். மறு கணமே அனந்தராமய்யரின் மனச் சோர்வு மறைந்தது. குழந்தையை வாரியணைத்து உச்சி மோந்தார்.

"இதோ இந்தப் பிணைப்பால்தான் இக்குடும்பத்தில் ஒருவனாக நான் இதுவரை இருக்கிறேன். இனிமேலும் இருக்கப்போகிறேன். சேகருடன் இருந்து என் அந்திய நாட்களைக் கழித்துவிடவேண்டும். அவனைப் பிரிந்து நான் எப்படி இருப்பேன்." என்று தமக்குத்தாமே சொல்லிக்கொண்டார்.

அன்று முதல் அவ்வீட்டில் இரு ஐ. ஸி. எஸ்-கள் என்பது ஆயிற்று. ஆம், கலெக்டர் கோபாலனும், அவனுடைய பரிசாரகத் தந்தை அனந்தராமய்யரும் தான்!

* * *

யாரோ பெரிய ஆபிஸர் ஒருவர் கோபாலன் வீட்டுக்கு வருவதை முன்னிட்டு, சமையல் ஒரு ஆடம்பரமான முறையில் தயாராகிக்கொண்டிருந்தது. அனந்தராமய்யர் சமையல் என்றால் கேட்கவா வேண்டும்?

அந்தப் 'படே' ஆசாமியும் குறிப்பிட்ட நேரத்துக்கு வந்து சேர்ந்தார். சிறிது நேரம் கோபாலன் அவருடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தான். பிறகு எல்லோரும் சாப்பாட்டுக்கு உட்கார்ந்தனர். பந்தியின் நடுவில் கோபாலனும் அந்தப் பெரிய 'புள்ளி'யும் அமர்ந்திருந்தனர். அதற்கப்புறம் பெண்டுகள். சேகருக்கு ஒரு சிறு வெள்ளித் தட்டும், கிண்ணியும் வைக்கப்பட்டிருந்தன. அதன் முன்னால்தான் குழந்தை அமர்ந்திருந்தான். அவனுடைய கண்கள் 'துறுதுறு' வென்று யாரையோ தேடிக்கொண்டிருந்தன. அதைக் கவனித்த கோபாலன், "சேகர்! என்ன வேணும் உனக்கு?" என்று கேட்டான்.

"இல்லேப்பா, எங்கே தாத்தா உட்காரக் காணோமே என்று தான் பார்க்கிறேன்." என்றான் சேகர்.

"சரி தாண்டா, உன் வேலையைக் கவனித்துக்கொண்டு நீ சும்மா இரு." என்று தாயார் அதட்டவே, குழந்தை மேல் கொண்டு ஒன்றும் பேசாமல் இருந்துவிட்டான். தாத்தாவிடம் அளவுகடந்த ஆசை அவனுக்கு. உண்மையில் அவர் ஒருவர் தான் அவனிடம் அன்பாக இருந்தார்.

அனந்தராமய்யர் பரிமாற ஆரம்பித்தார். எல்லோருக்கும் அவர் அமுது படைத்த போது, ஏதோ தம் கடமையைச் செய்வது போன்ற உணர்ச்சியுடன் செய்தார். ஆனால் சேகரிடம் வரும் போது, அவருடைய முகம் மாறுபட்டு, வாத்ஸல்யத்தின் சாயை தோன்றியது. பதார்த்தங்களுடன் தம் அன்பையும் குழைத்துப் பரிமாறினார் அவர் தன் பேரக்குழந்தைக்கு மட்டும்.

"தாத்தா! சேமியாப் பாயசம் இன்னும் கொஞ்சம் போடேன்." என்றான், "தக்காளிப் பழமாய்ப்போடு." "என்றான், "தயிர் சாதம் நீயே பிசைந்துவை." என்றான் சேகர், அவற்றையெல்லாம் புன் சிரிப்புடன் செய்தார் அனந்தராமய்யரும்.

சாப்பாடு முடிந்தது. எல்லோரும் வெளி ஹாலுக்கு எழுந்து சென்றார்கள். பெரிய புள்ளி, "இன்று சமையல் வெகு ஜோராய் இருந்தது. ஆமாம்," என்று கூறிவிட்டு, "யார் அவர்? குழந்தை சும்மா, தாத்தா! தாத்தா! என்று அழைத்துக்கொண்டேயிருந்தான். உங்கள் தகப்பனாரோ?" என்று கோபாலனைக் கேட்டார்.

அதற்குக் கோபாலன் சிரித்துக்கொண்டே, "சேச்சே, அவர் என் தகப்பனாரும் இல்லை, ஒன்றும் இல்லை. குழந்தைப் பழக்கத்தால் தாத்தா என்று கூப்பிடுகிறானே தவிர வேறு ஒன்றுமில்லை. அவர் எங்கள் வீட்டுப்பரிசாரகர் தான்." என்று மழுப்பினான் கோபாலன்.

இவ்வார்த்தைகள் தரையைச் சுத்திசெய்து மெழுகிக் கொண்டிருந்த அனந்தராமய்யர் காதில் காய்ச்சின ஈயம்போல் நுழைந்தன. அவரையும் அறியாமல் கையிலிருந்த சொம்பு கீழே விழுந்தது. ருத்ரகோபம் வந்துவிட்டது அவருக்கு. விடுவிடுவென்று நேரே அவர்கள் இருந்த இடத்துக்குச் சென்று, கோபாலன் முன் நின்றார்.

"டேய் கோபாலா! என்னை உன் தகப்பனார் என்று சொல்லிக்கொள்ள வெட்கமாடா? ஆம், நான் பரிசாரகன் தான், ஆனால் கண்ணியமுள்ளவன்; உன்னைப் போல், பேமானி அல்ல! உன்னை முன்னுக்குக் கொண்டு வர நான் பட்ட கஷ்டத்தை மறந்தாய். நீ என்ன செய்வாய், போலீக் கௌரவ

மும், உத்தியோக மோகமும் உன்னை அவ்வாறு பேச வைக்கின்றன. ஏதோ இவ்வளவு நாட்கள் சேகரிடம் உள்ள அஞ்ஞானத்தால் உன் வீட்டில் இருந்தேன். இனிமேல் ஒரு கணம் நான் இங்கே இருக்க முடியாது. பட்டினி கிடந்து சாவேனே ஒழிய, உன் வீட்டில் ஒரு டம்ளர் தீர்த்தம் கூட இனி சாப்பிடமாட்டேன்." என்று ஆவேசத்துடன் மொழிந்துவிட்டு, பரபர வென்று வெளியேறினர் அனந்தராமய்யர்.

* * *

நிரைப்படம் போல் இந்த இறந்தகால நிகழ்ச்சிகள் அவர் உள்ளத்தில் எழுந்தன. அவர் சேகரைப் பார்த்து, பதினைந்து நாட்களாகிவிட்டன. குழந்தை என்ன செய்கிருனே என்னவோ? மனம் அங்கேயே வட்டமிட்டது.

அன்று காலையிலிருந்தே அவர் மனம் ஒரு நிலையில் இருக்கவில்லை. போதாததற்கு அபசகுனங்கள் வேறு பல நிகழ்ந்துவிட்டன. உள்ளத்தில் ஒரு குரல், "சேகருக்கு ஆபத்து, உடனே கிளம்பு" என்று கூறிக்கொண்டே இருந்தது. கோபாலன் தம்மை இழிவு படுத்திய பிறகுகூடவா, நாம் அங்கே திரும்பிப்போவது என்ற வைராக்கியம் குறுக்கிட்டது. இருப்பினும் சேகரிடம் கொண்ட பாசம்

தலை தூக்கி, அங்கே போகும்படி தூண்டியது. கடைசியில் யாருக்கும் தெரியாமல் சேகரைப் பார்த்துவிட்டு வந்துவிடுவது என்று தீர்மானம் செய்துகொண்டார். எல்லோரும் சாப்பிட்டானபிறகு, அவரும் ஒரு கவளம் போட்டுக்கொண்டு கோபாலன் வீட்டை நோக்கி நடந்தார்.

* * *

அனந்தராமய்யர் வெளியேறிய மறுநாள் சேகர் தன் தாயாரை நோக்கி, "தாத்தா எங்கேம்மா? எங்கேயாவது ஊருக்குப்போயிருக்காரா?" என்று கேட்டான். அதற்கு அவள், "தாத்தாவின் அழகைப் பார்க்கலே. அந்தக் கிழம் என்ன சொக்குப்பொடி வைத்ததோ தெரியவில்லை, குழந்தை 'தாத்தா, தாத்தா' என்று உயிரையே விடுகிறது." என்று சொன்னாள். தாயாரிடம் சரியான பதில் வராதிருக்கவே குழந்தை கோபாலனுடன் சென்றான்.

"அப்பா! தாத்தா எங்கேப்பா ?"

"தாத்தா எங்கேயும் போய்விடவில்லை. வயிறு காய்ந்தால் பூமணத்தோடே திரும்பிவிட மாட்டாரா?" என்று கோபாலன் ஹாஸ்யமாக மொழிந்தான். சேகர் இந்தப் பதிலிலிருந்து ஒன்று தெரிந்துகொண்டான். ஒன்றிரண்டு நாட்களில் தாத்தா திரும்பி விடுவார் என்று நம்பினான்.

அந்த ஒன்றிரண்டு நாட்களுக்குப் பிறகும் தாத்தா வராதிருக்கவே, சேகருடைய குழந்தையுள்ளம் கலவரமடைந்தது. வீட்டில் அவனிடம் உண்மையான அன்பு உள்ளவர் யாரும் கிடையாது. கோபாலன் காலை ஆபீசுக்குச் செல்பவன், கிளப்புக் கெல்லாம் போய் விட்டு இரவு தான் வீட்டுக்கு வருவான்...... அதற்குள் சேகர் தூங்கி விடுவான். அவனுடைய அம்மாவோ, தன்னை அலங்கரித்துக் கொள்வதும், தன் சிநேகிதிகளிடம் அரட்டை அடிப்பதும், லேடிஸ் கிளப்பிற்குப் போவதுமாகவே இருந்தாளே ஒழிய, தன் குழந்தையிடம் ஓரிரண்டு அன்பான வார்த்தைகள் கூடப் பேசுவதில்லை. சேகரைப் பார்த்துக் கொள்வதற்குத் தான் ஒரு தனி வேலைக்காரன் நியமிக்கப் பட்டிருந்தானே? ஆனால் அவன் கடனுக்குத் தானே உழைத்தான், அவனுக்கு எப்படி சேகரிடம் உண்மையான அன்பு வந்து விடும்? இந்நிலையில் அனந்தராமய்யரும் இல்லாதிருக்கவே சேகர் ஏங்க ஆரம்பித்தான். தாத்தா திரும்பியே வர மாட்டாரோ என்று கூட அவனுக்குச் சந்தேகம் தட்ட ஆரம்பித்து விட்டது. தாயாரைக் கேட்டாலோ சள்ளென்று விழுகிறாள். தகப்பனாரைக் கேட்டாலோ, "கிழம் தன்னால் வந்து சேருகிறது" என்கிறார். தூங்கும்போது கூடத் தாத்தாவைப் பற்றியே கனவு காண ஆரம்பித்தான் சேகர். ஆவலுடன் விழித்து எழுந்திருந்தால் தாத்தாவைக் காணாமல் பதறுவான்!

அனந்தராமய்யர் சென்று கிட்டத் தட்ட இரண்டு வாரங்கள் ஆயின. அதற்குள் சேகர் துரும்பாய் இளைத்து விட்டான். மாலை வேளைகளில் ஜ்வரம் வேறு வர ஆரம்பித்தது. கோபாலன் பயந்துபோய், பெரிய டாக்டர் ஒருவரைக் கூப்பிட்டுக் காண்பித்தான். அவர் நோயாளியைப் பரிசோதனை செய்துவிட்டு உதட்டைப் பிதுக்கினார். பிறகு ஏதோ ஒரு மருந்தை எழுதிக்கொடுத்தார். மருந்துக்கெல்லாம் குணப்பட்டு ஜ்வரம் இறங்கவில்லை. நாளுக்கு நாள் சேகரின் நிலைமை மோசமாகிக்கொண்டே வந்தது.

கோபாலனுக்கு அதன் காரணம் தெரியும், தன் மனைவியின் சொல்லைக்கேட்டு, சொந்த தகப்பனாரை துன்புறுத்தியதற்குத் தண்டனையாகவே சேகர் படுத்த படுக்கையாய் கிடக்கிறான் என்று அவன் மூளையில் ஞானோதயம் ஆயிற்று.

* * *

அன்று இரவு சேகருக்கு ஜ்வரம் மிக அதிகமாகிவிட்டது. டாக்டர் அவனருகிலேயே இருந்தார். கோபாலனும் அவனுடைய மனைவியும் கையைப் பிசைந்துகொண்டு நின்றார்கள். இருவர் கண்களிலும் கண்ணீர் ததும்பிக்கொண்டிருந்தது. அவர்கள் இருந்த திசையில் சுட்டிக் காட்டி, குழந்தை பரக்கப் பரக்க, பிறகு, "தாத்தா! எங்கே போயிட்டே. இந்த ரெண்டு பூதமும் என்னைப் பயமுறுத்துகிறதே. சீக்கிரம் வாயேன்." என்று ஓவென்று அழ ஆரம்பித்தான்.

டாக்டர் தலையை அசைத்து விட்டு, "ஊஹூம், இன்னும் ஐந்து நிமிஷத்திற்கு மேல் தாளாது." என்று கூறிவிட்டு, அறையிலிருந்து வெளியே போய்விட்டார். சேகர் ஜன்னி வேகத்தில் புரண்டு புரண்டு படுப்பதும், மிரள மிரள விழிப்பதும் "தாத்தா! சீக்கிரம் வாயேன் ப்யமாயிருக்கு." என்று கதறுவதுமாய் இருந்தான்.

"சேகர், எங்கண்ணு, இதோ வந்துட்டேண்டா" என்று கதறிக்கொண்டே பரிசாரக உடலில் அனந்தராமய்யர் உள்ளே நுழைந்தார். அவரைப் பார்த்தவுடன் குழந்தை, "தாத்தா! வந்து விட்டாயா, இனிமே எனக்குப் பயமில்லை." என்று கூறிவிட்டு, களைப்புடன் கண்ணை மூடிக்கொண்

டான். திருப்தியின் சாயலான புன்சிரிப்பு ஒன்று முகத்தில் பரவியது. வாத்ஸல்யத்துடன் சேகரின் கரத்தைப்பற்றிய அனந்தராமய்யரின் முகம் வெளுத்தது. குழந்தையின் கரம் சில்லிட்டுருந்தது!

"ஐயோ!" என்று பெரிதாக ஓலமிட்டுக் கோபாலனும் அவன் மனைவியும் அழுதார்தார்கள். ஆனால் அனந்தராமய்யர் அழவேயில்லை. சேகரின் முகத்தையே வெகு நேரம் நோக்கிக்கொண்டிருந்துவிட்டு, அறையை விட்டு வெளியேறினர். அவருடைய வாய், "கோபாலா! உனக்கும் எனக்குமிடை இருந்த ஒரே ஒரு பிணைப்பு அகன்றது. இனிமேல் நீ யாரோ, நான் யாரோ!" என்று முணுமுணுத்தது!

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர்களை

உபயோகப்படுத்தி உணவைப் பெருக்குங்கள் !!!

Use Fordson MAJOR TRACTORS

நேரப் போக்கைச் சமாளிக்க உழைத்து வரும் இந்நெருக்கடியான வருடத்தில், வேலையைத் துரிதப்படுத்தவும் போதிய வேலையாட்களில்லாமையைச் சமாளிக்கவும் **போர்ட்ஸன் மேஜர் டிராக்டர்** விவசாயிகளுக்கு மிகவும் உதவியுள்ளது. சுலபமாகக் கையாளக்கூடிய இந்த **மேஜர்** சிக்கன முறையில் பெரிய அல்லது சிறிய நிலப்பரப்பை உழுவதற்கு உதவுவதோடு போரடிக்கும் கருவியை இழுக்கவும் போதிய சக்தி பெற்றிருக்கிறது. ஹைடிராலிக் முதலிய பிரத்தியேக சாதனங்களோடு கூடிய இந்த மேஜர் உழவுத்தொழிலுக்குத் தேவையாயுள்ள ஒவ்வொரு வேலைக்கும் விசையளிக்க வல்லது.

ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் டீலர்ஸ்

202 - 203 மவுண்ட் ரோடு சென்னை—2

கிளைகள்: **பெங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி,**

ஹைதராபாத் (டெக்கான்)

டெப்போ:— **கோயம்புத்தூர்.**

தற்கால நிலையும் வருங்கால நிலையும்

கலாதாஸன்

ஒரு நாட்டின் கலை அந்த நாட்டின் ஜீவனையும் அதன் நோக்கங்களையும் வெளிப்படுத்தும் திறம் வாய்ந்தது. அதனால் அந்த நாட்டின் முன்னேற்றத்திற்கும் நோக்கங்களுடைய விரிவிற்கும் தக்கவாறு கலைகளும் விகாசமடைய வேண்டியது அவசியம். ஆனால் அந்தக் கலைகளுடைய ஆதாரமாக இருக்கும் தத்துவங்கள் சாசுவதமாய் நிற்கவேண்டும், அவைகளில் மாற்றமேற்படக்கூடாது. அப்படி மாற்ற மேற்பட்டால் பெருத்த தீங்குகள் விளையலாமென்பதைப்பற்றி முன்னமேயே நான் கூறியிருக்கிறேன். ஆனால் கலை ஜீவனுடன் என்றும் விளங்க வேண்டுமானால், அந்த நாட்டின் லக்ஷியங்களுடைய விரிவுக்கும் புதிதாய் அந்த நாட்டில் தோன்றும் உணர்ச்சிகளுக்கும் தக்கவாறு தானும் விகாசமடையவேண்டும். இல்லாமற் போனால் அந்தக்கலை ஜீவனற்று, நாட்டின்நோக்கங்களுக்குப்பொருத்தமற்றுப் போகும். எந்தக் கலையினுடைய சரித்திரத்திலும் இந்த உண்மையைக் காணலாம். ஒரு கலை பழக்கத்தில் நாளுக்கு நாள் விருத்தியடைந்துகொண்டு வரும்போது, ஒரு கட்டத்தில் அப்படியே முன்னேற்றமில்லாமல் நின்று விடுவதுண்டு. எக் கலைக்கும் லக்ஷியம் லக்ஷணம் என்று இரண்டு அம்சங்களுண்டு. இரண்டும் வேண்டியதுதான். ஆனால் லக்ஷணம் என்கிற சாஸ்திரம் பிரதானஸ்தானத்தைப் பெற்று லக்ஷியத்தை நிராகரிக்கத் தொடங்கும்போது அக்கலையின் ஜீவகளை குலைகிறது. சட்ட திட்டங்களும் நியமங்களும் பலமாகத் தோன்றுகின்றன. மனோதர்மத்துக்கும் கற்பனைக்கும் இடம் குறைகிறது. கலை நாட்டின் ஜீவலக்ஷியங்களிலிருந்து விலகி, ஒருவித உயிரற்ற பதுமை போலுள்ள நிலையை அடைகிறது. மேலும் ஜன சமூகத்திலேற்படும் சில புரட்சிகளால்கூட இப்படிப்பட்ட நிலையேற்படலாம்; கலையின் உயிருக்கே அபாயமான நிலையது. முற்காலங்களில் இசை நூல்களியற்றிய பெரியார்கள் இப்படிப்பட்ட நிலை வரும்போது அதைத் தடுத்துக் கலையை நிலைநிறுத்துவதற்காகவே தாங்கள் நூல்கள் எழுதியிருக்கிறதாகக் கூறுகிறார்கள்.

சென்ற சுமார் 50 வருஷங்களில் நமது சங்கீத உலகில் அநேக கிளர்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. சென்ற நூற்றாண்டில் ஸங்கீதமும் இதர கலைகளும் பல ராஜாக்களாலும் ஜமீன்தார்களாலும் பெரிய தனவந்தர்களாலும் போஷிக்கப்பட்டு வந்தன; ஸங்கீத வித்துவானுக்குத் தன்னுடைய பிழைப்பைபற்றி யாதொரு கவலையும் இல்லாமலிருந்தது, பொதுக் கச்சேரி பண்ணி, டிக்கட்டு வைத்துப் பணம் வசூல் செய்து பிழைப்பு நடத்த வேண்டிய அவசியமில்லை. அந்தக்காலம் போய்விட்டது. தற்காலம் சங்கீதம் பொதுமக்களுடைய சொத்தாகிவிட்டது; சங்கீதசபைகள் எங்கும்தோன்றியிருக்கின்றன; எல்லாரும் தெரிந்தோ தெரியாமலோ சங்கீதம் கேட்கவேண்டும் அனுபவிக்க வேண்டுமென்று ஆவலுடனிருக்கிறார்கள். கலையைக் காக்கும் பொறுப்பு ராஜாக்கள் பிரபுக்களிடமிருந்து பொதுமக்களிடம் வந்து சேர்ந்துவிட்டது. ஆகவே ஸங்கீத வித்துவான்கள் பொது ஜனங்களுடைய நோக்கத்தையும் ருசியையும் கவனிக்கவேண்டியிருக்கிறது, பிழைப்பு நடக்கவேண்டுமல்லவா? இதன் பலன் என்ன என்பதை நாம் கண் முன் காண்கிறோம். ஒரு பக்கம் கலையின் நோக்கங்களைக் கவனிக்க வேண்டும், மற்

ெருரு பக்கம் சாமான்ய ஜனங்களுடைய கீழ்த்தர ருசிகளைத் திருப்திசெய்ய வேண்டும். இல்லாமல் போனால் தொழில் நடத்துவது கஷ்டம். இதனால் ஸங்கீதக் கலையின் உண்மையான நோக்கங்கள் மாசடையத் தொடங்கியிருக்கின்றன. மேலும் ஸங்கீதத்தைப்பற்றியும், ஸங்கீத வித்துவான்களையும் பத்திரிகைகளில்விமர்சனம் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். சில விமர்சனங்களைக் கவனிக்கும்போது விமர்சகர்களுடைய ஆழமில்லாத ஞானமும் நுனிப்புல் மேயும் தன்மையும் நல்லவிமர்சனத்திற் குரிய பக்குவமில்லாமையும் நன்கு வெளியாகின்றன. இப்படிப்பட்ட கட்டத்தில் நமது ஸங்கீத வித்வான்கள் திண்டாடுகிறார்கள். பாபம்! ஸங்கீத தேவதையும் கஷ்டப்படுகிறாள். இவைகளைச் சமாளித்துக்கொண்டே போக நமது வித்துவான்கள் எவ்வளவு நாஸூக்காகவும் சமத்காரமாகவும் நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது!

ஸங்கீதத்திற்கு ஸம்பிரதாயம் எவ்வளவு முக்கியமானது என்று எடுத்துக் கூற வேண்டியதில்லை. 1945–ஆம் வருஷம் சென்னையில் நடந்த ஸங்கீத மஹாநாட்டைத் திறந்து வைத்தபோது ஸ்ரீமான் அழகப்ப செட்டியார் ஸம்பிரதாய ஸங்கீதத்தின் மேன்மையைப் பற்றி எடுத்துக் கூறினது கவனிக்கத்தக்கது. தற்காலத்தில் ஸம்பிரதாயத்திற்குத் தலைவலி யெடுக்கப் பல காரணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பொதுவாக, ஸினிமா ஸங்கீதம் இதற்கு முதல் காரணம். கேட்க ஜிலு ஜிலுப்பாயிருக்கும் துக்கடா மெட்டுகளைக் கேட்டுப் பழக்கப்பட்ட காதுகளுக்கு நல்ல உயர்தர ஸங்கீதத்தைக் கேட்டனுபவிப்பது சிரமமாகிவிடுகிறது. அதற்கு வேண்டிய பொறுமை கிடையாது. உடம்பிலொட்டாமல் ஒரு சிரமுமில்லாமல் நுனிப்புல்மேயும் வண்ணம் பாட்டுக் கேட்டுப் பழகிப்போனால் நல்ல ஸங்கீதத்தை எப்படி ரஸிக்கமுடியும்? அதற்குக் கஷ்ட காலம்தான். நல்ல ஸங்கீதத்தை உணர்ச்சியுடன் தெரிந்தனுபவிக்கத்தக்க சக்தியும் ரஸிகத்துவமும் ஒவ்வொரு ஜீவனுக்கும் வேண்டியது அவசியம். இதற்குக் கச்சேரி பண்ணும் திறம் வேண்டுமென்பதில்லை. ஸாதாரண புத்தியும் வித்தையுமுள்ள எவராலும் இந்தப் பக்குவத்தை யடையமுடியும். இந்த விஷயத்தில் ஸங்கீத வித்துவான்களுக்கும் ஸங்கீத ஸபைகளுக்கும் பெரிய பொறுப்புண்டு. பண வசூல மட்டும் கவனிக்கும் ஸபைகள் ஸங்கீத தேவதைக்கு அபசாரமே செய்கின்றன. அவைகள் ஸங்கீத ஸபைகளல்ல, பணம் சேர்க்கும் சங்கங்களேயாம்.

தற்காலத்தில் நமது ஸங்கீதத்தில் தோன்றியிருக்கும் புதிய நோக்கங்களைச் சற்றுக் கவனிப்போம். சாதாரணமாக நமது தென்னிந்திய ஸங்கீத வித்துவான்கள் சாரீரப் பயிற்சியைக் கவனிப்பதில்லை என்று கூறுவதுண்டு. அது ஒரு விதத்தில் உண்மைதான். சுமார் 40 வருஷங்களுக்குமுன்வரை நல்ல சாரீரமில்லாதவர்கள் ஸங்கீதத் தொழிலுக்கு வருவது அபூர்வம். நல்ல கணிப்பான ச்ருதியில் தான் பாடுவார்கள். இப்போதோ நல்ல இனிமையான சாரீரமுள்ள சிறுவர்களும் சிறுமிகளும் பில்முக்கோ (film) நாடகத்திற்கோ ஆகர்ஷிக்கப்படுகிறார்கள். அத் தொழில்களில் நல்ல சாஸ்திரீயமான ஸம்பிரதாய ஸங்கீதம் கட்டாயம் வேண்டுமென்பதில்லை. ஆனால் பணம் கிடைக்கிறது. இதனால் என்ன ஏற்படுகிறதென்றால், மேடைக் கச்சேரி பண்ணும் நல்ல வித்வான்கள் சுமாராக இருக்கும் சாரீரங்களைக் கஷ்டப்பட்டு, சாதகம் பண்ணித் தங்களுக்கிசையும்படி செய்யவேண்டி வருகிறது. சாரீர வசதியில்லாத குறையைத்தங்கள் ஞானத்தினாலும், ஸாதக பலத்தினாலும் தீர்க்கின்றார்கள். தற்காலத்தில் முன்னணியில் விளங்கும் சில வித்துவான்களுக்கு அவ்வளவு சாரீர வசதியிருக்கிறதென்று சொல்ல முடியாது. ஆனால் அவர்கள் தங்கள் உழைப்பினால் அக்குறையை நீக்கிப் பிரமுகர்களாக விளங்குகிறார்கள். இந்த நிலை சில சமயங்களில் ஒரு தவறான அபிப்பிராயத்துக்கு இடங் கொடுப்பது கூட உண்டு, நல்ல உயர்தர ஸங்கீதத்திற்கும் சாரீர வசதிக்கும் அதிக சம்பந்தமில்லைபோலும் என்று நினைப்பதுண்டு. சிலர் இன்னும் ஒருபடி கூடப்போகிறார்கள், நல்ல சாரீர ஸம்பத்து இருப்பது ஞான பாவத்திற்கு ஒரு குறையாயிருக்கலாமென்றுகூட எண்ணுவதுண்டு. இப்படி நினைப்பது தவறு என்று எடுத்துக்

கூற வேண்டிய அவசியமில்லை. சாரீர வசதி மிகவும் முக்கியமான அம்சம் தான்.

ஸங்கீதக் கச்சேரிகளில் பக்க வாத்யங்களுக்குள்ள ஸ்தானம் கவனிக்கவேண்டியிருக்கிறது. நான் இந்தத் தொடர்ச்சியில் முன்னமேயே சொல்லியிருப்பது போல் நமது ஸங்கீதம் கூட்டிசைக்கு (Orchestra) ஏற்றதல்ல. பக்கவாத்யங்கள் பக்க வாத்யங்களாகத்தானிருக்க வேண்டும், முக்கியமான பாட்டைப் பின்பற்றியே நிற்கவேண்டும். பஜனை, நடனம் முதலிய சில வகைகளைத் தவிர மற்றுள்ள பாட்டுக் கச்சேரிகளுக்கு அதிகமான பக்க மேளங்கள் அவசியமானதோ என்ற கேள்வி பொருத்தமான ஒரு கேள்வி. தந்தி வாத்ய மொன்றும் தாள வாத்யமொன்றும் இருந்தால் போதாதோ? பலவித தாள வாத்யங்களைச் சேர்ப்பதால் உண்மையான ஸங்கீதத்திற்கு அவ்வளவு உதவி உண்டாகிறது என்று சொல்ல முடியாது. அப்படி சேர்ப்பதாயிருந்தால் ஜாக்கிரதையாக அவைகள் ஒருமையுடன் பிரதான வித்துவானைப் பின்பற்றி அவருக்கு அனுஸரணையாகத் தான் இருக்கவேண்டும். சமீப காலத்தில் பக்க வாத்யங்கள் தங்கள் நிலையைக் கடந்து பாடகருடைய ஸ்தானத்தை ஆக்கிரமித்திருப்பதை நாம் காண்கிறோம். சில சந்தர்ப்பங்களில் சில காரணங்களால் தாள பக்கவாத்யங்களுக்கு ஒரு விதப் பிராதான்யம் கொடுக்கப்படலாம். அதனால் பக்கவாத்யங்கள் பிரதான பாடகன் நிலையை ஒரு நாளும் அடைய முடியாது; அடையவும் கூடாது. மேற்கூறிய ஆக்கிரமத்தினால் ஸங்கீதக் கச்சேரி தாள வாத்யக்கச்சேரியோ, கணக்குப் பரீக்ஷையோ, ஸர்க்கஸ்ஸோ ஆவதோடுகூடச் சில பாடகர்கள் தாள வாத்யங்களின் ஆக்கிரமத்திற்குட்பட்டு, தங்களை அவைகள் அனுசரிக்க வேண்டியது போக, அவைகளைத் தாங்கள் அனுசரிக்க வேண்டி வருகிறது. தாளச் சொற்கட்டுகளுக்கு (ததிகிண தோம், தகதிமி முதலியவை) இசைய ஸ்வரங்களை நிரப்புகிறார்கள். இதற்கு என்ன சமாதானம் சொல்வது! இங்கே வேறொரு விஷயத்தையும் கூறிவிடுகிறேன். கிராமபோன் ரிகார்டுகளில் பின்னணி ஸங்கீதம் எவ்வளவு பொருத்தமானது என்பதும் கவனிக்கத் தக்கது.

கல்பனா ஸ்வரம் பாடுவது நமது ஸங்கீதத்திற்கு ஒரு முக்யமான அம்சமாக ஏற்பட்டிருக்கிறது. அது ஒரு அழகான அம்சம்தான். ஆனாலதற்கு ஓர் அளவுண்டு. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகுமல்லவா? கணக்கு வழக்கில்லாமல் எல்லாவற்றிற்கும் ஸ்வரம் பாடுவது கலையாகாது. சில கச்சேரிகளில் ஒவ்வொரு கிருதிக்கும் ஸ்வரம் பாடுவதைக் கேட்டிருக்கிறேன். அதோடு மட்டுமா, ஒரு பிரபல வித்வான் கச்சேரியின் கடைசியில் ஒரு தமிழ்ப்பதம் பாடி, அதற்கு ஸ்வரம் போட்டார். ஸ்வரம் பாடினது மிக்க உயர்தரமாயிருந்தது, ஆனாலந்தப் பாட்டிற்குப் பொருந்தாமலிருந்தது! ஸ்வரம் பாடுவது என்பது ஒரு தொத்துவியாதிபோல் பரவி வருகிறது. ரேடியோவில் 15, 20, 30 நிமிஷங்கள் பாடும் குழந்தைகள்கூட ஸ்வரம் பாடுகிறேனென்று தாங்கள் சிரமப்பட்டு உருப் போட்ட ஸ்வரக் கோவைகளை வெளிப்படுத்தி, கேட்போர் காதுகளையும் மனதையும் புண்படுத்துகிறார்கள். எதிலும் ஒரு மிதமும், விதரணையும் வேண்டும்!

முப்பது நாற்பது வருஷங்களுக்கு முந்தி 3 கட்டை, 4 கட்டை ச்ருதிக்குக் குறைந்த ச்ருதியில் பாடுவது என்பது அபூர்வம். அது முடியாதவர்கள் வாய்ப்பாட்டைக் கையாளுவதில்லை, வாத்யங்களை எடுத்துக் கொள்வார்கள். இப்போதோ ஆதாரச்ருதியைக் குறைப்பது என்பது ஒரு பழக்கம் (fashion) ஆகிவிட்டது. நல்ல பெரிய ச்ருதியில் சௌகரியமாய்ப் பாடக்கூடியவர்கள்கூட அனாவச்யமாகத் தங்கள் ச்ருதியைக் குறைத்துக் கொள்கிறார்கள். ஒவ்வொருவரும் தங்கள் சாரீரத்திற்குத் தக்கவாறு தங்கள் ச்ருதியை நிர்ணயிக்க வேண்டும். சாதாரணமாக நமது ஸங்கீத உருப்படிகள் மத்ய ஸ்தாயியிலும், மந்தர ஸ்தாயி மத்தியமம் வரையிலும் தாரஸ்தாயி மத்தியமம் வரையிலும் தான் சஞ்சாரமுள்ளவைகளாயிருக்கும். சில சமயங்களில் தாரஸ்தாயி பஞ்சமத்தைத் தொட வேண்டி வரலாம், அவ்வளவு தான். ஆனால் சில பாடகர்கள் அனாவசிய

மாகத் தங்கள் ஆதார ச்ருதியைக் குறைத்துக்கொண்டு மேல் ஸ்தாயி பஞ்ச மத்தில் கார்வை கொடுத்து நின்று, கேட்போர்களுடைய கர கோஷத்தை எதிர் பார்க்கிறுர்கள். அந்தக் கரகோஷம் ஸங்கீதத்திற்கோ, அல்லது சாரீர ஸர்க்கஸ் ஸூக்கோ என்பதுதான் விளங்கவில்லை போலும்! சில இளம் வித்வான்கள் நல்ல சாரீர வசதியுள்ளவர்களாயிருந்தாலும் பெரிய ச்ருதி வைத்துக்கொண்டால் தமக்கு உயர்ந்த ஸ்தானம் கிடைக்காது, ச்ருதியைக் குறைக்கக் குறைக்கத்தான் ஸங்கீத உலகில் கீர்த்தி மேன்மேலும் வளரும் என்றுகூட நினைக்கிறுர்களோ என நினைக்க இடம் ஏற்படுகிறது. இது பரிதாபப்படத்தக்க விபரீதமல்லவா!

வேறு ஒரு விசேஷம் சில சமயங்களில் காணப்படுகிறது என்னவென்றுல் ராகங்களை அவைகளுடைய பாவம் தெரியாமல் பாடுவது, அல்லது வாத்யங்களில் வாசிப்பது. சிலர் இப்படிப் பாடுவது ஒரு வகைத்திறமென்று எண்ணுகிறுர்களோ என்னவோ! ராகம் பாடத் தொடங்கின வுடனே அதன் ஸ்வரூபம், அதன் பாவம் வெளிவரவேண்டும். இல்லாமற்போனுல் அது ஸங்கீதக் கலையல்ல. நமது ஸங்கீதத்தில் பல ராகங்களுக்கு ஒரே மாதிரியான ஸ்வர சஞ்சாரங்களுண்டு. ஆனுல் அந்தச் சஞ்சாரங்களிலேயே அந்தந்த ராகங்களுடைய பாவத்தை வெளிப்படுத்தலாம், வெளிப்படுத்தவும் வேண்டும். ராக ஆலாபனையில் எந்த இடத்திலும் அந்த ராகத்தின் பாவம் தெளிவாயிருக்க வேண்டும். சில சமயங்களில் சில புதிய பிடிப்புகள் வரலாம்; ஆனுலவைகளிலும் பாவம் இருக்க வேண்டும்.

நான் சமீபகாலத்தில் கண்ட வேறொரு வழக்கத்தைப் பற்றியும் கூறுகிறேன். சில நாதஸ்வர வித்வான்கள் ஒரு கச்சேரியில் எல்லாம் பிரதிமத்யம ராகங்களாகவோ அதன் ஜன்ய ராகங்களாகவோ வாசித்துக் கேட்டிருக்கிறேன். கலை என்பது பற்பல ஸாதனங்களைக் கொண்டு உள்ளுணர்ச்சியைத் தூண்டுவதே. ஒரு நிகழ்ச்சிக் குறிப்பு (programme) தயாரிக்கும்போது நன்கு யோசித்துப் பற்பல அம்சங்களைச் சேர்க்கவேண்டும். ஒரு கச்சேரியில் ஒரே மேளத்திலுள்ள ராகங்களோ, ஒரே தாளத்தில் ஒரே எடுப்பிலுள்ள உருப்படிகளோ, கிட்டத் தட்ட ஒரேவித பாவமுள்ள ராகங்களில் பாட்டுகளோ அடுத்தடுத்து வராமலிருந்தால் கச்சேரி நன்ருகச் சோபிக்கும். பல அம்சங்களில் கவனத்தைக் கொடுத்தால் சிரமத்தைக் குறைத்துக் கச்சேரியின் மேன்மையை அதிகரிக்கலாம்.

ச்ருதி பேதம் என்று சொல்லப் படுவது புதிதான விஷயமல்ல. முன் காலங்களிலேயே அறிந்திருந்த விஷயம் தான். ஆனுல் அதைக் கையாளுவதில் மிக்க கவனம் வேண்டும். ராக ஆலாபனையில் ஒரு சாதுர்ய வேடிக்கையாக எப்போதாவது உபயோகிக்கலாமே அல்லது அதற்கு ஒரு தனி ஸ்தானம் கொடுக்கக் கூடாது. நமது ஸங்கீதத்தில் ஸ்வரம் எனப்படுவது ஒருக்லுப்தமான ஸ்தானமல்ல, ஒரே ஸ்வரம் பற்பல ராகங்களில் உபயோகப் படுத்தும் போது பல விதமாகத் தோன்றும். அசைவுகள், பல வித கமகங்கள், அதட்டல்கள், ஹ்ருஸ்வதீர்க்கப் பிரயோகங்கள் முதலியவைகளால் ஒரே ஸ்வரத்திற்குப் பல வித பாவங்களேற்படும். ஆகையால் ச்ருதி பேதம் செய்வதானுல் ஸ்வரங்களை மாற்றுமல் வேறொரு ராகத்தின் களையை வெளியாக்க முடியாது. சிற்சில ராகங்கள் இந்த ச்ருதி பேதத்திற்குக் கொஞ்சம் இடம் கொடுக்கலாம். அதிக கமக மில்லாத ராகங்களின் ஸ்வரங்களே வேறு ராகத்தில் வருவதாயிருந்தால் ச்ருதி பேதத்தால் பாவக்கேடு ஏற்படாது. சுமார ராக மோஹனமும் சுத்த ஸாவேரியும் ஒன்றிலிருந்து மற்றது ச்ருதி பேதத்தால் த்வனிக்கலாம். அதேமாதிரி ஹிந்தோளமும் உதயரவி சந்திரிகாவும் சம்பந்தப்பட்டவை. இந்த மாதிரி ராகங்களில் கூடக் கொஞ்சமாக அந்த வித்தையைக் காட்டலாமே அல்லது அதிக நேரம் ச்ருதி பேதம் செய்யக் கூடாது. கரகரப்பிரியாவில் ச்ருதி பேதம் செய்து ஹரிகாம்போதியைக் காட்டுவதோ, ஸிம்மேந்திர மத்யமத்திலிருந்து மாயா மாளவ கௌளையைக் காட்டுவதோ அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை.

காலக்கிரமத்தில் மனித சமூகத்தில் அநேக மாறுதல்களுண்டாகின்றன. அதற்குத் தக்கவாறு நோக்கங்களும்

m211,n41 KV
198043

உங்கள் (தேக) ஆரோக்கியத்தை

பருகுங்கள்

விளையாட்டுக் காரருக்கும் சரி, பலஹீனருக்கும்சரி, போர்ன்-வீடா அதிக நன்மையும் அதிக புஷ்டியும் அளிக்கும் அதனால் அதிகசக்தியும்பெறுகின்றனர். குழந்தைகள் அதன்சாக்லேட் வாசனையை விரும்புகின்றனர். காலையிலும் மாலையிலும் ஒரு கிளாஸ் சூடான அல்லது குளிர்ந்த பாலில் இரண்டு தேக் கரண்டியளவு கலந்து பருகவும்.

Cadbury

THE TREE OF HEALTH

- ஆரோக்கிய விருக்ஷம் -

புதியதாக குறைக்கப்பட்ட விலையைப் பற்றி கேட்கவும்

காட்பரீஸ்

போர்ன்-வீடா

கால்ஷியமும், ஏ & டி விடமின்களும் நிறைந்தது

CFY-I TAM

காட்பரி-ப்ரை (இந்தியா) லிமிடெட்

தபால் பெட்டி நெ. 1417 பம்பாய் தபால் பெட்டி நெ 251 கல்கத்தா தபால் பெட்டி நெ. 1725 மதராஸ்

மூளைக்கு
குளிர்ச்சியையும்
கேசத்துக்கு
வளர்ச்சியையும்
கொடுப்பதில்
நிகரற்றவை
டி.எஸ்.ஆர்.
கோகுல் ஹேர் ஆயில்
சந்தனாதி தைலம்
அரைக்கீரைவிதை தைலம்
கோகுல் அம்பர்வத்தி
டி.எஸ்.ஆர்.& கோ,
கும்பகோணம்.
இணையிலா வாசனை
தயாரிப்புகளுக்கு
டி.எஸ்.ஆர்.
FAS-390.